மகாராஷ்டிரம், ஹரியாணா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் நடப்பாண்டு இறுதியில் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸில் அமைப்பு சார்ந்த விவகாரங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகள் மற்றும் பேரவைத் தேர்தல்களுக்கு தயாராவது குறித்து ஆலோசிக்க கட்சியின் பொதுச் செயலர்கள், மாநிலத் தலைவர்களின் கூட்டம் தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், 'அதானி பங்குச் சந்தை முறைகேடு புகார் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை, தேசிய அளவில் ஜாதிவாரி கணக்கெடுப்பு, பொருளாதாரம், அரசியல், சமூக நீதி தொடர்பான அரசமைப்புச் சட்ட விதிகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும். அதானி விவகாரத்தில் ஆகஸ்ட் 22-ஆம் தேதி நாடு தழுவிய போராட்டம் நடத்தப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



தில்லியில் காங்கிரஸ் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்க அக்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுடன் வந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி.

**கார்கே குற்றச்சாட்டு:** கூட்டத்துக்கு பின் எக்ஸ் வலைதளத்தில் கார்கே வெளியிட்ட பதிவில், 'நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி உயர்வும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குச் சென்றுவிட்டது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மத்திய அரசால் வஞ்சிக்கப்பட்டுள்ளனர்.

செபி மற்றும் அதானி இடையிலான 'தொடர்பு' குறித்து அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. பங்குச் சந்தையில் சிறு முதலீட்டாளர்களின் பணத்தை ஆபத்துக்கு உள்ளாக்க அனுமதிக்க முடியாது. எனவே, செபி தலைவர் பதவி விலக மோடி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் அளிக்க வலியுறுத்தி, காங்கிரஸ் தொடர்ந்து போராடும். அக்னிபத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கார்கே குறிப்பிட்டுள்ளார்.

**பேரவைத் தேர்தல் ஆலோசனை:** பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் மாநில நிர்வாகிகளுடன் கே.சி.வேணுகோபால் தனியாக ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இதில், தேர்தலுக்கான கட்சியின் முன்னேற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

# டிஎன்பிஎஸ்சி தலைவராக எஸ்.கே.பிரபாகர் நியமனம்

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, ஆக. 13:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (டிஎன்பிஎஸ்சி) தலைவராக வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய பொறுப்பு தலைவரான சி.முனியநாதன், பதவியிலிருந்து வரும் வெள்ளிக்கிழமையுடன் விடைபெறவுள்ள நிலையில், புதிய தலைவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மனிதவள மேலாண்மைத் துறைச் செயலர் கே.நந்தகுமார் வெளியிட்ட உத்தரவு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக எஸ்.கே.பிரபாகரை நியமிக்க ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் தெரிவித்துள்ளார். அவர் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் அல்லது 62 வயதை எட்டும் வரை என எது முதலில் வருகிறதோ அதுவரையிலும் அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் பதவியை எஸ்.கே.பிரபாகர் வகிப்பார் என்று உத்தரவில் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

**அருப்புக்கோட்டை பூர்விகம்:** அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.கே.பிரபாகர், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்விகமாகக் கொண்டவர். 1989-ஆம் ஆண்டு தமிழகப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியாக தேர்ச்சி பெற்ற அவர், சேலம் கூடுதல் ஆட்சியராகவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலராகவும் பொறுப்பு வகித்தார். திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், சுகாதாரத் துறை கூடுதல் செயலர், உயர் கல்வி, மீன்வளத் துறைகளின் இயக்குநர், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், எரிசக்தித் துறைச் செயலர் ஆகிய பொறுப்புகளை தனது பதவிக் காலத்தில் வகித்தார்.



எஸ்.கே.பிரபாகர்

**கருணாநிதியின் செயலர்:** முன்னாள் முதல்வர் கருணாநிதியின் செயலராகவும் பொறுப்பு வகித்தார். 2008-ஆம் ஆண்டு முதல் ஆட்சி முடிவடையும் வரையிலும் முதல்வரின் செயலராக இருந்தார்.

இதைத் தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர், வணிகவரி மற்றும் பதிவு, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள், உள்துறைகளின் முதன்மைச் செயலராகவும், வருவாய் நிர்வாக ஆணையராகவும் பொறுப்புகள் வகித்தார்.

ஐஏஎஸ் பதவியில் இருந்து ஓய்வுபெற 2 ஆண்டுகளுக்கும் குறைவாக உள்ள நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக எஸ்.கே.பிரபாகர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 62 வயதை எட்டும் வரையில் அவர் பொறுப்பு வகிப்பார் என்பதால் மூன்று ஆண்டுகள் வரை அதாவது 2027-ஆம் ஆண்டு வரை தலைவர் பதவியில் நீடிப்பார்.

**சி.முனியநாதன் ஓய்வு:** அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக இருந்த சி.முனியநாதன், பொறுப்பு தலைவராக 2022-ஆம் ஆண்டு ஜூன் 10-ஆம் தேதி நியமிக்கப்பட்டார். அவர் 62 வயதை எட்டும் நிலையில், வரும் வெள்ளிக்கிழமையுடன் பொறுப்பில் இருந்து விடைபெறவுள்ளார். இதைத் தொடர்ந்து, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் புதிய தலைவராக எஸ்.கே.பிரபாகர் பொறுப்பேற்கவுள்ளார்.

# பெண் மருத்துவர் கொலை வழக்கு சிபிஐ-க்கு மாற்றம்

## கொல்கத்தா உயர்நீதிமன்றம்

**புது தில்லி, ஆக.13:** மேற்கு வங்கத்தில் முதுநிலை பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் கொலை வழக்கை சிபிஐ-க்கு மாற்றி கொல்கத்தா உயர்நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

இதையடுத்து, கொல்கத்தாவில் சிபிஐ அதிகாரிகள் புதன்கிழமை முதல் விசாரணையைத் தொடங்க உள்ளனர்.

'மேற்கு வங்க காவல் துறையினர் இந்த வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளை 7 நாள்களுக்குள் கண்டுபிடிக்காவிட்டால், வழக்கு விசாரணை சிபிஐ வசம் ஒப்படைக்கப்படும்' என்று முதல்வர் மம்தா பானர்ஜி கூறியிருந்த நிலையில், உயர்நீதிமன்றம் வழக்கை சிபிஐ வசம் ஒப்படைத்துள்ளது.

கொல்கத்தாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் கடந்த வாரம் முதுநிலை பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்டார். சஞ்சய் ராய் என்பவரைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

இதைக் கண்டித்து மருத்துவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் நாடு முழுவதும் ஆரம்பநிலை மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.



நீதிமன்ற கண்காணிப்புடன் விசாரணை கோரி உயிரிழந்த பெண் மருத்துவரின் பெற்றோரும், சிபிஐ விசாரணை கோரி பொதுநல மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் மீது கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம் தலைமையிலான அமர்வு செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்தியது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் கொலை வழக்கை கொலை வழக்காக பதிவு செய்யாமல் இயற்கையாக ஏற்பட்ட மரணமல்ல என்ற பிரிவின்கீழ் வழக்குப்பதிவு செய்தது ஏன்? மேலும், மருத்துவக் கல்லூரியின் வளாகத்தில் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் கல்லூரியின் கண்காணிப்பாளர் அல்லது முதல்வர் முறையாக புகார் அளித்திருக்க வேண்டும்.

எனவே, இந்தவழக்குசிபிஐ-க்கு மாற்றப்படுகிறது. மருத்துவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு புனிதமான பணியை மீண்டும் தொடர வேண்டும் என்றனர்.

### வேலை நிறுத்தம் வாபஸ்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த உறைவிட மருத்துவர்கள் சங்க சம்மேளனத்தின் (எஃப்ஓஆர்டிஏ) குழுவினர், தில்லியில் மத்திய சுகாதார துறை அமைச்சர் ஜெ.பி.நட்டாவை செவ்வாய்க்கிழமை இரவு சந்தித்து ஆலோசனை நடத்தினர். பின்னர், நோயாளிகள் நலன் கருதி வேலைநிறுத்தத்தை கைவிட்டு புதன்கிழமை காலை பணிக்குத் திரும்புவதாக அந்தக் குழுவினர் தெரிவித்தனர்.

# தங்கம் பவுனுக்கு ரூ.760 உயர்வு

**சென்னை, ஆக.13:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை செவ்வாய்க்கிழமை (ஆக. 13) பவுனுக்கு ரூ.760 உயர்ந்து ரூ. 52,520-க்கு விற்பனையானது



கடந்த சில நாள்களாக ஆபரணத் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்தை சந்தித்து வருகிறது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (ஆக.13) சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.760 உயர்ந்து ரூ. 52,520-க்கும், கிராமுக்கு ரூ. 95 உயர்ந்து ரூ. 6,565-க்கும் விற்பனை ஆனது.

மத்திய பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான சுங்கவரி குறைப்பு காரணமாக அதன் விலை குறைந்து வந்த நிலையில், கடந்த சில நாள்களாக சர்வதேச காரணிகளால் விலை உயரத் தொடங்கியுள்ளது. அதாவது, கடந்த ஆக.7-ஆம் தேதி ரூ.50,640-க்கு விற்பனையான ஒரு பவுன் ஆபரணத் தங்கம் கடந்த 6 நாள்களில் ரூ.1,880 உயர்ந்து, செவ்வாய்க்கிழமை ரூ.52,520-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

# ஆக.16-இல் விண்ணில் பாய்கிறது எஸ்எஸ்எல்வி டி-3


**சென்னை, ஆக.13:** புவி கண்காணிப்புக்கான இஓஎஸ்-08 செயற்கைக்கோளுடன் எஸ்எஸ்எல்வி டி-3 ராக்கெட் ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வரும் 16-ஆம் தேதி விண்ணில் ஏவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அந்த ராக்கெட் திட்டம் சுதந்திர தினத்தில் (ஆக.15) செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது நிர்வாகக் காரணங்களுக்காக, அந்தத் திட்டம் ஒரு நாள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அன்றைய தினம் (ஆக.16) காலை 9.17 மணிக்கு எஸ்எஸ்எல்வி டி-3 ராக்கெட் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இதற்கான இறுதிக்கட்ட முன்னேற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சார்பில் கார்டோசாட், ஸ்காட்சாட், ரிசாட் உள்ளிட்ட பல்வேறு செயற்கைக்கோள்கள் தொலையுணர்வு பயன்பாட்டுக்காக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் புவி கண்காணிப்பு செயல்பாடுகளுக்காக அதிநவீன இஓஎஸ்-08 எனும் செயற்கைக்கோளை இஸ்ரோ தற்போது வடிவமைத்துள்ளது.




விண்ணில் ஏவப்படவுள்ள புவி கண்காணிப்புக்கான இஓஎஸ் –8 செயற்கைக்கோளுடன் எஸ்எஸ்எல்வி – டி3 ராக்கெட்.

அந்த செயற்கைக்கோள் 176 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுள்காலம் ஓராண்டாகும். இது தரையிலிருந்து சுமார் 475 கி.மீ. தொலைவில் உள்ள புவி தாழ் வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

இதில் எலக்ட்ரோ ஆப்டிகல் இன்ப்ராரெட் பேலோடு (EOIR), குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம்-ரிப்ளெக்டோமெட்ரி பேலோடு (GNSS-R) மற்றும் சிக் யுவி டோசிமீட்டர் (SiC UV Dosimeter) ஆகிய 3 ஆய்வு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த ஆய்வு சாதனங்கள் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்ட விண்கலத்திலும் இடம் பெறவுள்ளன.

மேலும், எதிர்கால தொழில்நுட்பத் தேவைக்கான ஆய்வுகளை இந்தச் சாதனங்கள் மேற்கொள்ளவுள்ளன என்றும் இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஆன்மிக சிந்தனை

மனம் அலையாதிருக்கவும் மெய்பொருளின் மீது சிந்தை நிலைத்து நிற்கவும் பாசத்தை ஒழுங்காக்கவும் அவாவை ஒடுக்க வேண்டும். புலன்களைக் காக்கவேண்டும். ஜபமும் பிரார்த்தனையும் செய்ய வேண்டும்.

–ஆதிசங்கரர்

கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் தேவன் விடுவிப்பார்.

– சங்கீதம் 72:12.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு உண்மையான இறை நம்பிக்கையாளர் மற்றவர்களை குறைகூறுபவராகவோ சபிப்பவராகவோ மானக்கேடான செயல்களை செய்பவராகவோ அசிங்கமானவற்றைப் பேசுபவராகவோ இருக்கமாட்டார்.

(நூல் – திர்மிதீ)

# இன்றும் நாளையும்

**புதன்கிழமை**
(14–8–2024)
குரோதி ஆண்டு, ஆடி–29
பிறை: வளர்பிறை

| | |
|---|---|
| திதி | நவமி காலை 7.00 வரை பிறகு தசமி. |
| நட்சத்திரம் | அனுஷம் காலை 9.47 வரை பிறகு கேட்டை. |
| யோகம் | சித்தயோகம் |
| ராகுகாலம் | நண்பகல் 12.00 - 1.30 மணி. |
| எமகண்டம் | காலை 7.30 - 9.00 மணி |
| சூலம் | வடக்கு |
| நல்ல நேரம் | காலை 6 - 7 மணி. மாலை 4 - 5 மணி. |

**இன்றைய விசேஷம்:** திருப்பதி ஸ்ரீ ஏழுமலையப்பன் சகஸ்ர கலசாபி ஷேகம். இராமேஸ்வரம் சுவாமி, அம்பாள் இருவரும் தங்கக் கேடயச் சப்பரத்தில் பவனி. திருவல்லிக் கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ நரசிம்ம மூலவருக்கு திருமஞ்சனம். இருக்கண்குடி ஸ்ரீ மாரியம்மன் புறப்பாடு. கோட்புலி நாயனார் குருபூஜை. மதுராந்தகம் ஏரி காத்த ஸ்ரீ கோதண்டராம சுவாமி சிறப்பு திருமஞ்சனம். பத்ராசலம் ஸ்ரீ ராம பிரான் புறப்பாடு. வேதாரண்யம் ஸ்ரீ சிவபெருமான் பவனி. ஸ்ரீரங்கம் ஸ்ரீ நம்பெருமாள் புறப்பாடு. ஸ்ரீ வைகுண் டம் ஸ்ரீ வைகுண்டபதி புறப்பாடு.

| | |
|---|---|
| மேஷம் | நட்பு |
| ரிஷபம் | விவேகம் |
| மிதுனம் | பொறுமை |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | வெற்றி |
| கன்னி | நலம் |
| துலாம் | அமைதி |
| விருச்சிகம் | ஜெயம் |
| தனுசு | யோகம் |
| மகரம் | சாந்தம் |
| கும்பம் | வரவு |
| மீனம் | மாற்றம் |

**வியாழக்கிழமை**
(15–8–2024)
குரோதி ஆண்டு, ஆடி–30
பிறை: வளர்பிறை

| | |
|---|---|
| திதி | தசமி காலை 7.04 வரை பிறகு ஏகாதசி. |
| நட்சத்திரம் | கேட்டை காலை 10.30 வரை பிறகு மூலம். |
| யோகம் | சித்தயோகம் |
| ராகுகாலம் | நண்பகல் 1.30- 3.00 மணி. |
| எமகண்டம் | காலை 6.00 - 7.30 மணி |
| சூலம் | தெற்கு |
| நல்ல நேரம் | காலை 9 - 10 மணி. மாலை 4 - 5 மணி. |

**இன்றைய விசேஷம்:** சுவாமிமலை ஸ்ரீ முருகப் பெருமான் தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். இருக் கண்குடி ஸ்ரீ மாரியம்மன் புறப்பாடு. குறுக்குத்துறை ஸ்ரீ முருகப் பெருமான் பவனி. திருப்பதி ஸ்ரீ ஏழுமலையப்பன் புஷ்பாங்கி சேவை. ஆலங்குடி ஸ்ரீ குருபகவான் கொண்டைக்கடலைச் சாற்று வைபவம். திருவல்லிக்கேணி ஸ்ரீ ராகவேந்திர சுவாமி காலை சிறப்பு குருவார திருமஞ்சன சேவை. தக்கோ லம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சிறப்பு அபி ஷேகம், அலங்காரம் வழிபாடு. திரு வல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெரு மாள் கோவில் ஸ்ரீ ராமர் மூலவருக்குத் திருமஞ்சன சேவை.

| | |
|---|---|
| மேஷம் | தாமதம் |
| ரிஷபம் | ஆதாயம் |
| மிதுனம் | சிந்தனை |
| கடகம் | உழைப்பு |
| சிம்மம் | உதவி |
| கன்னி | ஆசை |
| துலாம் | பயணம் |
| விருச்சிகம் | விவேகம் |
| தனுசு | இன்பம் |
| மகரம் | சாதனை |
| கும்பம் | விருத்தி |
| மீனம் | பொறுப்பு |

# வருவாய், கல்வித் துறை திட்டங்கள்

## மேயர் பிரியா தொடங்கி வைத்தார்



சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்த வருவாய்த் துறை, கல்வித் துறை சார்ந்த திட்டங்களை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த மேயர் ஆர்.பிரியா. உடன் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர்.

**சென்னை, ஆக.13:** சென்னை மாநகராட்சியின் நிதிநிலைஅறிக்கையில் தெரிவித்த வருவாய்த் துறை, கல்வித் துறை சார்ந்த திட்டங்களை செவ்வாய்க்கிழமை மேயர் பிரியா தொடங்கிவைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடந்த 2023-24 மற்றும் 2024-25 ஆம் நிகழாண்டு நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, வருவாய்த் துறையில் வழங்கப்படும் புதிய மறுமதிப்பீடு, சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம், தொழில் உரிமம் அறிவிப்பு ஆகிய ஆணைகளின் உண்மைத்தன்மையை கண்டறிவதற்கான விரைவுத் தகவல் குடியீட்டையும் (கியூ ஆர் கோடு), இதனைப் பயனாளர் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து அறிவிப்பு நகல் எடுப்பதற்கான பயன்பாட்டையும், சமூகநலக் கூடங்களை இணையவழி மூலம் முன்பதிவு செய்தல் செயல்பாட்டையும் மக்களின் பயன்பாட்டுக்காக மேயர் பிரியா தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை பள்ளி தேசிய மாணவர் படை (என்சிசி) மாணவ, மாணவியரில் எம்.எச்.சாலை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 50 மாணவிகள், சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவிகள் மற்றும் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவர்கள், பந்தர் கார்டன் சென்னை மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 50 மாணவர்கள், எம்.ஜி.ஆர். நகர்-சென்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவர்கள் என மொத்தம் 400 தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் மாணவர்களுக்கு ரூ.11,82,300 மதிப்பிலான சீருடைகளை மேயர் பிரியா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் ஜெ. குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்.ந.இராமலிங்கம், கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) ஆர்.லலிதா,இணை ஆணையர் (கல்வி) ஜெ. விஜயா ராணி, நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு மற்றும் நிதி), மற்றும் வருவாய்த்துறை, கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# படித்த இளைஞர்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே அரசின் நோக்கம்

## அமைச்சர் டிஆர்பி ராஜா



**சென்னை, ஆக.13:** படித்த இளைஞர்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே தமிழக அரசின் நோக்கமாக உள்ளதாக மாநில தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) சார்பில் தமிழகத்தில் தொழில்துறையின் கீழ் குறுந்தொழில் முனைவோரை வலுப்படுத்துவது தொடர்பான கருத்தரங்கம் சென்னை கிண்டியிலுள்ள தனியார் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் ஸ்ரீவத்ஸ் ராம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிஐஐயின் 'புதிய பயணம் வளர்ச்சியை நோக்கி' எனும் திட்டத்தை தொடங்கிவைத்துப் பேசியதாவது:

**கிராமங்களின் வளர்ச்சி:** தமிழகத்தில் உள்ள படித்த இளைஞர்களை தொழில் முதலீட்டாளர்களாகவும், தொழில் முனைவோராகவும் மாற்றுவதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 8 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குறுந்தொழில் முனைவோர்கள் பயனடைவார்கள். தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் என்ற அளவில் வளர்ச்சிக்கு கொண்டு செல்ல, கிராமங்களில் பொருளாதாரம் வளர்ச்சி அடையவேண்டும்.

இதனால், கிராமப்புறங்களில் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கில், மானியங்களும் அதிகளவில் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அப்பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புகளும் உருவாகும். முக்கியமாக படித்த இளைஞர்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே அரசின் நோக்கமாக உள்ளது.

**ரூ.45,000 கோடி தொழில் முதலீடுகள்:** தமிழகத்துக்கு ரூ.45,000 கோடிக்கு புதிய தொழில் முதலீடுகள் விரைவில் கிடைக்கும். இந்த முதலீடுகளின் மூலம் 25,000 உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். முக்கியமாக உணவு, மின்னணுவியல், புதுப்பிக்கதக்க ஆற்றல் போன்ற துறைகளில் அதிகளவில் முதலீடு செய்யப்படவுள்ளன.

மத்திய அரசின் வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கிய பயணத்துக்கு, திராவிட மாடலின் வளர்ச்சியும் மிக முக்கியமாக உள்ளது. தமிழக தொழில்முனைவோரால் உருவாக்கப்படும் பொருள்கள் இந்தியாவிலேயே தரம் மிக்கதாக உள்ளன. நமது தொழில் போட்டி மாநிலங்களுக்கு இடையேயானது அல்ல; நாடுகளுக்கு இடையேயானதாகும். அதை நோக்கியே நமது பயணம் உள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் அர்ச்சனா பட்நாயக், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டலத் தலைவர் ஆர்.நந்தினி, பொது இயக்குநர் சந்திரஜித், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையத்தின் தலைவர் ஆர்.தினேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# இந்தியாவின் கல்வி ஆற்றல் கேந்திரம் தமிழ்நாடு: முதல்வர் பெருமிதம்

**சென்னை, ஆக. 13:** இந்தியாவின் கல்வி ஆற்றல் கேந்திரமாக தமிழ்நாடு தொடர்ந்து மிளிர்வதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசைப் பட்டியலை சுட்டிக்காட்டி 'எக்ஸ்' தளத்தில் அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு:

தேசிய தரவரிசைப் பட்டியலில் அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்களுடன், நமது மாநிலம் மற்றவர்களை விட மிகவும் முன்னோக்கி நிற்கிறது. இது தரமான கல்விக்கான அளவுகோல் என்பதைக் காட்டுகிறது. இந்தியாவின் கல்வி ஆற்றல் கேந்திரமாக தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது.

நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முன்னணியில் இருக்கும் திராவிட மாடலுக்கு இது ஒரு பெருமையான தருணமாகும். நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முத்தாய்ப்பான திட்டங்களின் மூலம் நமது மாணவர்கள் உயர்கல்வியில் மேலும் புதிய உச்சங்களைத் தொடுவார்கள் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

# மாநகராட்சி உதவி ஆணையர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு பிரிவு போலீஸார் சோதனை

**சென்னை,ஆக.13:** சென்னை செனாய் நகரில் உள்ள மாநகராட்சி உதவி ஆணையர் அலுவலகத்தில் ஊழல் தடுப்பு பிரிவு போலீஸார் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை செய்தனர்.

சென்னை செனாய்நகர் கஜபதி தெருவில் உள்ள சென்னை மாநகராட்சியின் 101 கோட்ட உதவி ஆணையர் அலுவலகத்தில் சில அதிகாரிகள் கட்டட அனுமதி சாலையை வெட்டுவதற்கு அனுமதி போன்றவற்றுக்கு லஞ்சம் வாங்குவதாக ஊழல் தடுப்பு பிரிவு போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

அத் தகவலின் அடிப்படையில் ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் வள்ளிநாயகம் தலைமையில் அப் பிரிவு போலீஸார், அந்த அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை செய்தனர்.

அப்போது அங்கு கணக்கில் வராத ரூ.13 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர். மேலும் இது தொடர்பாக அங்குள்ள அதிகாரிகளிடம், விசாரணை செய்தனர்.

# மூச்சுத்திணறல் ஏற்பட்டு அம்பத்தூர் காவல் உதவி ஆய்வாளர் உயிரிழப்பு



**ஆவடி, ஆக. 13:** ஆவடி அருகே மூச்சுத்திணறல் ஏற்பட்டு, காவல் உதவி ஆய்வாளர் திங்கள்கிழமை உயிரிழந்தார்.

ஆவடி அருகே திருமுல்லைவாயல், நாகம்மை நகரைச் சேர்ந்தவர் சரவணன் (51). இவர் அம்பத்தூர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார். இவரது மனைவி மாலா. தம்பதிக்கு மகள் நிஷா, மகன் ஜீவா ஆகியோர் உள்ளனர்.

இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு சரவணன் பணி முடிந்து வீட்டுக்கு திரும்பினார். பின்னர் அவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து, அவரை உறவினர்கள் மீட்டு, அம்பத்தூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், சரவணன் வழியிலேயே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில், உதவி ஆய்வாளர் சரவணன் உடலுக்கு செங்குன்றம் காவல் துணை ஆணையர் பாலகிருஷ்ணன், உதவி ஆணையர் கிரி, ஆய்வாளர்கள் டெல்லிபாபு, கிருஷ்ணகுமார், காவலர்கள், பொதுமக்கள் செவ்வாய்க்கிழமை மலர் வளையம் வைத்து, அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்து, திருமுல்லைவாயல், சோழம்பேட்டில் உள்ள எரிவாயு தகன மேடையில் உதவி ஆய்வாளர் சரவணனின் உடல் காவல் துறை மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க மாலை தகனம் செய்யப்பட்டது.

# திருமாவளவன் ஆர்ப்பாட்டம்

**சென்னை, ஆக. 13:** பட்டியலின சமூகத்தின் இடஒதுக்கீட்டு உரிமையை நசுக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்துள்ளதாகக் கூறி, விசிக தலைவர் தொல். திருமாவளவன் தலைமையில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பட்டியலின சமூகத்தினருக்கு மாநில அரசே உள் ஒதுக்கீடு வழங்கலாம், க்ரிமிலேயர் என்னும் பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்காமல் இருக்கலாம் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு அரசமைப்பு சட்டத்துக்கே எதிரானது என ஆர்ப்பாட்டத்தின்போது திருமாவளவன் குற்றம்சாட்டினார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இடஒதுக்கீட்டு முறையை மத்திய பாஜக அரசு நசுக்கக் கூடாது, ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும், மக்கள் தொகை அடிப்படையில் பட்டியலின சமூகத்துக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும், பட்டியலின மக்களை பல்வேறு குழுக்களாக பிரித்து, அம் மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கும் முயற்சியையும் கைவிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் முழக்கங்கள் எழுப்பினர். மூத்த நிர்வாகிகள் ரவிக்குமார், வன்னி அரசு, சிந்தனைச் செல்வன் உள்பட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# இன்றைய நிகழ்ச்சிகள்

**தேசப் பிரிவினை வன்முறைகள் தடுப்பு தினம்:** ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்பு, ஆராய்ச்சி பூங்கா அரங்கம், ஐஐடி வளாகம், சென்னை, மாலை 4.30.

**தேசப் பிரிவினை வன்முறைகள் தடுப்பு தின புகைப்பட கண்காட்சி:** ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்பு, பாரதியார் அரங்கம் அருகில், ஆளுநர் மாளிகை, காலை 10.30.

**கலைஞர் குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம்:** அமைச்சர் இ.பெரியசாமி பங்கேற்பு, கூட்டரங்கம், இரண்டாவது தளம், தலைமைச் செயலகம், சென்னை, நண்பகல் 12.

**'இல்லந்தோறும் மூவர்ணக் கொடி' பேச்சுப் போட்டி:** கருத்தரங்க அறை, டி.ஜி.வைணவ கல்லூரி, காலை 9.15.

# கருணாநிதி பிறந்த நாள் ஜூன் 3-ஆம் தேதி செம்மொழி தினமாகக் கொண்டாடப்படும்

## அமைச்சர் மு.பெ. சாமிநாதன்



**சென்னை, ஆக.13:** முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த தினமான ஜூன் 3 -ஆம் தேதி செம்மொழி தினமாகக் கொண்டாடப்படும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கூறினார்.

சென்னை வளர்ச்சிக்கழகம், பன்னாட்டுத் தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம், அண்ணா பல்கலை.யின் பொறியியல் தொழில்நுட்பத் தமிழ்வளர்ச்சி மையம் ஆகியவை சார்பில் இரண்டாம் உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை தொடங்கியது.

இதன் நிறைவு விழா செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு பேசியதாவது:

முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த தினமான ஜூன் 3-ஆம் தேதி செம்மொழி தினமாகக் கொண்டாடப்படும். தமிழகத்தில் மொழி மோகம் அதிகரித்து வரும் நிலையில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மாணவர்கள் மத்தியில் தமிழை வளர்க்க பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ் மொழி மீதான அண்ணா, கருணாநிதி ஆகியோரின் கனவுகளை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.

மொழிப்போர் தியாகிகள் தினமான ஜன.25-ஆம் தேதி தமிழ் மொழி தியாகிகள் தினமாக இனி கடைப்பிடிக்கப்படும். தமிழ் மொழியை பாதுகாக்க மக்கள் இயக்கமாக சேர்ந்து பாடுபட வேண்டும் என்றார் அவர்.

**தமிழ் மொழியில் 15 மருத்துவ நூல்கள்:** இந்நிகழ்வில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது:

மருத்துவத் துறையில் தமிழ் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, இளநிலை மருத்துவப் படிப்பில் இதுவரை 15 நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. அடுத்த தமிழ்வளர்ச்சி மாநாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடத்துவது குறித்து முதல்வர் நல்ல முடிவு எடுப்பார் என்றார் அவர்.

**விருதுகள்:** இந்நிகழ்வில் 'வளர் தமிழ் மாமணி' விருது தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி, இவ் விருதுகள் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ் விமலா, கலைமாமணி முனைவர் வாசுகி கண்ணப்பன், முனைவர் முத்துராமலிங்க ஆண்டவர், கால்டுவெல் வேள் நம்பி, முனைவர் செல்வ ஜோதி இராமலிங்கம், ஜப்பான் டோக்கியோ தமிழ் சங்கம் கமலக் கண்ணன் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டது,

மேலும், தமிழ் இணைய கல்விக்கழகம், தமிழியல் பண்பாட்டுப் புலம், திருவனந்தபுரம் தமிழ் சங்கம் , கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கை, அமெரிக்க தமிழ் அகாதெமி, முத்தமிழ் சங்கம் -துபாய் ஆகிய நிறுவனங்களுக்கும் 'வளர் தமிழ்மணி' விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சென்னை வளர்ச்சிக் கழகம் பன்னாட்டுத் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் முனைவர் வி. ஆர். எஸ் சம்பத், வடசென்னை மக்களவை உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் வி. திருவள்ளுவன், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ரா. வேல்ராஜ், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ் பாஸ்கரன், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் சே.பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தாம்பரத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம்



மது விலக்கு போலீஸார் மற்றும் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி நாட்டு நலத் திட்ட மாணவ, மாணவிகள் இணைந்து தாம்பரம் பேருந்து நிலையத்தில் நடத்திய போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தில் தாம்பரம் மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் ஸ்ரீ தேவி, கல்லூரி இயக்குநர் கே.மாறன் உள்ளிட்டோர்.

**தாம்பரம், ஆக.13:** தாம்பரத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம் திங்கள்கிழமை நடைபெற்றது.

தாம்பரம் பேருந்து நிலையத்தில் மதுவிலக்கு பிரிவு போலீசாருடன் மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரிகளின் நாட்டுநலப்பணி திட்ட மாணவ, மாணவிகள் இணைந்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

பேருந்து நிலையத்தில் போதைப் பொருள்கள் மூலம் ஏற்படும் சமூக சீர்கேடுகள் குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி பேரணியில் பங்கேற்ற அவர்கள், போதையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களைப் பயணிகளுக்கு வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

தொடர்ந்து பொதுமக்கள், காவல்துறையினர், மாணவ, மாணவிகள் இணைந்து போதைப் பழக்கத்துக்கு எதிரான உறுதிமொழி ஏற்றனர்.

இந்நிகழ்வில் தாம்பரம் மதுவிலக்கு பிரிவு ஆய்வாளர் ஸ்ரீ தேவி, சாய்ராம் வணிக மேலாண் கல்லூரி இயக்குநர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆக.17-இல் அமெரிக்க உயர் கல்வி கண்காட்சி

**சென்னை, ஆக.13:** அமெரிக்க உயர்கல்வி குறித்த 'எஜுகேஷன் யுஎஸ்ஏ' கண்காட்சி சென்னை ஹில்டன் ஹோட்டலில் சனிக்கிழமை(ஆக.17) பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இது குறித்து இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் எரிக் கார்செட்டி கூறியது: இக்கண்காட்சியில் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், அமெரிக்காவில் உள்ள 80-க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கலாம்.

இதன் மூலம் அமெரிக்கா வழங்கும் கல்வி வாய்ப்புகள் குறித்து மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம். சேர்க்கைகள், உதவித்தொகைகள், வளாக வாழ்க்கை மற்றும் அமெரிக்காவில் கல்வி பெறுவது குறித்த பல தகவல்களை நேரடியாகப் பெறலாம். இந்த நிகழ்வில் பங்கேற்கும் அமெரிக்க உயர்கல்வி நிறுவனங்கள், அமெரிக்கா முழுவதும் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்புகளில் பல்வேறு கல்வித் திட்டங்களை வழங்குகின்றன. அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள், எஜுகேஷன் யுஎஸ்ஏ ஆலோசகர்கள் மற்றும் அமெரிக்க தூதரகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்கள், விசா விண்ணப்ப செயல்முறையைப் பற்றி அறிந்துகொள்ளவும், அமெரிக்காவில் கல்வி பெறுவது குறித்தும் வாழ்வது குறித்தும் இக்கண்காட்சியில் விளக்கப்படுகிறது.

இதில் கலந்து கொள்ள https://bit.ly/EdUSAFair24Emb என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு www.educationusa.in இணையதளத்தை பார்வையிடலாம் என்றார் அவர்.

## குறை கேட்பு முகாம்...



சென்னை வேப்பேரி காவல் ஆணையரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காவலர்கள் குறை கேட்பு முகாமில் சென்னை பெருநகர காவல் துறை தெற்கு மண்டலத்தில் பணியாற்றும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் குறைகளைக் கேட்டறிந்த சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண்.

# தேசிய தரவரிசைப் பட்டியல்: சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 10-ஆவது இடம்

**சென்னை, ஆக. 13:** தரமான கல்வியை அளிப்பதில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் கல்லூரிகளுக்கான தர வரிசைப் பட்டியல் சென்னை மருத்துவக் கல்லூரி 10-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சகம், ஆண்டுதோறும் சிறப்பாக செயல்படும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை பல பிரிவுகளின் கீழ் தரவரிசைப்படுத்தி பட்டியல் வெளியிடுகிறது. அதன்படி நிகழாண்டு தரவரிசைப் பட்டியலில் சென்னை மருத்துவக் கல்லூரி 10-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவ கல்லூரிகளில் முதலிடம் பெற்றுள்ளது.

இதற்கான சான்றிதழை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் செவ்வாய்க்கிழமை நேரில் காண்பித்து சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எ.தேரணிராஜன் வாழ்த்து பெற்றார். அப்போது, கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் கவிதா, சிறப்பு அலுவலர் டாக்டர் அன்புச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.



கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசையில் சென்னை மருத்துவக் கல்லூரி 10- ஆவது இடம் பிடித்ததற்கான சான்றிதழை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் செவ்வாய்க்கிழமை காண்பித்து வாழ்த்து பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் தேரணிராஜன். உடன், சென்னை மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் டாக்டர் கவிதா, சிறப்பு அலுவலர் டாக்டர் அன்புச்செல்வி.

இது குறித்து சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எ.தேரணிராஜன் கூறியதாவது:

தேசிய தரவரிசைப் பட்டியலைப் பொருத்தவரை கடந்த 4 ஆண்டுகளாக சென்னை மருத்துவக் கல்லூரி தொடர்ந்து முன்னேறி வருகிறது. 2021-ஆம் ஆண்டில் 16-ஆவது இடத்திலும், கடந்த 2022-இல் 12-ஆவது இடத்திலும், கடந்த ஆண்டில் 11-ஆவது இடத்திலும் இருந்த சென்னை மருத்துவக் கல்லூரி தற்போது மேலும் ஓரிடம் முன்னேறியுள்ளது. இது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கும் ஓர் உத்வேகத்தை அளிக்கும் என்றார் அவர்.

தென்னிந்தியாவில் முதன்முறையாக மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக கடந்த 1835-ஆம் ஆண்டு பிப்.13-ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளி தொடங்கப்பட்டது. அதன் பின்னர் படிப்படியாக அங்கு பட்டப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதனிடையே, சென்னைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் நீட்சியாக சென்னை மருத்துவப் பள்ளியை கல்லூரியாக மாற்ற விண்ணப்பிக்கப்பட்டது. அது ஏற்கப்பட்டு கடந்த 1850 அக்.1-ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளியானது சென்னை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது நினைவுகூரத்தக்கது.

# கூட்டு முயற்சியால் தரவரிசையில் தொடர்ந்து முதலிடம்: சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி பெருமிதம்

**சென்னை, ஆக. 13:** தேசிய அளவிலான சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் (என்ஐஆர்எஃப்) தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைப்பதற்கு, சென்னை ஐஐடி மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகம், மத்திய-மாநில அரசுகள் உள்ளிட்டோரின் கூட்டு முயற்சியே காரணம் என அதன் இயக்குநர் வி.காமகோடி கூறினார்.

மத்திய அரசு கடந்த திங்கள்கிழமை வெளியிட்ட தேசிய அளவிலான சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் சென்னை ஐஐடி ஒட்டுமொத்தபிரிவில்தொடர்ந்து 6-ஆவது ஆண்டாக முதலிடத்தையும், பொறியியல் பிரிவில் தொடர்ந்து 9-ஆவது ஆண்டாக முதலிடத்தையும் பிடித்தது.

இது குறித்து சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி சென்னையில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

என்ஐஆர்எஃப் தரவரிசையில் தொடர்ந்து முதலிடம் பெற்று வருவதற்கு பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், மத்திய - மாநில அரசுகள், ஆராய்ச்சி நிதி ஒதுக்கிய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைவரும் காரணம். இந்த அங்கீகாரம் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. கடும் போட்டிக்கு மத்தியில்தான் இந்த சாதனையை எட்டியுள்ளோம்.

இந்தியாவில் உள்ள ஒரு முன்னணி உயர்கல்வி நிறுவனம் என்ற வகையில் நம் நாட்டின் வளர்ச்சிக்கு கல்வி, ஆராய்ச்சியில் தொடர்ந்து பங்களிப்புகளை வழங்குவோம். இந்தியாவில் கிராமப்புறங்களில்தான் 75 சதவீத இளைஞர்கள் உள்ளனர். அவர்களுக்கு தரமான கல்வி கிடைப்பது அவசியம். அதற்கான பல்வேறு முயற்சிகளை சென்னை ஐஐடி மேற்கொண்டு வருகிறது. அனைவருக்கும் உயர்தர தொழில்நுட்ப கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இணையவழியில் பிஎஸ் டேட்டா சயின்ஸ், பிஎஸ் எலெக்ட்ரானிக் சிஸ்டம் படிப்புகளை வழங்கி வருகிறோம். டேட்டா சயின்ஸ் படிப்பில் மட்டும் 30,000 பேர் சேர்ந்துள்ளனர். அவர்களில், பொருளாதாரத்தில் பின்தங்கிய சுமார் 5,000 பேருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**அனைவருக்கும் ஐஐடி...** அனைத்து தரப்பு மாணவர்களுக்கும் ஐஐடி கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக நாட்டில் உள்ள அனைத்து என்ஐடி-க்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம். இதன்மூலம் ஒவ்வொரு என்ஐடியிலும் ஒவ்வொரு துறையிலும் சிறந்த 10 மாணவர்கள் தேர்வுசெய்யப்பட்டு அவர்கள் ஐஐடியில் ஓராண்டு படிக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த மாணவர்கள் ஐஐடியில் பி.ஹெச்டி. படிக்க முன்னுரிமை அளிக்கிறோம். பி.டெக். படிப்பில் இந்த ஆண்டு முதல்முறையாக சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலமாக 5 தேசிய சாம்பியன்கள் ஐஐடியில் சேர்ந்துள்ளனர். ஸ்டார்ட் அப் எனப்படும் புத்தாக்கத்தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் தொடங்கப்பட்டு வருகின்றன. ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் தொழில்முதலீடுகள் கொண்ட நிறுவனத்தை 'யூனிகார்ன்' என்று அழைப்பார்கள். அந்தவகையில் ஆண்டுக்கு 'ஒரு யூனிகார்ன்' நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்றார் அவர்.

**ஒருங்கிணைந்த பி.எட். படிப்பு தொடங்கப்படும்:** இது குறித்து ஐஐடி இயக்குநர் காமகோடி கூறுகையில், சிறந்த கணித ஆசிரியர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு டாடா சமூக அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து விரைவில் ஒருங்கிணைந்த பி.எஸ்.சி பி.எட். படிப்பை சென்னை ஐஐடியில் அறிமுகப்படுத்தவுள்ளோம். இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 4 ஆண்டு காலம் கொண்ட இந்த படிப்பில் பி.எஸ்சி. படிப்பு இணையவழியில் வழங்கப்படும். பி.எட். படிப்பு நேரடியாக படிக்கும் வகையில் இருக்கும். பி.எஸ்சி. படிப்பு கணிதம், கணினி அறிவியல் பாடங்களில் வழங்கப்படும் என்றார் அவர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் இயந்திரம்: விண்ணப்பிக்க அழைப்பு

**சென்னை, ஆக.13:** அரசின் இலவச தையல் இயந்திரம் பெற விரும்பும் மாற்றுத்திறனாளிகள் ஆக.19-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மிசித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் சென்னை எல்லைக்குள்பட்ட 18 முதல் 60 வயதுக்குள்பட்ட செவித்திறன், கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் 75 சதவீதத்துக்கும் மேல் பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றிய தாய்மார்கள் மற்றும் மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தையல் பயிற்சி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நேர்காணல் தேர்வு நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் யுடிஐடி அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மிதமான மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள், 75 சதவீதத்துக்கும் மேல் உள்ள மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளின் தாயாக இருத்தல் வேண்டும்.

மேலும், அதிகபட்ச வயது வரம்பு 18 முதல் 60 ஆகும். தையல் பயிற்சி பெற்றதற்கான சான்று பெற்றிருக்க வேண்டும்.

தகுதியுடைய தென் சென்னையை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் ஆக.19-ஆம் தேதிக்குள் இ-சேவை மையம் மூலம் https://www.tnesevai.tn.gov.in/Citizen/Registration.aspx எனும் இணைப்பில் தங்களது விவரங்களை பதிவேற்றம் செய்து பயனடையலாம் என தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

# மதுக்கடைகள் நாளை மூடல்

**சென்னை, ஆக.13:** சுதந்திர தினத்தன்று (வியாழக்கிழமை) மதுக்கடைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பு: சுதந்திர தினமான வியாழக்கிழமை (ஆக.15) சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், உரிமம் கொண்ட கிளப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும்.

எவ்விதத்திலும் குறிப்பிட்ட நாளன்று மதுபானம் விற்பனை செய்யக்கூடாது. இந்த உத்தரவை மீறி மதுபானம் விற்பனை செய்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் ஆட்சியர்.

# கிருஷ்ண ஜெயந்தி விழா

**சென்னை, ஆக. 13:** சென்னை சோழிங்கநல்லூர் கிழக்கு கடற்கரை சாலை அக்கரையில் உள்ள ஹரே ராமா ஹரே கிருஷ்ணா (இஸ்கான்) கோயிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி விழா ஆக.26, 27 ஆகிய இரு நாள்கள் நடைபெறவுள்ளதாக கோயில் நிர்வாகப் பிரதிநிதி ரங்க கிருஷ்ண தாஸ் தெரிவித்துள்ளார்.


**TAMILNADU TEXTILE CORPORATION LIMITED**
(A Govt. of Tamilnadu Enterprises)
201 B, Alagesan Road, Saibaba Colony, Coimbatore - 641011, Ph: 2450385
TENDER NOTICE

Tenders through electronic mode in Govt. Web portal **https://tntenders.gov.in** are invited only from the Manufacturers or Authorised Dealers for suply of high Speed Rapier LOOMS.

| Type of Loan | Required Quantity in nos. | Required Earnest Money Deposit (in Rs.) | Tender Period | Date, time and place of opening of tender |
|---|---|---|---|---|
| RAPIER LOOMS (Width 230 cms) | 2 | 75,000.00 | From 16.08.2024 to 02.09.2024 - 4.00 PM | 5.00 P.M. on 02.09.2024 at the office of TNTC Coimbatore |

| | |
|---|---|
| Eligibility | Should be a Manufacturer or Authorised dealer of High speed Repier looms with a minimum experience of 3 years |
| Minimum supply capacity | 25 no. of Looms per year |
| Minimum Business Turnover | Average annual Turnover of not less than Rs.20.00 crore in the last 3 financial year. |
| **Common Conditions** | |
| Supply & Commissionning Schedule | 180 days from the date of entering into agreement |
| EMD | EMD amount should be remitted through online in Govt. web portal |
| Cost of Tender Document | Free of cost. |

The tender schedule can also be obtained from the web portal **https://tntenders.gov.in** at free of cost and submit the same thorugh on online.

DIPR/2968/TENDER/2024 MANAGING DIRECTOR



**பஞ்சாப் & சிந்து வங்கி**
(A Govt. of India Undertaking)

**கட்டிடக்கலை நிபுணர்கள்/கட்டிடக்கலை நிறுவனங்களை பட்டியலில் சேர்ப்பதற்கான அறிவிப்பு**

சென்னை மண்டலத்தின் கீழ் உள்ள கிளைகளுக்கு கட்டிடக்கலை சேவைகளை செய்வதற்காக ஆர்கிடெக்ட் / ஆர்கிடெக்சுரல் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தகுதியும் ஆர்வமும் உள்ள கட்டிடக் கலை நிபுணர்கள் வங்கியின் www.psbindia.com என்ற இணையதளத்தில் இருந்து விண்ணப்ப படிவத்தைப் பதிவிறக்கம் செய்யலாம்.

மண்டல மேலாளர், சென்னை



**தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை**
கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை (இரு உறை முறை)
**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்/ 6 / VLR- CLE / 2024 – 2025 / Dated.12.08.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு 04.09.2024 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிகாண் படிவம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்.1) மட்டும் 04.09.2024 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும். https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 16.08.2024 முதல் 04.09.2024 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், பெருமுகையில் 250 படுக்கை வசதிகளுடன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விடுதிக் கட்டடம் கட்டும் பணி. | 4213.00 | ரூ.21,20,000/- | 12 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு IA

முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிக்கு பொருந்தும். முன் தகுதி பெறும் ஒப்பந்தக்காரர்களுக்கு விலை விவர ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் தனியே தெரிவிக்கப்படும்.

இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், வேலூர் - 1.

செ.ம.தொ.இ./ 2983 /ஒப்பந்தப்புள்ளி/2024



**பொது அறிவிப்பு**

இந்த அறிவிப்பு மூலம் பொது மக்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, வலிமையான மக்கள் கட்சி **(VALIMAYANA MAKKAL KATCHI)** என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை பதிவு செய்ய முன்மொழியப் பட்டுள்ளது. கட்சியின் அலுவலகம், 70/1, பெரிய ஈச்சங்குழி, மணலி நியூடவுன், சென்னை– 600103, தமிழ்நாடு. என்ற முகவரியில் அமைந்துள்ளது .

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் – 1951, பிரிவு 29A ன் கீழ் கட்சியைப் பதிவு செய்வதற்காக புதுடெல்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்துள்ளோம்.

கட்சியின் நிர்வாகிகள் பெயர் மற்றும் முகவரி வருமாறு: **தலைவர் : N. சத்திய மூர்த்தி**, S/o. நரசிங்கப்பெருமாள், எண். 10–2–A, அரங்கநத்தம்பேட்டை, நேரு, தன்பகம், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம்– 639004, தமிழ்நாடு

**பொதுச் செயலாளர்: M.ஸ்ரீனிவாசன்,** S/o. மாரிமுத்து, எண். 34, வரதராஜபுரம், GNG தெரு, அம்பத்தூர், சென்னை– 600053, தமிழ்நாடு

**பொருளாளர்: T. கோவிந்தராஜ்,** S/o. துலுக்காணம், எண். 70/70, பெரியார் ஈச்சக்குழி, மணலி புதுநகர், சென்னை– 600103, தமிழ்நாடு

**வலிமையான மக்கள் கட்சி** என்ற பெயரில் கட்சியைப் பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் அதற்கான காரணங்களை, செயலாளர் (அரசியல்கட்சி), இந்தியத் தேர்தல் ஆணையம், நிர்வாச்சன் சதன், அசோகா ரோடு, புதுடெல்லி–110001 என்ற முகவரிக்கு இந்த அறிவிப்புக் கண்ட 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



**படிவம்-B**
**பொது அறிவிப்பு**
(இந்திய திவால் மற்றும் நொடிப்பு நிலை வாரியம் (கலைப்பு செயல்முறை) ஒழுங்குமுறைகள் 2016 -இன் ஒழுங்குமுறை 12)

**M/S ஸ்டார் டிரேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவன பங்குரிமையாளர்கள் கவனத்துக்கு**

| வ. எண் | விபரங்கள் | தகவல்கள் |
|---|---|---|
| 1. | பெருநிறுவன கடன்தாரர் பெயர் | M/s ஸ்டார் டிரேஸ் பிரைவேட் லிமிடெட் |
| 2. | கடன்தாரர் பெருநிறுவனம் நிறுவப்பட்ட நாள் | 03.09.1998 |
| 3. | இந்த ஆணையத்தின் கீழ் கடன்தாரர் பெருநிறுவனம் நிறுவப்பட்டது / பதிவு செய்யப்பட்டது | நிறுவனங்கள் பதிவாளர்- சென்னை |
| 4. | கடன்தாரர் பெருநிறுவனத்தின் பெரு நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட கடன்பொறுப்பு அடையாள எண் | U51103TN1998PTC041085 |
| 5. | கடன்தாரர் பெருநிறுவனத்தின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி | புதிய எண் 5, பழைய எண் 7, [illegible] தெரு, [illegible], சென்னை, தமிழ்நாடு, இந்தியா-600 052. |
| 6. | திவாலுக்கான திரவ நடவடிக்கை முடிவு நாள் | 26.03.2024 |
| 7. | கடன்தாரர் பெருநிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கை தொடக்க நாள் | 09.08.2024 |
| 8. | கலைப்பு அலுவலராகச் செயல்படும் திவால் தொழிலாளுநரின் பெயர் மற்றும் பதிவு எண் | திரு.R. வெங்கடகிருஷ்ணன் பதிவு எண்:IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250 |
| 9. | கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி - வாரியத்தில் பதிவு செய்துள்ளபடி | பதிவு அலுவலகம்: [illegible] டவர்ஸ், முதல் தளம், 147, GN செட்டி சாலை, சென்னை-600 017 மின்னஞ்சல்: rvk@rvkassociates.com |
| 10. | கலைப்பு அலுவலரின் தொடர்பு முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி | பதிவு அலுவலகம்: [illegible] டவர்ஸ், முதல் தளம், 147, GN செட்டி சாலை, சென்னை-600 017 மின்னஞ்சல்: startrace.ibc@rvkassociates.com |
| 11. | உரிமை கோரல்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 08.09.2024 |

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது யாதெனில், சென்னை பெஞ்ச்-II, தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமானது M/s.ஸ்டார் டிரேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மீது கலைப்பு நடவடிக்கையைத் தொடங்குமாறு 09.08.2024 அன்று ஆணையிட்டுள்ளது. [illegible] 08.09.2024 அன்றோ அதற்கு முன்பாகவோ, [illegible]

R. வெங்கடகிருஷ்ணன்
கலைப்பு அலுவலர்
M/s ஸ்டார் டிரேஸ் பிரைவேட் லிமிடெட்
IBBI/IPA-001/IP-P00115/2017-18/10250
நாள்: 13.08.2024
இடம்: சென்னை



# 63 மூன்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட்

63 moons

பதிவு அலுவலகம் - சக்தி டவர்ஸ்-II, J, 4வது தளம், 766
அண்ணா சாலை, சென்னை-600002
CIN – L29142TN1988PLC015586

ஜூன் 30, 2024-ல் முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் தொகுக்கப்பட்ட தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ. லட்சத்தில், ஈக்குவிட்டி ஷேர் பங்கு புள்ளி விவரம் நீங்கலாக)

| | | தனியானது | | | | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
| | விவரம் | 30.06.2024 தணிக்கை செய்யப்படாதது | 31.03.2024 தணிக்கையானது | 30.06.2023 தணிக்கை செய்யப்படாதது | 31.03.2024 தணிக்கையானது | 30.06.2024 தணிக்கை செய்யப்படாதது | 31.03.2024 தணிக்கையானது | 30.06.2023 தணிக்கை செய்யப்படாதது | 31.03.2024 தணிக்கையானது |
| 1 | வணிக செயல்பாடுகளில் இருந்து மொத்த (நிகர) வருவாய் | **7,150.45** | 6,965.65 | 14,093.66 | 59,293.41 | **8,754.07** | 7,465.23 | 14,783.01 | 62,007.95 |
| 2 | வரி மற்றும் விதி விலக்கான இனங்களுக்கு முந்தைய காலத்துக்கான நிகர லாபம் (நட்டம்) | **402.05** | 85.25 | 7,352.41 | 31,802.45 | **(1,033.39)** | (3,286.62) | 5,114.80 | 21,389.91 |
| 3 | வரிக்கு முந்தைய காலத்துக்கான நிகர லாபம் (நட்டம்) | **(1,097.95)** | (664.75) | 6,352.41 | 27,052.45 | **(1,033.39)** | (3,286.62) | 5,114.80 | 21,389.91 |
| 4 | வரிக்குப் பிந்தைய காலத்துக்கான நிகர லாபம் (நட்டம்) | **(1,210.99)** | 2,957.50 | 5,142.46 | 26,921.63 | **(1,150.68)** | 328.53 | 3,898.55 | 21,235.07 |
| 5 | இந்த கால அளவுக்கான ஒட்டுமொத்த வருவாய் | **(1,217.84)** | 3,011.96 | 5,122.26 | 26,869.46 | **(865.53)** | 835.78 | 3,916.97 | 22,197.24 |
| 6 | செலுத்தப்பட்ட ஈக்குவிட்டி ஷேர் மூலதனம் (முகமதிப்பு ரூ2/ -ஒரு பங்குக்கு) | 921.57 | 921.57 | 921.57 | 921.57 | 921.57 | 921.57 | 921.57 | 921.57 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | 2,86,682.77 | | | | 3,33,815.07 |
| 8 | ஒரு பங்குக்கான வருமானம் (முகமதிப்பு ரூ2/ -ஒரு பங்குக்கு) அடிப்படை/ நீர்க்கப்பட்டது (ஆண்டுவிகிதத்தில் கணக்கிடப்படாதது) | (2.63) | 6.42 | 11.16 | 58.43 | (1.86) | 1.74 | 8.54 | 48.29 |

குறிப்பு :

1. நிறுவனத்தின் மேற்படி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு, 12.08.2024-ம் நாளில் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் இயக்குனர்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.
2. மேற்படி அறிக்கையானது , இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (கடமைகளை வரிசைப்படுத்துதல் மற்றும் கணக்குக்காட்டும் தேவைகள்) ஒழுங்காற்று முறைகள் 2015 ன் ஒழுங்குமுறை 33 ன் கீழ், பங்கு பரிவர்த்தனை அமைப்புகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு முடிவுற்ற நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சாராம்சமாகும் . காலாண்டு முடிவுற்ற முழுமையான நிதி முடிவுகளின் தொகுப்பின் முழு வடிவம், பங்குப் பரிவர்த்தனை வலைதளம் (www.bseindia.com & www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் வலைதளம் (www.63moons.com) ஆகியவற்றில் கிடைக்கும் .
3. தணிக்கையாளர்கள், இந்த தனித்த மற்றும் தொகுப்பு நிதிநிலை முடிவுகளின் மீது, மாற்றியமைக்கப்பட்ட முடிவுகளை வழங்கியுள்ளனர். அதன் தகுதிகள் மற்றும் மேலாண்மை விளைவுகள் ஆகியவை பங்குப் பரிவர்த்தனை வலைதளம் (www.bseindia.com & www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் வலைதளம் (www.63moons.com) ஆகியவற்றில் வெளியிடப்பட்ட விரிவான வடிவத்தின் ஒரு அங்கமாக கிடைக்கும் .

63 மூன்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட் -க்காக

S. ராஜேந்திரன்
மேலாண்மை இயக்குநர்& CEO
DIN-02686150

இடம்: மும்பை
நாள்: ஆகஸ்ட் 12, 2024



**வடகிழக்கு ரயில்வே**

இணையத்தளம்: www.ner.indianrailways.gov.in
மின்னஞ்சல்: cos@ner.railnet.gov.in

**டெண்டர் அறிவிப்பு எண் -11 நாள் 12.08.2024**
**மின்-கொள்முதல் முறையின் மூலம் ஒப்பந்தப் புள்ளிகளுக்கு அழைப்பு**

இந்திய குடியரசுத்தலைவர்-க்காக மற்றும் அவர் சார்பாக பொருள்களுக்கான தலைமை முதன்மை மேலாளர், வடகிழக்கு ரயில்வே, கோரக்பூர்-273012 அவர்கள் கீழ்க்காணும் பொருள்கள் வழங்கலுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மின்-கொள்முதல் முறைப்படி வரவேற்கிறார். பொருள்களின் முழுமையான விவரத்தையும் இன்ன பிற நிபந்தனைகளையும் www.ireps.gov.in இணையத்தளத்தில் காணலாம்.

| இனம் எண். | ஒப்பந்தப் புள்ளி எண் | கடைசி நாள் | பண்டகங்களின் சுருக்கமான விபரங்கள் | இங்கிருந்து கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது |
|---|---|---|---|---|
| 1 | 22231107A | 18.09.24 | FIAT சகடங்களுக்கான பிரமைரி வெர்ட்டிக்கல் டாம்பர் போன்றவை | RDSO |
| 2 | 28242003 | 17.09.24 | 25 மில்லிகிராம் எம்பாக்லிஃப்ளோசின் (ஒவ்வொரு மாத்திரை/கேப்சூல்) போன்றவை | Rly Board |
| 3 | 28240938 | 16.09.24 | RTV சிலிகான் சீலன்ட் போன்றவை | NIL |
| 4 | 22230745 | 11.09.24 | போகி போல்ஸ்டர் சஸ்பென்ஷனுக்கான ஹேங்கர் போன்றவை | ICF |
| 5 | 24240150 | 09.09.24 | IR03H பாண்டோகிராப-க்கான டாம்பர் அசெம்ப்ளி போன்றவை | CLW |
| 6 | 29245035 | 09.09.24 | LED ஷன்ட் சமிக்ஞை அமைப்பு வழங்கல் போன்றவை | RDSO |
| 7 | 29245039 | 09.09.24 | ரூட் LED ஷன்ட் சமிக்ஞை விளக்குகள் வழங்கல் போன்றவை போன்றவை | RDSO |
| 8 | 22241914A | 05.09.24 | சக்கர அமைப்புக்கான தரப்படுத்தப்பட்ட பிரேக் டிஸ்க் போன்றவை | RDSO |
| 9 | 24241114 | 05.09.24 | புஷ் ராடுடன் கூடிய லிமிட் ஸ்விட்ச் (சாதாரணமாக திறந்திருப்பது 1 + சாதாரணமாக மூடி இருப்பது 2) போன்றவை | NIL |
| 10 | 22240770 | 05.09.24 | இஞ்செக்ஷன் மோல்ட் ஹை-க்கான கிட் போன்றவை | ICF |
| 11 | 22241677 | 05.09.24 | 140 KN திறனுள்ள ஏர் ஸ்ப்ரிங் அசெம்ப்ளி போன்றவை | RDSO |
| 12 | 33230072C | 04.09.24 | காண்டாக்ட் ஒயர் பேர்லல் கிளாம்ப் (சிறியது) போன்றவை | CORE |
| 13 | 29245016 | 02.09.24 | பச்சை நிற LED சமிக்ஞை விளக்கு போன்றவை | RDSO |
| 14 | 29245017 | 02.09.24 | மஞ்சள் நிற LED சமிக்ஞை விளக்கு வழங்கல் போன்றவை | RDSO |
| 15 | 29245020A | 02.09.24 | பிரதான செயல்பாட்டுக்கான சிவப்பு நிற LED சமிக்ஞை விளக்கு வழங்கல் போன்றவை | RDSO |
| 16 | 29245056 | 02.09.24 | ஃபைபர் கவசமிடப்பட்ட OFC கேபிள் போன்றவை | RDSO |
| 17 | 24241414 | 02.09.24 | AOH சர்வீஸ் கிட் போன்றவை | NIL |

CPRO/S-50 பொருள்களுக்கான தலைமை முதன்மை மேலாளர், கோரக்பூர்

**இருப்பூர்திகளில் பீடி/சிகரட் புகைக்கக் கூடாது**



ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# தப்பியோடிய ரௌடியை சுட்டுப் பிடித்த பெண் எஸ்.ஐ.

## காவல் ஆணையர் பாராட்டு

**சென்னை, ஆக.13:** சென்னை கீழ்ப்பாக்கத்தில் காவலர்களை வெட்டிவிட்டு தப்பியோடிய ரௌடியை, பெண் உதவி ஆய்வாளர் துப்பாக்கிச் சூடு நடத்தி கைது செய்தார். ரௌடி தாக்கியதில் இரு காவலர்கள் காயமடைந்தனர். ரௌடியை துப்பாக்கியால் சுட்டு துணிச்சலாகப் பிடித்த பெண் உதவி ஆய்வாளரை காவல் ஆணையர் பாராட்டினார்.

சென்னை செனாய்நகர் கல்லறைச் சாலை பகுதியைச் சேர்ந்தவர் செ.ரோகித்ராஜ் (34). இவர் மீது மயிலாப்பூரைச் சேர்ந்த ரௌடி சிவக்குமாரை கொலை செய்த வழக்கு உள்பட 13 வழக்குகள் உள்ளன.

காவல்துறையின் ரௌடிகள் பட்டியலில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றிருக்கும் ரோகித் ராஜ், தற்போது செம்மஞ்சேரி குடிசை மாற்றுவாரிய குடியிருப்பில் வசிக்கிறார்.

**பிடியாணை:** டி.பி.சத்திரம் அமைந்தகரை, அசோக்நகர் ஆகிய காவல் நிலையங்களில் பதியப்பட்ட 3 கொலை வழக்குகளில் நீதிமன்ற விசாரணைக்கு ரோகித் ராஜ் ஆஜராகாததால், அவருக்கு அண்மையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து தலைமறைவாக இருந்த ரோகித்ராஜை போலீஸார் தீவிரமாக தேடி வந்தனர்.


அவர் கீழ்ப்பாக்கம் பழைய கல்லறைத் தோட்டத்தில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர் கலைச் செல்வி, தலைமைக் காவலர்கள் சரவணக்குமார், பிரதீப் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று, ரோகித்ராஜை பிடிக்க முயன்றனர்.

அப்போது, ரோகித்ராஜ், தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் சரவணக்குமாரையும், பிரதீப்பையும் வெட்டினாராம். மேலும், உதவி ஆய்வாளர் கலைச்செல்வியையும் தாக்க முயன்றதாகக் கூறப்படுகிறது.

இதைப் பார்த்த கலைச்செல்வி, தற்காப்புக்காக தனது கைத்துப்பாக்கியால் ரோகித் ராஜை நோக்கி சுட்டார். இதில் ரோகித்ராஜின் வலதுகால் முட்டியில் துப்பாக்கி தோட்டா பாய்ந்தது.

இதில் பலத்த காயமடைந்த அவரை பிடித்துவைத்துக்கொண்டு, காவல் நிலையத்துக்கு கலைச்செல்வி தகவல் தெரிவித்தார். அதன்பேரில் விரைந்து வந்த போலீஸார், காயமடைந்த காவலர்களையும், ரௌடி ரோகித்ராஜையும் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர், தீவிர சிகிச்சைக்காக ரோகித் ராஜ், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

**காவல் ஆணையர் பாராட்டு:** இந்த சம்பவம் தொடர்பாக டி.பி.சத்திரம் போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரணை செய்கின்றனர். ரௌடியை துப்பாக்கியால் சுட்டு துணிச்சலாக பிடித்த உதவி ஆய்வாளர் கலைச்செல்வியை சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் ஏ.அருண் நேரில் அழைத்து பாராட்டி, வெகுமதி அளித்தார்.

குற்றவாளியை துப்பாக்கியால் சுட்டு கைது செய்த உதவி ஆய்வாளர் கலைச்செல்வியை வெகுமதி வழங்கி பாராட்டிய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஏ.அருண். உடன், கூடுதல் காவல் ஆணையர் கபில்குமார் சி.சரத்குமார். (வலது) வலதுகாலில் சுட்டுப் பிடிக்கப்பட்ட ரோகித் ராஜ்.


**எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்** — LIC HFL, LIC HOUSING FINANCE LTD

சென்னை பின்புற அலுவலகம்: "ஹாரிங்டன் சேம்பர்ஸ்", பிளாக் எண்.C, முதல் தளம், எண்.30/1A, அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை – 600015. போன்: 044- 42010374

**மின் ஏல விற்பனை அறிவிப்பு**

2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நலன் அமல்படுத்துதல் சட்டத்தின் கீழ் மற்றும் 2002 பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகளின் 3-ம் விதியுடன் பிரிவு 13(2) என்பவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கான எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (LIC HFL)-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர் இருக்கின்ற நிலையில், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலுவையிலுள்ள பாக்கித்தொகையை திரும்பச் செலுத்துமாறு **கடன்தாரர்கள் / அடைமானம் வைத்தவர்களுக்கு கடன் கேட்பு அறிவிப்பை** வழங்கியிருந்தார். எனினும், குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைப்பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த கடன்தாரர்கள் / அடமானம் வைத்தவர்கள் தவறியிருப்பதால், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவுகள் 13(4) மற்றும் 14 மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட விதித்தொகுப்பின் விதி 8-ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பிரயோகித்து, கீழே கையொப்பமிட்டுள்ள நபர் கீழ்க்கண்ட சொத்துக்களை **அடையாளபூர்வ சுவாதீனம்** (Symbolic Possession) செய்திருக்கிறார்.

விண்ணப்பதாரர்/ கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானத்தில் உள்ள அசையா சொத்துக்களை எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் அடையாளபூர்வ சுவாதீனம் செய்யப்பட்ட விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்களை எங்கு இருக்கிறதோ அதன் அடிப்படையில்' மற்றும் 'என்னவெல்லாம் இருக்கிறதோ அதன் அடிப்படையில்' மற்றும் 'எந்த மறுவழிவகை இல்லாத அடிப்படையில்' **20.09.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

வ.எண்.1) பெயர்: திரு.E.மோகன் கடன் எண் - **510100005221 & 510100005242**

**சொத்தின் விளக்கம்**

**வகை எண்.1**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.58/2 இல் அமைந்துள்ள 64 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.2**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.56/3 இல் அமைந்துள்ள 38.34 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.3**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.58/4 இல் அமைந்துள்ள 24.63 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.4**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.56/2 இல் அமைந்துள்ள 6 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.5**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.56/1 இல் அமைந்துள்ள 76 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.6**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.109/1 இல் அமைந்துள்ள 38 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.7**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.87/1 இல் அமைந்துள்ள 52 சென்ட்கள் & சர்வே எண்.87/2A இல் அமைந்துள்ள 1 சென்ட், எல்லாம் சேர்த்து 53 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.8**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.58/4 இல் அமைந்துள்ள 7 சென்ட்கள் & சர்வே எண்.56/3 இல் அமைந்துள்ள 9 சென்ட்கள், எல்லாம் சேர்த்து 16 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.9**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.86/6 இல் 5 சென்ட்கள், 88/1இல் 63 சென்ட்கள், 88/2இல் 40 சென்ட்கள், 88/3இல் 49 சென்ட்கள், 88/4இல் 42 சென்ட்கள், 88/5இல் 40 சென்ட்கள், 91/1இல் 37 சென்ட்கள், 91/2இல் 19 சென்ட்கள், மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 95 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.10**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.106இல் 45 சென்ட்கள், 107/1இல் 34 சென்ட்கள் & 107/2இல் 73 சென்ட்கள், மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 52 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.11**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.105/2 இல் அமைந்துள்ள 93 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.12**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.87/2B இல் அமைந்துள்ள 23 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.13**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.109/2இல் அமைந்துள்ள 82.745 சென்ட்கள் & சர்வே எண்.85/1 இல் அமைந்துள்ள 22.25 சென்ட்கள், மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 5 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; **வகை எண்.14**: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செங்குன்றம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, தற்போது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், செம்புலிவரம் கிராமத்தின் சர்வே எண்.58/3B இல் அமைந்துள்ள 33.34 சென்ட்கள் விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி;

குறிப்பு: 31.01.2024 தேதியிட்ட SA எண்.31/2024-ற்கான சென்னை, கடன்கள் மீட்புத் தீர்ப்பாயம் - III, இன் ஆணையின் தொடர்ச்சியாக M/s. P.A. Footwear Private Limited-என்ற பெயரில் உள்ள வாடகைதாரர் வளாகங்களை உபயோகித்துக் கொண்டு மாதந்தோறும் ரூ.15 லட்சங்கள் வாடகைச் செலுத்திக் கொண்டுள்ளார். குறிப்பிடப்பட்ட வாடகைதாரர் ஏலவிற்பனையில் வாங்குபவர் அனுமதி அளித்தால் மாதாந்திர வாடகையினை தவறாமல் செலுத்த உறுதியளித்துள்ளார். அனுமதி அளிக்கத் தவறினால், 15.01.2026 அன்று அல்லது அதற்கு முன்னர் தாமாகவே காலி செய்ய உறுதியளித்துள்ளார், எனினும் அதுவரை மாதாந்திர வாடகை செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| கோரிக்கை அறிவிப்பு தேதி : 04-01-2022 | **கணக்கின் விவரங்கள்** |
| கோரப்படும் தொகை :ரூ.33,60,88,985.15+எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் | பயனாளரின் பெயர் : LIC Housing Finance Ltd. |
| அடையாளபூர்வ உடைமைத் தேதி : 09-03-2022 | வங்கி : Axis Bank, Centralised Collection Hub |
| ரிசர்வ் தொகை - ரூ. 57,00,00,000/- (ஐம்பத்து ஏழு கோடி மட்டும்) | கணக்கு எண். : HFLESOMAAY04765 |
| முன்வைப்புத் தொகை - ரூ. 5,70,00,000/- (ஐந்து கோடியே எழுபது இலட்சம் மட்டும்) | IFSC குறியீடு : UTIB0CCH274 |
| 20-09-2024 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ. 47,23,19,501/- | |

வ.எண்.2) பெயர்: திரு.C.ரவிசங்கர் - கடன் எண் - **510100005341**

**சொத்தின் விளக்கம்**

தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட, செந்நீர்குப்பம் கிராமத்தின் சர்வே எண்.91/2A, ஆவடி சாலை, கதவு எண்.2/183, 6/98இல் அமைந்துள்ள 10764.26 சதுர அடி விஸ்தீரணங் கொண்ட நிலம் அதனுடன் வணிகக்கட்டிடம் (தரை + முதல் தளம்), அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; எல்லைகள்: வடக்கில்: அக்கினி முத்தம்மாள் அவர்களின் உரிமை பெற்ற நிலம்; தெற்கில்: மோகனசுந்தரம் அவர்களின் உரிமை பெற்ற நிலம்; கிழக்கில்: ராமமூர்த்தி மற்றும் பலரின் உரிமைபெற்ற நிலம், மற்றும் மேற்கில்: ஆவடி சாலை.

| | |
|---|---|
| கோரிக்கை அறிவிப்பு தேதி : 21-10-2021 | **கணக்கின் விவரங்கள்** |
| கோரப்படும் தொகை :ரூ.5,56,86,383.35 + எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் | பயனாளரின் பெயர் : LIC Housing Finance Ltd. |
| அடையாளபூர்வ உடைமைத் தேதி : 29-09-2022 | வங்கி : Axis Bank, CentralisedCollection Hub |
| ரிசர்வ் தொகை - ரூ. 8,48,35,000/- (எட்டு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) | கணக்கு எண். : HFLESOMASP05341 |
| முன்வைப்புத் தொகை - ரூ. 84,83,500/- (எண்பத்து நான்கு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) | IFSC குறியீடு : UTIB0CCH274 |
| 20-09-2024 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ. 8,40,24,077/- | |

**பிற மின் ஏல விற்பனை விவரங்கள்:**

| | |
|---|---|
| மின் ஏல விற்பனை இணையதளம் | www.auctionbazaar.com |
| சொத்து ஆவணங்களின் நிழற்பட நகல்களை ஆய்வு செய்வதற்கான தேதி & நேரம்: 17.09.2024 காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை, எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் சென்னை பின்புற அலுவலகம் - ஹாரிங்டன் சேம்பர்ஸ், பிளாக் 'A', முதல் தளம், எண்.30/1A, அப்துல் ரஜாக் முதல் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600015 | |
| சொத்துக்களை பார்வையிடுதல்: அலுவலக வசதிக்கேற்ப நேரம் நிர்ணயிக்கப்படும்: | 18.09.2024 காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| தொடர்பு கொள்ள வேண்டிய நபர் : | திரு.மனோஜ்.M.V. - போன்: 99809 69671 |
| ஆன்லைன் டெண்டர் / ஏலத் தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி | 19.09.2024 -அன்று மாலை 5:00 மணி வரை |
| மின் ஏல தேதி | 20.09.2024 - காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை |

மேற்குறிப்பிடப்பட்ட சொத்தின் மின் ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்பின் மேலதிக தொடர்ச்சியாக (2002 **SARFAESI** சட்டத்தின் வரையறைகள் மற்றும் அதன் கீழான விதிகளின்படி) கீழ்க்கண்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கு ஆன்லைன் வழிமுறை வழியாக மட்டும் ஆஃபர்களை எல்ஐசிஹெச்எஃப்எல் வரவேற்கிறது:

1. "எங்கு இருக்கிறதோ அதன் அடிப்படையில்" மற்றும் "என்னவெல்லாம் இருக்கிறதோ அதன் அடிப்படையில்" மற்றும் "எந்த மறுவழிவகை இல்லாத அடிப்படையில்" [illegible] M/s.ஆக்ஷன் பஜார் [illegible]
2. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலின்படி, பிரகடனங்கள் வெளியிடப்பட்டிருக்கின்ற அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மீது [illegible] ("caveat emptor") [illegible]
3. ஏலம் கேட்க திட்டமிடும் நபர்கள் அவர்களது பெயர்களை "www.auctionbazaar.com" என்ற வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும் [illegible] M/s.ஆக்ஷன் பஜார், பார்க் அவென்யூ ரோடு, [illegible] 7-1-28/1/A/1, [illegible] ஹைதராபாத், தெலங்கானா-500 016 [illegible] "contact@auctionbazaar.com" மொபைல்: 77990 72999.
4. இந்த மின்னணு விற்பனை 2002 SARFAESI சட்டம் / விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது. [illegible]
5. ஆன்லைன் மின்னணு ஏலத்தில் [illegible] LICHFL [illegible]
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய குறைந்த விலை தொகைக்கும் குறைவாக மேற்குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் விற்கப்படாது.
7. செலுத்தப்பட்டுள்ள பிணை வைப்புத்தொகை வெற்றிகரமான ஏலதாரருக்கு [illegible]
8. வெற்றிகரமான ஏலதாரர் [illegible]
9. மேற்கண்ட ஏலத்தின் (EMD) பிற விவரங்களின் படி [illegible] www.auctionbazaar.com [illegible]
10. [illegible] BID-க்கு ரூ.2,00,000/- [illegible]
11. [illegible] 25%-ஐ [illegible] 75% [illegible] 15 நாட்களுக்குள் [illegible]
12. [illegible]
13. [illegible]
14. [illegible]
15. [illegible]
16. [illegible]
17. இச்செய்தியின் விற்பனையானது பாட்டு சட்டம் [illegible]

தேதி: 12.08.2024 | இடம்: சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, எல்ஐசி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்



**யூனியன் பாங்க் ஆப் இந்தியா** — மௌபரீஸ் சாலை கிளை

எண்.265, TTK சாலை, ஆழ்வார்பேட்டை, மௌபரீஸ் சாலை, சென்னை-600018. மொபைல்: 93722 02551 மின்னஞ்சல் : ubin0802557@unionbankofindia.bank

**பிணையநலன் (அமலாக்க) விதிகள் 2002இல் விதி 6(2)/8(6) இன் படி விற்பனை (30 நாட்கள் அறிவிப்பு) குறித்து கடன்தாரருக்கான தகவல் அறிவிப்பு**

பெறுநர்,

**திருமதி. R.லட்சுமி**, மனை எண்.52, ஆரோக்கிய நகர், அத்திப்பட்டு, திருவள்ளூர்-600 120.

ஐயன்மீர்/அம்மையீர்,

பொருள்: பிணைக்காப்பு நிதி சொத்து மறு சீரமைப்பு மற்றும் அமலாக்கச்சட்டம், 2002இன் கீழ் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையினை வசூலிக்கும் பொருட்டு, **திருமதி. R.லட்சுமி** அவர்கள் வங்கியில் அடமானத்தில் உள்ள சொத்தினை விற்பனை செய்வது தொடர்பாக.

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2)இன் கீழ் உங்களுக்கு **யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, மௌபரீஸ் சாலை கிளை**, 265, TTK சாலை, மௌபரீஸ் சாலை, சென்னை-600018 கடன் வழங்கிய வங்கி தங்களுக்கு **18-12-2023** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதில் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் செலுத்துமாறு கோரப்பட்டது. இதுவரை நீங்கள் தொகை செலுத்தாத காரணத்தினால், அதிகாரப்பூர்வ அதிகாரியானவர், பிணையநலன் (அமலாக்க) விதி 2002 விதி 6 / 8இன் பிரிவு 13(4)இன் கீழ் அசையா பிணைச்சொத்தினை **13-03-2024** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

பிணைச்சொத்தினை சுவாதீனம் செய்த பின்னரும் நீங்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தாத காரணத்தினால் இந்த அறிவிப்பு கிடைத்த **30 நாட்களுக்குள்** கீழே குறிப்பிட்ட சொத்தினை இணைவழி பொது மின்ஏல விற்பனை செய்வதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும். மின் ஏலத்தின் தேதி மற்றும் நேரம் அதனுடன் சொத்தின் நிர்ணய விலை மற்றும் சேவை வழங்குபவரின் விவரங்கள் தங்களுக்கு தனிப்பட்ட முறையில் தெரிவிக்கப்படும்.

எனவே, வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை அதனுடன் வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட செலவுகளை சேர்த்து விற்பனை அறிவிப்பு பிரசுரிப்புக்கு முன்னர் செலுத்த வேண்டும். சொத்தின் விற்பனை குறித்து மேல் நடவடிக்கை எடுக்க இயலாது. பிணைய சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப்பிரிவு 13(8) விதியின் படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**சொத்தின் அட்டவணை**

வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய எல்லை, அத்திப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.290/3, பட்டா எண் 2828இன்படி மறுசர்வே எண்.290/3B, ஆரோக்கிய நகர், அங்கீகார P.P.D/L.O.எண்.91/1985, மனை எண்.52இல் அமைந்துள்ள 2690 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் முதல், இரண்டாம் தளங்களில் அமைந்துள்ள கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **எல்லைகள்**: வடக்கில்: 30-0 அகல சாலை; தெற்கில்: மனை எண்.53; கிழக்கில்: 30-0 அகல சாலை; மேற்கில்: சர்வே எண்.290.

தேதி : 30.04.2024
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி / முதன்மை மேலாளர், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா



**கனரா வங்கி** (ஒரு இந்திய அரசு நிறுவனம்) — **சொத்து மீட்பு மேலாண்மை கிளை**

தலைமை அலுவலகம் - பெங்களூரு - சென்னை வட்டார அலுவலகம்

8வது தளம், வட்டார அலுவலக கட்டிடம், 524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018, தொலைபேசி எண். 044 - 2849 6339, 2849 6900. மின்னஞ்சல் : cb2361@canarabank.com

**மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக எடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **கனரா வங்கியின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாள / ஆக்கப்பூர்வ சுவாதீனம் (Symbolic/Constructive possession)** செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, **"உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு"**, மற்றும் **"உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 04.09.2024** ஆம் தேதியன்று **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்))** விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**வ.எண்.1: சென்னை சொத்து மீட்பு மேலாண்மை கிளை: கடன்தாரர் பெயர் & முகவரி: (1) M/s. Reach Telecommunications Pvt Ltd**, M-75/3, 3வது அவின்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை – 600 102. **(2) திரு. செல்வம், த/பெ.V.லோகநாதன், (3) திருமதி. கிரிஜா.R க/பெ. திரு.L. இராமசந்திரன், (4) திரு.L.இராமசந்திரன், த/பெ.V.லோகநாதன், 2 முதல் 4 வரை முகவரி:** எண்.136, A.P.சாலை, சூளை, சென்னை – 600112. மேலும் ஒரு முகவரி: M-75/3, 3வது அவின்யூ, அண்ணா நகர் கிழக்கு, சென்னை – 600 102.

**கடன் நிலுவைத் தொகை : 31.01.2024 அன்றுள்ளபடி ரூ. 8,15,28,083.19 (ரூபாய் எட்டு கோடியே பதினைந்து இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து எண்பத்து மூன்று மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்)** அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்

**சொத்தின் விவரம்: பத்திர எண்.1775/1998 இன் படி திரு.L. செல்வம் மற்றும் திரு.L. இராமசந்திரன் ஆகியோரின் பெயரில் உள்ள** மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மற்றும் பத்திர எண்.1775/1998 இல் விரிவான விவரங்கள் அடங்கியுள்ள சொத்துக்கள். **வகை எண்.1:** செங்கை – M.G.R. மாவட்டம் (தற்போது திருவள்ளூர் மாவட்டம்), சைதாப்பேட்டை வட்டம் (தற்போது அம்பத்தூர் வட்டம்), கொரட்டூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.331/1B (11.5 சென்ட்கள்), பட்டா எண்.2205 இன் படி சர்வே எண்.331/1B1 - 10.5 சென்ட்கள், ஆகியவற்றில் அடங்கிய ஸ்ரீனிவாசபுரம், 3வது பிரதான சாலை, கொரட்டூர், சென்னை–600076, இல் அமைந்துள்ள காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும், அதன் **எல்லைகள்:** வடக்கில்: ஏரி, தெற்கில்: சர்வே எண்.331/2, கிழக்கில்: திருமதி.P.T. மரியம் அவர்களுக்கு சொந்தமான நிலங்கள், (தற்போது திரு.L. செல்வம் மற்றும் திரு.L.இராமசந்திரன் ஆகியோருக்கு சொந்தமானது), மேற்கில்: திருமதி.விஜயரங்கம் கிராமாயி அவர்களின் நிலங்கள், **வகை எண்.2:** செங்கை – M.G.R. மாவட்டம் (தற்போது திருவள்ளூர் மாவட்டம்), சைதாப்பேட்டை வட்டம் (தற்போது அம்பத்தூர் வட்டம்), கொரட்டூர் கிராமத்தின் சர்வே எண்.333/2A – 6சென்ட்கள், சர்வே எண்.331/1B பட்டாவின் படி சர்வே எண்.331/1B2-6 ½ சென்ட்கள், சர்வே எண்.331/2A – 5 சென்ட்கள், [illegible] உரிமைப் பெற்ற நிலங்கள், மேற்கில்: சர்வே எண்.331/1B.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 2,05,00,000/- | டேவணித்தொகை | ₹ 20,50,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 2,00,000/- |
|---|---|---|---|---|---|

**வ.எண்.2: கஸ்தூரிபாய் நகர் கிளை: (1) M/s.Dharma Medical Research and Charitable Trust, (2) டாக்டர். V.தர்மலிங்கம், த/பெ. வேலுமயில், (3) டாக்டர். மகேஷ்வரி, க/பெ. டாக்டர். V.தர்மலிங்கம், அனைவரின் முகவரி:** எண்.23, பரமேஸ்வரி நகர், 2வது தெரு, அடையார், சென்னை-600020.

**கடன் நிலுவைத் தொகை : 31.07.2024 அன்றுள்ளபடி ரூ. 19,91,24,544.89 (ரூபாய் பத்தொன்பது கோடியே தொண்ணூற்று ஓர் இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூற்று நாற்பத்து நான்கு மற்றும் பைசா எண்பத்து ஒன்பது மட்டும்)** அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்

**சொத்தின் விவரம்: சொத்து எண்.1: (ஆவண எண்.5213/2000 இல் அடங்கிய, மரு. V. தர்மலிங்கம் அவர்களின் பெயரில் உள்ள சொத்து)** காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, ஸ்ரீபெரும்புதூர் "B" கிராம பஞ்சாயத்து யூனியன் எல்லைகளுக்குட்பட்ட, ஸ்ரீபெரும்புதூர், எண்.48, Grant West Trunk சாலை, (i). சர்வே எண்.719/1B இன் விஸ்தீரணம் ஏக்கர் 0.60 சென்ட்கள் (ii). சர்வே எண்.719/1A இன் விஸ்தீரணம் ஏக்கர் 0.20 சென்ட்கள் (iii). சர்வே எண்.709/1A இன் விஸ்தீரணம் ஏக்கர் 0.65 சென்ட்கள் ஆகியவற்றில் அடங்கிய காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூர்கிராமம், எண்.105, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.45 சென்ட்கள் கொண்ட நிலம் அதனுடன் கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, சர்வே எண்.719/1A & 1B ஆகியவற்றின் **எல்லைகள்** : வடக்காக : காலி நிலம், தெற்காக : பொது நடைபாதை சாலை, கிழக்காக : Dharma Medical Research and Charitable Trust அவர்களின் சொத்து, மேற்காக : காலி புறம்போக்கு நிலம். சர்வே எண். 709/1A இன் **எல்லைகள்** : வடக்காக : பொது நடைபாதை / சாலை, தெற்காக : Dharma Medical Research and Charitable Trust அவர்களின் சொத்து, கிழக்காக : Dharma Medical Research and Charitable Trust அவர்களின் சொத்து, மேற்காக : காலி புறம்போக்கு நிலம். மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.45 சென்ட்கள் கொண்ட நிலம் அதனுடன் கட்டிடம்.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 4,24,00,000/- | டேவணித்தொகை | ₹ 42,40,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

**சொத்து எண்.2: (ஆவண எண்.4926/2004 இன் படி, மரு. V. தர்மலிங்கம் அவர்களின் பெயரில் உள்ள சொத்து)** வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பொன்னேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், எண்.59, பொன்னேரி கிராமத்தில் அமைந்துள்ள கிராம நத்தம் சர்வே எண்கள்.452/18 & 452/19, (பட்டா எண்.437) பட்டாவின் படி சர்வே எண்.452/17 ஆகியவற்றில் அடங்கிய பொன்னேரி இராமசந்திர ரெட்டியார் தெருவில் உள்ள 3052ச.அடி (0.07 சென்ட்கள்) விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் (தரை தளக் கட்டிடம் - 1800 ச.அடி & முதல் தளம் கட்டிடம் - 1800 ச.அடி.) கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி அதன் **எல்லைகள்:** வடக்கில் : சர்வே எண்.452/2; தெற்கில் : சர்வே எண்.451; கிழக்கில் : சர்வே எண்.452/18; மேற்கில் : சர்வே எண்.452/20;

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 64,20,000/- | டேவணித்தொகை | ₹ 6,42,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

**வ.எண்.3: கஸ்தூரிபாய் நகர் கிளை: (1) M/s.Dharma Pharmacy Private Limited, (2) டாக்டர். V.தர்மலிங்கம், த/பெ. வேலுமயில், (3) டாக்டர். மகேஷ்வரி, க/பெ. டாக்டர். V.தர்மலிங்கம், அனைவரின் முகவரி:** எண்.23, பரமேஸ்வரி நகர், 2வது தெரு, அடையார், சென்னை-600020.

**கடன் நிலுவைத் தொகை : 31.07.2024 அன்றுள்ளபடி ரூ. 4,68,67,774.98 (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து எட்டு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)** அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்

**சொத்தின் விவரம்: சொத்து எண்.1: (ஆவண எண்.4971/2007-இன் படி, மரு. V.தர்மலிங்கம் அவர்களின் பெயரில் உள்ள சொத்து)** தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை இணை-I சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவான்மியூர் கிராமத்தின் T.சர்வே எண்.26 (பழைய சர்வே எண்.205/3 பகுதி மற்றும் 205/8), பிளாக் எண்.42 இல் அடங்கிய புதிய எண்.63, பழைய எண்.18/1, கிழக்கு கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை– 600041 இல் உள்ள 67 சென்ட்கள் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 172.635ச.அடி மற்றும் 65ச.அடி பொதுப் பரப்புடன் 423ச.அடி தரைப் பரப்பான மொத்தம் 488ச.அடி பரப்பளவுள்ள ரமணியம் காஸ்ரி இன் பதினோறாம் தளத்தில் அமைந்துள்ள குடியிருப்பு ஃபிளாட் எண்11B, அதனுடன் ஒரு வடிவமைக்கப்பட்ட திறந்தவெளி கார் நிறுத்தும் இடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும், அதன் **எல்லைகள்**: வடக்கில்: T.சர்வே எண்.126 மற்றும் 127 இல் அடங்கிய சொத்து; தெற்கில்: T.சர்வே எண்.27, 31, 32 மற்றும் 33 இல் அடங்கிய சொத்து; கிழக்கில்: T.சர்வே எண்.33 மற்றும் 34 இல் அடங்கிய சொத்து; மேற்கில்: பிளாக் எண்.40 இன் T.சர்வே எண்.27 மற்றும் 31 & கிழக்கு கடற்கரை சாலை.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 40,00,000/- | டேவணித்தொகை | ₹ 4,00,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

**சொத்து எண். 2:(ஆவண எண்.4972/2007-இன் படி, மரு. G. மகேஸ்வரி அவர்களின் பெயரில் உள்ள சொத்து)** தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை இணை-I சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவான்மியூர் கிராமத்தின் T.சர்வே எண்.26 (பழைய சர்வே எண்.205/3 பகுதி மற்றும் 205/8), பிளாக் எண்.42 இல் அடங்கிய புதிய எண்.63, பழைய எண்.18/1, கிழக்கு கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை– 600041 இல் உள்ள 67 சென்ட்கள் நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 145.395ச.அடி மற்றும் 55ச.அடி பொதுப் பரப்புடன் 356ச.அடி தரைப் பரப்பான மொத்தம் 411ச.அடி பரப்பளவுள்ள ரமணியம் காஸ்ரி இன் பதினோறாம் தளத்தில் அமைந்துள்ள குடியிருப்பு ஃபிளாட் எண்11E, அதனுடன் ஒரு வடிவமைக்கப்பட்ட திறந்தவெளி கார் நிறுத்தும் இடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும், அதன் **எல்லைகள்**: வடக்கில்: T.சர்வே எண்.126 மற்றும் 127 இல் அடங்கிய சொத்து; தெற்கில்: T.சர்வே எண்.27, 31, 32 மற்றும் 33 இல் அடங்கிய சொத்து; கிழக்கில்: T.சர்வே எண்.33 மற்றும் 34 இல் அடங்கிய சொத்து; மேற்கில்: பிளாக் எண்.40 இன் T.சர்வே எண்.27 மற்றும் 31 & கிழக்கு கடற்கரை சாலை.

| குறைந்தபட்ச கேட்பு விலை | ₹ 34,00,000/- | டேவணித்தொகை | ₹ 3,40,000/- | ஏலஉயர்வுத்தொகை | ₹ 1,00,000/- |
|---|---|---|---|---|---|

**மின் ஏல தேதி மற்றும் நேரம் 04.09.2024** காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

**சொத்தினை பார்வையிடும் தேதி : 23.08.2024; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை**

**டேவணித்தொகை டெபாசிட் செய்ய கடைசி தேதி : 02.09.2024 ; நேரம் மாலை 5 மணிக்குள் கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, A/c No:209272434, IFSC Code: CNRB0002361.**

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் **(www.canarabank.com)** "E- Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, சென்னை **(தொலைபேசி எண். 044 - 2849 6339, 2849 6900), cb2361@canarabank.com** என்ற மின்னஞ்சலில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் (அல்லது) சேவை முகவர் **M/s.C1 India Pvt Ltd, Plot No.68, 3rd Floor, Sector – 44, Gurgaon, Haryana, Pin- 122003, Prabakaran M - Mobile:+91-74182 81709, Email id: tn@c1india.com, Prabakaran.malaichamy@c1india.com**

Portal of E-Auction: **https://www.bankeauctions.com**

தேதி : 12.08.2024; இடம் : சென்னை | அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி


## ராமநாதபுரம் மக்களவைத் தேர்தல் வெற்றியை எதிர்த்து ஓபிஎஸ் வழக்கு

### விரைவில் விசாரணை

**சென்னை, ஆக. 13:** ராமநாதபுரம் தொகுதியில் திமுக கூட்டணியின் மக்களவைத் தேர்தல் வெற்றியை எதிர்த்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த தேர்தல் வழக்குவிரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் திமுக - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கூட்டணி கட்சி வேட்பாளர் நவாஸ் கனி 5,09,664 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து பாஜக கூட்டணி சார்பாக போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் 3,42,882 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார்.

இந்நிலையில், தேர்தல் முடிவடைந்து 45 நாள்களுக்குள், தேர்தல் வழக்கு தொடர வேண்டும் என்ற நடைமுறையின்படி, ஓ.பன்னீர்செல்வம் சென்னை உயர்நீதி மன்றத்தில் நேரில் ஆஜராகி ஜூலை 18-ஆம் தேதி தேர்தல் வழக்குத் தாக்கல் செய்தார்.

அதில், 'திமுக அணி வேட்பாளர் நவாஸ் கனி சொத்துக் கணக்கை முறையாக காட்டவில்லை. பல ஆவணங்களை மறைத்துள்ளார். எனவே, அவர் வெற்றி பெற்றது செல்லாது என அறிவிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிட்டு வதற்காக செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்கு வந்த பன்னீர்செல்வம், நீதிமன்ற பதிவாளர் முன் ஆஜராகி ஆவணங்களில் கையொப்பமிட்டார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜாபர் சாதிக்கின் சகோதரர் கைது

**சென்னை, ஆக.13:** சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் ஜாபர் சாதிக்கின் சகோதரர் கைது செய்யப்பட்டார்.

வெளி நாடுகளுக்கு கடந்த 3 ஆண்டுகளாக ரூ. 2,000 கோடி மதிப்புள்ள 3,500 கிலோ சூடோஎபிட்ரின் என்ற போதைப் பொருளை கடத்தியதாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளரும், திமுக முன்னாள் நிர்வாகியுமான சென்னை சாந்தோமைச் சேர்ந்த ஜாபர் சாதிக், தில்லியில் மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவால் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக தில்லி அமலாக்கத் துறை தனியாக ஒரு வழக்கைப் பதிவு செய்தது.

**சகோதரர் கைது:** போதைப் பொருள் கடத்தலில் கிடைத்த பணம் எங்கு முதலீடு செய்யப்பட்டது, ஜாபர் சாதிக்கின் குடும்பத்தினருக்குச் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் அமலாக்கத் துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், ஜாபர் சாதிக்கின் மனைவி அமீனா பானு, அவர் சகோதரர் முகம்மது சலீம் ஆகியோரை இந்த வழக்கில் கடந்த ஜூலை 24-ஆம் தேதி சேர்த்தனர். இது தொடர்பாக சலீம் அமலாக்கத் துறையினர் கடந்த இரு நாள்களாக விசாரணை நடத்தினர். அந்த நிலையில், செவ்வாய்க்கிழமை அவரைக் கைது செய்தனர்.

இதையடுத்து அவர், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை ஆக.27-ஆம் தேதி வரை காவலில் வைக்கும்படி நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.

## கூட்டுறவு சார் பதிவாளர் பணியிடை நீக்கம்

**சிவகங்கை, ஆக. 13:** சிவகங்கை மாவட்டம் மொத்தக் கூட்டுறவுப் பண்டகச்சாலையில் 3 விற்பனையாளர் பணியிடங்களுக்கு, போலி பணி நியமன ஆணை வழங்கியது தொடர்பாக, சார்- பதிவாளர் திங்கள்கிழமை பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

சிவகங்கை கூட்டுறவுத் துறை சார்ந்த நியாய விலைக் கடை பணியாளர்களுக்கான நேர்முகத் தேர்வு, கடந்த ஆண்டு நடைபெற்றது. இதில், சிவகங்கை மாவட்டக் கூட்டுறவுப் பண்டகச்சாலையின் கீழ் இயங்கும், நியாயவிலைக் கடையின் மொத்த விற்பனையாளர்களுக்கான 3 காலிப் பணியிடங்கள், போலி நியமன ஆணைகள் மூலம் நிரப்பப்பட்டதாக புகார் எழுந்தது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாக உத்தரவின் பேரில், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திரபிரசாத், துணைப் பதிவாளர் பாரதி ஆகியோர் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் முடிவில், இணைப் பதிவாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த சார்- பதிவாளர் சரவணனை பணியிடை நீக்கம் செய்து இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத் திங்கள்கிழமை உத்தரவிட்டார்.

# மாமல்லபுரம் உள்பட 3 புதிய நகராட்சிகள்

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, ஆக.13:** ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு பேரூராட்சிகளை நகராட்சிகளாக தர உயர்த்துவதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறை வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: கடந்த 2023–24-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் மானிய கோரிக்கை விவாதத்தின் மீதான விவாதங்களுக்கு பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு உள்ளிட்ட சில பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தார். இதையடுத்து, இந்த 3 பேரூராட்சிகளையும் நகராட்சிகளாக தரம் உயர்த்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல்வேறு காரணங்கள் அடிப்படையில் இந்தப் பேரூராட்சிகளை 2-ஆம் நிலை பேரூராட்சிகளாக தரம் உயர்த்தலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்தார்.

இது தொடர்பான கருத்துருக்களை பரிசீலித்த தமிழக அரசு, இந்த 3 பேரூராட்சிகளும், நகராட்சிகளாக்குவதற்கான மக்கள் தொகை 30,000-க்கு குறையாமல் இருக்க வேண்டும் என்ற அளவு கோலை பூர்த்தி செய்யாவிட்டாலும், சராசரி வருமானம் என்ற அளவுகோலை பூர்த்தி செய்துள்ளன.

இதற்கிடையே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால், அதன்படியும், பிற காரணங்களையும், இந்த 3 பேரூராட்சிகளின் வரலாறு, சுற்றுலா அதிகரிப்பின் முக்கியத்துவம் வாய்ந்த வணிகம் போன்ற தொழில் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டும் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஆகிய 3 பேரூராட்சிகளை, நகராட்சிகளாக தரம் உயர்த்தி உருவாக்குவதற்கான உத்தேச முடிவு செய்து, ஆணையிடப்படுகிறது.

இதையடுத்து, உத்தேச நகராட்சிகளின் வார்டுகள் எல்லைகளை வரையறை செய்து, நகராட்சிகளுக்கான அடுத்த சாதாரண தேர்தல் நடத்தப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# போலி ஜாதிச் சான்றிதழ் விவகாரம்: தோளப்பள்ளி ஊராட்சித் தலைவர் தகுதி நீக்கம்

**வேலூர், ஆக.13:** வேட்பு மனுவுடன் போலி ஆதிதிராவிடர் ஜாதி சான்றிதழ் அளித்து தேர்தலில் வெற்றி பெற்ற விவகாரத்தில் வேலூர் மாவட்டம், தோளப்பள்ளி ஊராட்சித் தலைவர் கல்பனா சுரேஷை தகுதிநீக்கம் செய்து ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் முதன்மை செயலர் ககன்தீப் சிங் பேடி உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் மறுசீரமைக்கப்பட்ட 9 புதிய மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் கடந்த 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்றது.

அப்போது, வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம் தோளப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி பட்டியலின சமூகப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டது. அந்தப் பதவிக்கு ஆட்டோ சின்னத்தில் போட்டியிட்ட கல்பனா சுரேஷ் என்பவர் 609 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். ஊராட்சி மன்றத் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், கல்பனா சுரேஷ் மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும், தேர்தல் வேட்பு மனுவில் ஆதிதிராவிடர் என போலி ஜாதி சான்றிதழை இணைத்துக் கொடுத்து வெற்றி பெற்றுள்ளார் என்றும் புகார் எழுந்தது. இதுதொடர்பாக, கல்பனா சுரேஷை எதிர்த்து போட்டியிட்ட தோளப்பள்ளி ஊராட்சி சிவசக்தி சேர்ந்த பாக்கிய ராஜ் என்பவர் அப்போதைய வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியனிடம் புகார் அளித்திருந்தார்.

அந்த மனுவில், தோளப்பள்ளி ஊராட்சி தலைவர் பதவிக்கு போலியாக ஆதிதிராவிடர் ஜாதி சான்றிதழ் அளித்து வெற்றி பெற்றுள்ள மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த கல்பனா சுரேஷ் மீது நடவடிக்கை மேற்கொண்டு அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான 'விழிக்கண்' குழு நடத்திய விசாரணையில், கல்பனா சுரேஷ் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் இல்லை என்பதும், வேட்பு மனுவுடன் அவர் தாக்கல் செய்திருப்பது போலி ஜாதி சான்றிதழ் என்பதும் கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவர் மீது



கல்பனா சுரேஷ்

நடவடிக்கை எடுக்கக்கோரி மாநில தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கை அனுப்பப்பட்டதுடன், தோளப்பள்ளி ஊராட்சிமன்றத் தலைவர் கல்பனா சுரேஷ் ஊராட்சி நிர்வாகத்தின் காசோலையில் கையொப்பமிடும் அதிகாரத்தையும் முடக்கம் செய்து கடந்த 2023 ஜனவரி மாதம் ஆட்சியர் உத்தரவிட்டார்.

இதனிடையே, இந்த முறைகேடு தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து தோளப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் கல்பனா சுரேஷ் மீது எஸ்சி, எஸ்டி பிரிவு, மோசடி செய்தது உள்பட 7 பிரிவுகளின் கீழ் வேப்பங்குப்பம் போலீஸார் கடந்த 2022 டிசம்பர் 31-ஆம் தேதி வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில், போலி ஜாதி சான்றிதழ் அளித்து தேர்தலில் வெற்றி பெற்ற தோளப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் கல்பனா சுரேஷை தகுதிநீக்கம் செய்து ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் முதன்மை செயலாளர் ககன்தீப் சிங் பேடி செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

# ஆளுநர் தேநீர் விருந்து: திமுக கூட்டணி கட்சிகள் புறக்கணிப்பு

**சென்னை, ஆக.13:** சுதந்திர தினத்தையொட்டி, ஆளுநர் ஆர்.என்.ரவி அளிக்கவுள்ள தேநீர் விருந்தை திமுக கூட்டணிக் கட்சிகள் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

சுதந்திர தினத்தின் போது, ஆளுநர் மாளிகையில் முதல்வர் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்களுக்கு ஆளுநர் தேநீர் விருந்து அளிப்பது மரபு. அதனடிப்படையில் வரும் ஆக. 15 ஆம் தேதி ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்து அளிப்பதற்காக அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த நிலையில், ஆளுநரின் தேநீர் விருந்தை காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சிகள் புறக்கணிப்பதாக தெரிவித்துள்ளன.

**செல்வப்பெருந்தகை (காங்.):** தமிழகத்தின் ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றதிலிருந்து மாநில நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதுடன், மாநில அரசின் செயல்பாடுகளுக்கும் முட்டுக்கட்டைப் போவதால், ஆளுநரின் தேநீர் விருந்தை காங்கிரஸ் கட்சி புறக்கணிக்கும்.

**கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** கூட்டாட்சியை, அரசியலமைப்பை மதிக்காத ஆர்.என்.ரவி, ஆளுநர் பதவியில் நீடித்திருப்பதால் அவரோடு தேநீர் விருந்து என்ற பேச்சுக்கே இடமில்லை.

அவரது அழைப்பை மீண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நிராகரிக்கிறது.

**இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்):** தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும், சட்ட மசோதாக்களும் உரிய முறையில் ஏற்கப்படாமல் மக்களாட்சி மாண்புக்கும், மரபுக்கும் எதிராக ஆளுநர் செயல்பட்டு வருகிறார். மாநில உரிமைகளை நிலைநாட்ட சட்டப் போராட்டம் நடத்தும் நெருக்கடியை உருவாக்கி வருகிறார். இதனால் ஆளுநரின் தேநீர் விருந்தை புறக்கணிக்கிறோம்.

இதே போல மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட திமுக கூட்டணிக் கட்சிகளும் ஆளுநரின் தேநீர் விருந்தை புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

# திருச்சியில் காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள் மாநாடு ஆக. 16–இல் தொடக்கம்

**திருச்சி, ஆக. 13:** தமிழ்நாடு காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள் சங்கத்தின் சார்பில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள் மாநாடு திருச்சியில் வரும் 16, 17, 18 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் தலைவர் டாக்டர் ஏ. வேணுகோபால், செயலர் டாக்டர் ஜவஹர் நாகசுந்தரம், பொருளாளர் டாக்டர் எஸ். ஞானதிலகன் ஆகியோர் திருச்சியில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

"ராக் இஎன்டி 2024' என்ற தலைப்பில் இந்த மாநாடு, சங்கத்தின் மாநிலத் தலைவர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் தலைமையில் திருச்சி ஹோட்டல் கோர்ட்யார்டு மேரியட்டில் வரும் 16, 17, 18 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது. மாநாட்டை தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக துணை வேந்தர் கே. நாராயணசாமி தொடங்கி வைக்கிறார். தமிழகம், புதுச்சேரியிலிருந்து 700–க்கும் மேற்பட்ட காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர்கள் பங்கேற்கின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து சிறப்பு நிபுணர்கள் பங்கேற்று புதிய மருத்துவ முறைகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

மாநாட்டில், 32 அரங்குகள் அமைக்கப்பட்டு ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள், அதிநவீன மருத்துவ உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. வரும் 17–ஆம் தேதி பிற்பகலுக்கு மேல் முதல்முறையாக தமிழில் மாநாடு நடைபெறுகிறது.

# முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீதான மேலும் இரு வழக்குகள் ரத்து

## உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஆக. 13:** அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீதான மேலும் இரு வழக்குகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

2022 –ஆம் ஆண்டு திண்டிவனத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து சி.வி.சண்முகம் அவதூறாக பேசியது தொடர்பான வழக்கில் திங்கள்கிழமை தீர்ப்பளித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் அந்த வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து அனுமதியின்றி போராட்டம் நடத்தியதாக அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திமுக நிர்வாகி அளித்த புகாரின் பேரில், முன்னாள் அமைச்சரும், தற்போதைய எம்.பி.யுமான சி.வி.சண்முகம் மீது அனுமதியின்றி போராட்டம் நடத்தியது, கரோனா விதிகளை மீறியது என இரு வழக்குகள் விழுப்புரம் நகர காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டன.

இதில் திமுக நிர்வாகி அளித்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால், இவ்விரு வழக்குகளையும் ரத்து செய்ய வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் சி.வி. சண்முகம் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை செவ்வாய்க்கிழமை விசாரித்த நீதிபதி ஜெயச்சந்திரன், 'இரண்டு வழக்குகளிலும் சரியான பிரிவுகள் சேர்க்கப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையில் குறைபாடுகள் உள்ளன. அதனை சரி செய்ய காவல்துறை தரப்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போராட்டம் நடைபெற்ற காலத்தில் கரோனா விதிகள் அமலில் இல்லாத நிலையில், அந்த விதிகளை மீறியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே சம்பவத்துக்காக பல வழக்குகளை பதிவு செய்ய முடியாது. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை' என்று கூறி, சி.வி.சண்முகத்துக்கு எதிரான இரு வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார்.


கோப்பு எண்.: P-13013/55/20024-UDID/IT/STATISTICS (E-38550 )

**இந்திய அரசு**
**சமூக நீதி & மேம்பாட்டுத்துறை அமைச்சகம்**
**மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுத் துறை**
**(திவ்யங்ஜன்)**

அறை எண்.520, 5 ஆவது தளம், B-2 விங்க், பண்டிட் தீன்தயாள் அந்த்யோதயா பவன், CGO காம்பிளக்ஸ், புது தில்லி-110003

நாள்: 13 ஆகஸ்ட், 2024

**பணி காலியிட அறிவிக்கை**

தொழில்வல்லுநரான இளைஞர் ஒருவரை ஆரம்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு (நீட்டிக்கத்தக்கது), முழுக்க ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வரையறைகள் மற்றும் இதர விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான விரிவான விபரங்களை (https://depwd.gov.in/) என்ற இணையத்தளத்தில் காணலாம். ஆர்வமும் தகுதியும் கொண்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை அறிவுறுத்தப்பட்ட வடிவில் கீழே கையொப்பம் இட்டுள்ளவருக்கு 14 செப்டம்பர், 2024-க்குள் அனுப்பலாம். விண்ணப்பங்களை ஒற்றை PDF ஆவணமாக மின்னஞ்சல் வழியாக மட்டுமே udidteam2017@gmail.com க்கு அனுப்ப வேண்டும்.

ஒம்/-
(ஜஸ்பிர் சிங்)
இந்திய அரசின் நேருதவிச் செயலாளர்

CBC38117/11/0014/2425



**ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்**
**நகை ஏல அறிவிப்பு**

எங்கள் நிறுவனத்தில் 12 மாதத்தவணை 30.04.2023, 6 மாதத் தவணை 31.10.2023 வரை ஈடு வைக்கப்பட்டு காலவரையறை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக் கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற ஏஜென்ட் மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை. அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் விடப்படும். நகை அடகு வைத்தவர் இறந்திருந்தாலும், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வாரிசுக்கும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும் மேலும் வேறு தேதியில், வேறு இடத்தில் ஏலத்தை நடத்தவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏலம் நடைபெறும் இடம்: ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், 106, முதல் மாடி, MS பிளாசா, GST ரோடு, செங்கல்பட்டு 603001

| ஏல தேதி | நேரம் | நகை அடுவைக்கப் பட்டுள்ள கிளைகள் | நகையை மீட்க கடைசி தேதி |
|---|---|---|---|
| 24.08.2024 | காலை 11.00 மணி | ஐயப்பன்தாங்கல், குரோம்பேட்டை, கீழ்கட்டளை, கேளம்பாக்கம், குன்றத்தூர், மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, பம்மல், பெருங்குடி, சேலையூர் II, தாம்பரம் II & III, படப்பை, செங்கல்பட்டு, கூடுவாஞ்சேரி, கல்பாக்கம் II, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் II, மதுராந்தகம், ஸ்ரீபெரும்புதூர், திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், சாலவாக்கம், செய்யூர், வண்டலூர், அச்சரப்பாக்கம், சந்துவார்சத்திரம், பேட்டவாக்கம், பல்லாவரம், மறைமலை நகர். | 23.08.2024 |

ஏலம் நடைபெறும் இடம்: ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், எண்:150, முதல் மாடி, TNHB–காக்களூர் பை பாஸ் ரோடு, திருவள்ளூர் – 602 001.

| ஏல தேதி | நேரம் | நகை அடுவைக்கப் பட்டுள்ள கிளைகள் | நகையை மீட்க கடைசி தேதி |
|---|---|---|---|
| 24.08.2024 | காலை 11.00 மணி | ஆவடி II, கும்மிடிப்பூண்டி பொன்னேரி, பூந்தமல்லி, ரெட்ஹில்ஸ், திருநின்றவூர், திருவள்ளூர் I & II, திருத்தணி, ஊத்துக்கோட்டை, சோளிங்கர், மீஞ்சூர், பட்டாபிராம், பெரியபாளையம், பேரம்பாக்கம், காரனோடை, அம்பாக்கம் | 23.08.2024 |

ஏலம் நடைபெறும் இடம்: ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட், எண்:6, 2வது மாடி, சோராண்டோ பில்டிங், L.B. ரோடு, அடையாறு, சென்னை – 600020.

| ஏல தேதி | நேரம் | நகை அடுவைக்கப் பட்டுள்ள கிளைகள் | நகையை மீட்க கடைசி தேதி |
|---|---|---|---|
| 24.08.2024 | காலை 11.00 மணி | அடையாறு, ஆலந்தூர், அம்பத்தூர் I & II, தி.நகர், ராயபுரம், அண்ணாநகர் I & III, அரும்பாக்கம், அயனாவரம், ஜார்ஜ் டவுன், கே.கே.நகர் II, கொளத்தூர், மாதவரம், மணலி, மவுண்ட் ரோடு II, மயிலாப்பூர், நெசப்பாக்கம், பாடி, பெரம்பூர், போரூர் & II, சோழிங்கநல்லூர், திருவான்மியூர், திருவொற்றியூர் II, தண்டையார்பேட்டை, வேளச்சேரி, வில்லிவாக்கம், விருகம்பாக்கம், வியாசர்பாடி, திருமுல்லைவாயில், மதுரவாயில், மெட்ராஸ் மெயின் கிளை. | 23.08.2024 |

ஏலதாரர்
குருசாந்தி
சைதாப்பேட்டை, சென்னை–15

இப்படிக்கு
பொது மேலாளர் (நகைக்கடன்)
அடையாறு, சென்னை–20.



**RBL வங்கி லிட்.**

பதிவு அலுவலகம்: 1ஆவது சந்து, ஷாபுரி, கோலாபூர்-416001.
கிளை அலுவலகம்: சாய் கல்யாணி டவர்ஸ், 105/56, G.N.செட்டி சாலை, தி.நகர், சென்னை, தமிழ்நாடு - 600017.

**E-ஏல விற்பனை அறிவிப்பு** (SARFAESI சட்டம் 2002-இன் கீழ்)

**வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்தினை விற்பனை செய்வதற்காகக் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, ("விதிகள்") விதி 8(6)-இன் கீழான E-ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர், ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், வங்கிக்கு வர வேண்டியுள்ள நிலுவைத்தொகையைக் கீழே விவரித்துள்ளபடி வட்டியுடன் திரும்பப் பெறும் பொருட்டு, RBL வங்கி லிட்., ("ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தார் / வங்கி") நிறுவனத்தாரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் (இனி மொத்தமாகச் "சொத்து" எனக் குறிப்பிடப்படும்) SARFAESI சட்டப் பிரிவு 14 & உட்பிரிவு 13(4) மற்றும் அதன் கீழான விதிகள் ஆகியவற்றின்படி வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கீழே விவரித்துள்ள வகையில் **நேரடி சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டா"** எனும் முறையிலும் மேற்கண்ட விதிகளில் 8 & 9 ஆகியவற்றின்படி ஏலப்புள்ளிகளை வரவேற்றும் **24.09.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்கான e-ஏல அட்டவணை பின்வருமாறு:

**கடன் தரப்பினர், நிலுவைத்தொகைகள் மற்றும் சொத்து ஆகியவற்றின் சுருக்கமான விவரம்:**

| வ. எண் | கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்(கள்) பெயர் | சொத்து விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பின்படி தொகை / SARFAESI சட்டத்தின் கீழான கோரிக்கை மற்றும் சுவாதீன அறிவிப்பு நாள் | ஆய்வு நாள் மற்றும் நேரம் | குறைந்தபட்ச விலை / டேவணித்தொகை (EMD) / ஏல உயர்வுத் தொகை | E-ஏல நாள் / நேரம் | ஆவணங்களுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | அதிகாரப்பூர்வ அலுவலர் பெயர் / தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | **1. திரு. வருண் A,** எண் 2b, ஸ்ரீ கிருஷ்ணா கிருபாலயா அபார்ட்மெண்ட்ஸ், எண் 26/10, ஆதாகிருஷ்ணன் தெரு, அலமேலுமங்கா கல்யாண மண்டபம் எதிரில், தி.நகர், சென்னை – 600 017. **இன்னொரு முகவரி:** எண் 50, IIஆவது தளம், ஸ்டெர்லிங் அவென்யூ, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034. **இன்னொரு முகவரி:** எண் 12, ஸ்ரீ ராம் வருண் என்கிளேவ், அடுக்கக எண் 3, IIஆவது தளம், வெட்டரினரி காலனி, விஜயவாடா, கிருஷ்ணா மாவட்டம் - 520004. கடன்தாரர் மற்றும் அடமானதாரர். **2. திருமதி. ராதா லீலா (கூட்டுக் கடன்தாரர்), 3. திரு. Mr/S. அனி என்டர்பிரைசஸ்,** பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் உரிமை.: திரு. வருண் A (கூட்டுக் கடன்தாரர்), எண் 2 & 3-இல் உள்ளவர்களின் குடியிருப்பு முகவரி: எண் 2b, ஸ்ரீ கிருஷ்ணா கிருபாலயா அபார்ட்மெண்ட்ஸ், எண் 26/10, ஆதாகிருஷ்ணன் தெரு, அலமேலுமங்கா கல்யாண மண்டபம் எதிரில், தி.நகர், சென்னை – 600 017. | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. இரண்டாவது தளத்தில் உள்ள அடுக்கக எண் 3, "ஸ்ரீ ராம்'ஸ் வருண் என்கிளேவ்" என பெயரிடப்பட்டது, அடித்தளப் பரப்பு 2270 சதுர அடி மற்றும் பொதுப் பரப்பு 454 சதுர அடி மற்றும் கார் நிறுத்துமிடப் பரப்பு 150 சதுர அடி, இத்துடன் நிலத்தின் பிரிபடாப்பங்கு உட்பட மொத்தப் பரப்பளவு 89.8 சதுர யார்டில் அடங்கியது, இது 449 சதுர யார்டில் அடங்கியது, வளாகத்தில் உள்ள மனை எண் 12, கதவு எண் 54-16/1/27/A, சர்வே எண் 396/3, 396/2, 396/1, 398/1, 398/2 & 405. அமைவிடம் - குணதாலா கிராமம், குணதாலா கிராம ஊராட்சி, விஜயவாடா பேரூராட்சி, கிருஷ்ணா மாவட்டம். **நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு:** மனை எண் 11-இல் உள்ள சொத்து - 88.0 அடி, **தெற்கு:** 60 அடி அகலமுள்ள சாலை – 46.2 அடி, **மேற்கு:** மனை எண் 13-இல் உள்ள சொத்து - 88.0 அடி, **வடக்கு:** மனை எண் 18-இல் உள்ள சொத்து - 45.10 அடி. அடுக்ககத்தின் **எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு:** படிக்கட்டுகள், லிஃப்ட், தாழ்வாரம், **தெற்கு:** திறந்தவெளி, **மேற்கு:** திறந்தவெளி, **வடக்கு:** திறந்தவெளி. | **28.07.2023 நாள்படி ரூ.1,31,27,945.52/-** (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தொரு இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து மற்றும் பைசா ஐம்பத்திரண்டு மட்டும்) **கோரிக்கை அறிவிப்பு நாள்: 04.08.2023 சுவாதீன அறிவிப்பு நாள்: 26.07.2024** | **23.09.2024 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 02.30 மணி வரை** | **ரூ.1,23,93,000/-** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மட்டும்) **டேவணித்தொகை (EMD) : ரூ.12,39,300/-** (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தொன்ப தாயிரத்து முந்நூறு மட்டும்) **ஏல உயர்வுத் தொகை: ரூ.50,000.00/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) | **24.09.2024 அன்று முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை** எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் காலநீட்டிப்புடன் | **23.09.2024 அன்று மாலை 05.00 மணி அல்லது அதற்குமுன்** | **குணசீலன் A / 9600144498 / gunaseelan.a@rblbank.com** |

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: (1)** E-ஏல விற்பனையானது e-ஏல இணையத்தளத்தின் மூலம் இணைய வழியில் நடக்கும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து e-ஏலத்தில் கலந்து கொள்ளும் முன்னர் ஏலத்தின் விரிவான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அது கிடைக்கும் இணையத்தளங்கள்: **https://www.bankeauctions.com & https://www.rblbank.com/pdf-pages/news. (2)** ஏலப்புள்ளியைத் தாக்கல் செய்யும் முன்பு சொத்து பற்றியும் அதன் விவரங்கள் குறித்தும் ஆய்வு செய்து நிறைவு கொள்ள வேண்டியது ஏலதாரர்களின் பொறுப்பு. **(3)** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் டேவணித்தொகை (EMD) விவரங்களையும் ஆவணங்களையும் **https://www.bankeauctions.com** இணையத்தளத்தின் வாயிலாகத் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தித் தாக்கல் செய்ய வேண்டும் (**https://www.bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையை **"Authorised Officer, RBL Bank Ltd."** எனும் பெயரிலான அட்டவணையிடப்பட்ட வணிக வங்கியின் கேட்பு வரைவோலை (D.D) மூலம் **23.09.2024 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள்** செலுத்த வேண்டும். **(4)** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் e-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான உதவி / இணைய வழிப் பயிற்சி பெற அணுகுக: **M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., தொடர்பு எண்கள்: 7291981124 / 25 / 26. தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: திரு. வினோத் சவுகான்,** கைப்பேசி எண்: 9813887931 / திரு.பிரபாகரன், கைப்பேசி எண்: 7418281709, **மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com / tn@c1india.com.** சொத்து தொடர்பான கேள்விகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: **திரு. குணசீலன் A., அதிகாரப்பூர்வ அலுவலர் (கைப்பேசி எண்: 9600144498, மின்னஞ்சல்: gunaseelan.a@rblbank.com). (5)** எந்தக் காரணமும் முன்வைக்காமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது எல்லா ஏலப்புள்ளிகளையும் ஏற்க அல்லது நிராகரிக்க மற்றும் / அல்லது ஏலத்தை எந்த நேரத்திலும் தள்ளி வைக்க / ரத்துச் செய்ய வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு. இது தொடர்பாக அன்னாரின் முடிவே இறுதியானது.

**SARFAESI சட்டம் 2002-இன் கீழ் சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர் ஆகியோருக்கு அறிவிப்பது யாதெனில் மேற்குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கல் வாங்கல் ஆவணங்களின்படி அதன் மேல் வட்டி, தண்ட வட்டி, இதர வட்டி ஆகியவற்றுடனும் இதர தொகைகளுடனும் சேர்த்து E-ஏல நாளுக்கு முன் செலுத்தி விட வேண்டும். தவறினால் சொத்து ஏலம் விடப்பட்டு / விற்பனை செய்யப்பட்டு நிலுவைத் தொகைகள் திரும்பப் பெறப்படும்.

**நாள்: 14.08.2024, இடம்: சென்னை** **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், RBL வங்கி லிட்.**



**வரி விளம்பரம்**

**PUBLIC NOTICE**
CHANGE OF NAME

**CHANGE OF NAME**
I, **M.SANKAR,** F/o S.Shanthi Priya, declare that my Daughter Born on 12-06-2004, (Dist. of Birth: Tiruvallur) Plot No.54, Gokul Garden, Melnalathur PO, Tiruvallur-602002, have changed my daughter's name from **S.SHANTHI PRIYA** to **SHANTHIPRIYA S** for all future purposes.
M.Sankar (Father)

**CHANGE OF NAME**
I, **M. PARVEEN,** wife of Thiru F. Mohammed Aamil, born on 5th May 1991, (District of Birth: Tiruvallur), residing at No. 20, Muthumaariamman Koil Street, Madhavaram, Chennai-600 060, shall henceforth be known as **PARVEEN**
M. Parveen
Chennai, 30th May 2024.

**CHANGE OF NAME**
I, **PREMKISHORE BISANI DHANRAJJI** S/o. Dhanraj Bisani, Date of Birth : 24.02.1961, (native district: Jaisalmer), residing at AC-82, 1st Floor, Plot No: 4989, 3rd Street, Anna Nagar, Chennai-600040, Tamilnadu, shall henceforth be known as **PREM KISHORE BISANI**
Premkishore Bisani Dhanrajji
Chennai, 13th August 2024



**கடன் வசூல் தீர்ப்பாயம் எண்.2, சென்னை**
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

**DRC எண். 128 / 2024-ல்**
**TA எண். 571 / 2022**

**பேங்க் ஆஃப் பரோடா**
**பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை,**
எண்.123, இடை தளம், துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. வியமாக ... **சான்றிதழ் வைத்திருப்பவர்**

-எதிரிடை-

**திரு.ராஜாராம்** ... **சான்றிதழ் கடன்தாரர்**
**பெறுநர்**
**M/s. ராஜாராம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு.G.ராஜாராம்,**
238, SIDCO பெண்கள் இண்டஸ்ட்ரியல் பூங்கா, திருமுல்லைவாயல், சென்னை - 600 062.

**கேட்பு அறிவிப்பு**
(1961ம் வருடத்திய வருமான வரி சட்டம் இரண்டாம் அட்டவணை விதி 2-ன் கீழ் மற்றும் 1993-ம் வருடத்திய கடன் வசூல் மற்றும் திவால் சட்டம் பிரிவு 29-ன் கீழ்)

மாண்புமிகு முன்னிலை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம் -2, சென்னை அவர்கள் வழங்கிய **27.05.2024** தேதியிட்ட கடன் வசூல் சான்றிதழ் விதிமுறைகளின் படி (அட்டவணையுடன் நகல் இணைக்கப்பட்டுள்ளது) **T.A.எண்.571/2022-ல் ரூ.39,22,336.00 (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து முன்னூற்று முப்பத்து ஆறு மட்டும்)** மேலும் அதனுடன் 09.03.2021 முதல் முழு தொகை செலுத்தப்படும் தேதி வரை ஆண்டுக்கு வட்டி 10% (சாதாரண வட்டி) பின்வட்டியுடன் சேர்த்து TA நிலுவையில் இருக்கும் போது அவர்களால் பெறப்பட்ட அனைத்து கடன் தொகைகளையும் கழித்த பிறகு மற்றும் சான்றிதழ் கடன்தாரர்களிடமிருந்து அட்டவணை சொத்துக்கள் விற்பதன் மூலம் விற்பனை தொகையானது வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை, சான்றிதழ் கடன்தாரருக்கு விற்பனை செயல் முறைகள் மூலம் செலுத்த வேண்டிய முழு தொகையையும் பெறப்படவில்லையெனில் அதற்கு சான்றிதழ் கடன்தாரர்கள் முழு தொகையையும் செலுத்துவதற்கு முழு பொறுப்பேற்க வேண்டும்.

2. எனவே, தாங்கள் மேற்படி தொகையை இந்த அறிவிப்பு பெறப்பட்ட **15 தினங்களுக்குள்** சான்றிதழ் வைத்திருக்கும் வங்கிக்கு செலுத்துமாறு கேட்டுகொள்ளப்படுகிறது. தவறினால் நடைமுறையில் உள்ள விதிகளின் படி கடன் வசூல் மேற்கொள்ளப்படும்.
3. மீண்டும் தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் வருமான வரி சட்டம் 1961, 2ஆம் அட்டவணை விதி 16 மற்றும் கடன் வசூல் திவால் சட்டம் 1993 பிரிவு 29ன் படி தாங்கள் வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியின் அனுமதியின்றி தங்களது சொத்துக்களை தாங்கள் மற்றும் தங்களின் பிரதிநிதிகள் யாரும் அடமானம் செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ சொத்து சம்பந்தப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலாது என எச்சரிக்கப்படுகிறீர்கள்.
4. தாங்கள் **04.11.2024 அன்று காலை 11.30 மணிக்கு** மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி பணம் செலுத்தும் நிலைமையை அறிக்கையை அளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. **27.06.2024 தேதியிட்ட இந்த கேட்பு அறிப்பானது தங்களுக்கு அனுப்பப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்ட காரணத்தால் தற்போது நாளிதழ்களில் வெளியிடப்படுகிறது.**

**09.08.2024** அன்று எனது கையொப்பமும் மற்றும் இந்த தீர்ப்பாயத்தின் முத்திரை இட்டு வழங்கப்பட்டுள்ளது.

**(S.சோஃபின் ரோஸ்)**
**வசூல் அதிகாரி**



HSBC

**தி ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பாங்கிங் கார்பொரேஷன் லிட்**

செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் சட்டம், 2002 கீழ் செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ், 2002படி விதி 8(6) கீழ் அசையாச் சொத்துக்களுக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்(கள்)க்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து தி ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பாங்கிங் கார்பொரேஷன் லிட் இடம் அடமானம் வைக்கப்பட்டு உள்ளது மற்றும் தி ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பாங்கிங் கார்பொரேஷன் லிட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு உள்ள இந்த சொத்து, திரு. முகம்மதுநூர் எஸ்.ஆசாம் மற்றும் திரு.ரத்வான் முகம்மது ஆசாம் இடமிருந்து தி ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பாங்கிங் கார்பொரேஷன் லிட்-க்கு 12 ஆகஸ்ட் 2024 அன்று செலுத்த வேண்டிய பாக்கியான **ரூ.80,927,360.14 (ரூபாய் எட்டு கோடியே ஒன்பது லட்சத்து இருபத்து ஏழாயிரத்து முந்நூற்று அறுபது மற்றும் பைசா பதின்நான்கு மட்டும்)** தொகையை வசூலிக்க எங்கு உள்ளதோ அந்த அடிப்படையில் மற்றும் என்ன நிலைமையில் உள்ளதோ அந்த அடிப்படையில் விற்கப்படுவதற்காக **10 செப்டம்பர் 2024** தேதியன்று மின்னணு ஏலம் நடத்துவதன் மூலம் விற்கப்படும்.

| கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரிகள் | சொத்தின் விவரம் | ரிசர்வ் விலை | இஎம்டி (ரிசர்வ் விலையில் 10%) |
|---|---|---|---|
| திரு. முகம்மதுநூர் எஸ். ஆசாம்<br>திரு. ரத்வான் முகம்மது ஆசாம் | அபார்ட்மெண்ட் நம்பர். 3 மற்றும் 4, 3ம் மாடி மற்றும் 4ம் மாடி, (டூப்ளெக்ஸ்) பழைய பிளாட் நம்.14, புதிய நம்.12, ஜகதாம்பாள் காலனி 2வது தெரு, ராயப்பேட்டை, புதிய நம்.4, பழைய நம்.12, ஜீவன் அபார்ட்மெண்ட்ஸ், நுங்கம்பாக்கம் சென்னை 600014. முறையே 3வது மற்றும் 4வது மாடியில் அமைந்துள்ள ஃப்ளாட் எண் 3 மற்றும் 4 ஒவ்வொன்றும் 2000 சதுர அடி பரப்பளவில் (சூப்பர் பில்ட் அப்) ஒவ்வொரு ஃப்ளாட்டுக்கும் 2 கவர்டு கார் பார்க்கிங் உடன் உள்ளன. | ரூபாய் 4,98,56,000/- (ரூபாய் நாலு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து ஐம்பத்தாறு ஆயிரம் மட்டும்) | ரூபாய் 49,85,600 (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்)<br>இஎம்டி தேதி மற்றும் நேரம்: 3 செப்டம்பர் 2024 அன்று பிற்பகல் 3 மணி அல்லது அதற்கு முன்பு<br>கணக்கு விபரம்:<br>கணக்கு எண் 010 909968 042<br>பயனாளியின் பெயர் - E-Auction EMD Suspense account number<br>IFSC Code: HSBC0400002 |
| பார்வையிடும் தேதி மற்றும் நேரம் | 27 ஆகஸ்ட் 2024 அன்று நேரம்: காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை | | |

மேற்படி சொத்து மின்னணு ஏலம் மூலம் விற்கப்படுவதாக இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது மற்றும் மின்னணு ஏலம் மற்றும் ஏல நடைமுறை **(10 செப்டம்பர் 2024)** அன்று https://www.bankeauctions.com (மின்னணு ஏலம் ஹவுஸ் இணைய தளம்) மூலம் ஆன்லைன் எலக்ட்ரானிக் பிட்டிங் முறையில் நடத்தப்படும். விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் விபரங்களுக்கு, தயவுசெய்து மின்னணு ஏலம் ஹவுஸ் இணைய தளம் (www.bankeauctions.com)/எச்எஸ்பிஸி இணையதளத்தை (www.hsbc.co.in) பாருங்கள்.

எங்கு உள்ளதோ அந்த அடிப்படையில் மற்றும் என்ன நிலைமையில் உள்ளதோ அந்த அடிப்படையில் சொத்து விற்கப்படும். மின்னணு ஏல விளம்பரத்தை வங்கியின் சார்பாக ஏதேனும் பொறுப்பு அல்லது பிரதிநித்துவம் செய்வதாக கருதப்படக் கூடாது. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள் சொத்து பற்றிய விபரங்களை சுயமாக விசாரித்து பார்வையிட்டு தீர்மானிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி டெண்டரை சமர்ப்பிக்கும் முன்பு அவர்களின் சொந்த பொறுப்பில் வாங்க விரும்பும் ஏலதாரர்கள் தீர்மானித்துள்ளதாக கருதப்படும். எந்தவொரு ஏலத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ஒத்திவைக்க / தள்ளி வைக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு முழுமையான உரிமை உண்டு.

ஆன்லைன் ஏல நடைமுறையில் மின்னணு ஏலம் பற்றிய விபரங்கள், ஆதரவு, நடைமுறை சம்பந்தமான உதவிக்கு வாங்க விரும்பும் ஏலதாரர்கள், விவரங்களுக்காக தொடர்பு கொள்ளலாம்: **திரு. பிரபாகரன், மொபைல் எண் 7418281709,** மின்னஞ்சல் ஐடி delhi@c1india.com

தேதி: 14 ஆகஸ்ட் 2024
இடம்: சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எச்எஸ்பிசி பாங்க்

# தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

புதன்கிழமை 14–8–2024
குரோதி ஆடி 29 ஹிஜ்ரி 1446 ஸபர் 8


## இலக்கு, இனி 2028 லாஸ் ஏஞ்சலீஸ்!

கோலாகலமான நிகழ்வுடன் பாரீஸில் ஒலிம்பிக் கொடி ஞாயிற்றுக்கிழமை இறக்கப்பட்டது. நான்கு வருடங்களுக்குப் பிறகு லாஸ் ஏஞ்சலீஸில் நடக்க இருக்கும் அடுத்த ஒலிம்பிக் போட்டியை எதிர்பார்த்து இனி விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் காத்திருப்பார்கள்.

ஒலிம்பிக் போட்டி நடக்கும் இடங்களின் பெயர்தான் மாறுகிறதே தவிர, பந்தய பதக்கப் பட்டியலில் இடம்பெறும் நாடுகளின் தரவரிசை பெரும்பாலும் மாறுவதில்லை. முதல் இரண்டு இடங்களை முந்தைய டோக்கியோ ஒலிம்பிக்கைப் போலவே, இந்த முறை பாரீஸிலும் அமெரிக்காவும், சீனாவும் பிடித்தன. அமெரிக்காவும், சீனாவும் தலா 40 தங்கப் பதக்கங்களை வென்றன என்றாலும், மொத்த பதக்க எண்ணிக்கையில் 126 பதக்கம் வென்ற அமெரிக்கா, 91 பதக்கம் வென்ற சீனாவை இரண்டாம் இடத்துக்குத் தள்ளியது.

ஒலிம்பிக் போட்டியைப் பொறுத்தவரை, டோக்கியோவானாலும் சரி, பாரீஸானாலும் சரி, அதற்கு முந்தைய ஒலிம்பிக் போட்டிகளானாலும் சரி, பெரிய அளவில் இந்தியாவுக்கு மாற்றம் இல்லை. பங்குபெறும் நட்சத்திர வீரர்கள் மாறுகிறார்களே தவிர, இந்திய அணியின் செயல்பாட்டிலும், பதக்கங்கள் எண்ணிக்கையிலும் பெரிய அளவில் மாறுதல் இல்லை என்பதுதான் நமது அனுபவம்.

கடந்த முறை டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டி இந்தியாவுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதற்குக் காரணம் நீரஜ் சோப்ரா வென்றெடுத்த தங்கப் பதக்கம். ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றபோது இந்தியாவின் எதிர்பார்ப்பு இரட்டிப்பு வேகத்தில் அதிகரித்தது.

இந்தமுறை முந்தைய டோக்கியோ ஒலிம்பிக்கின் சாதனையை விட மேம்பட்ட வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்கிற உற்சாகம் நமது வீரர்களுக்கும், அவர்களை ஊக்குவிக்கும் மனநிலை அரசுக்கும் இருந்தது. பாரீஸ் ஒலிம்பிக்குக்காக ரூ.470 கோடி ஒதுக்கப்பட்டபோது, இந்தமுறை நமது வீரர்கள் இரட்டை இலக்கப் பதக்கங்களுடன் திரும்புவார்கள் என்று எதிர்பார்த்தது பொய்த்துவிட்டது. தங்கம் மின்னாத ஆறு பதக்கங்களுடன் திரும்பி இருக்கிறார்கள் நமது வீரர்கள்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள் வென்ற இந்திய அணி, இந்த முறை 1 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் திரும்பி இருக்கிறது. எதிர்பாராத துரதிருஷ்டவசமான சூழலில், மல்யுத்தத்தில் வினேஷ் போகாட் தங்கப் பதக்கத்தை (குறைந்தபட்சம் வெள்ளிப் பதக்கத்தை) நூலிழையில் இழந்தது மிகப் பெரிய சோகம். அப்படியே அவர் வென்றிருந்தாலும்கூட நமது பதக்க எண்ணிக்கை முந்தைய டோக்கியோவை எட்டியிருக்குமே தவிர, இரட்டை இலக்க எண்ணை எட்டிப் பிடித்திருக்காது.

6 போட்டிகளில் நமது வீரர்கள் நான்காவது இடத்தைப் பிடித்தனர். அதுவே மூன்றாவது இடமாக இருந்திருந்தால் இரட்டை இலக்கத்தை எட்டியிருப்போம். 'இருந்தால், முடிந்தால்' என்று விளையாட்டுப் போட்டிகளில் ஆறுதல் அடைய முடியாது. வெற்றி தோல்விகள் அதன்மூலம் நிர்ணயிக்கப்படுவதில்லை. கடந்த முறை வென்ற பதக்க எண்ணிக்கையை எட்ட முடியவில்லை என்பது மட்டுமல்ல, பதக்கத் தரவரிசையில் 48–ஆவது இடத்திலிருந்து 70–ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதையும் வேதனையுடன் விமர்சிக்கத் தோன்றுகிறது.

இந்தியாவில் இருந்து 117 விளையாட்டு வீரர்கள் கொண்ட அணி பங்கெடுத்து பதக்க எண்ணிக்கையை அதிகரிக்க முடியாமல் தரவரிசையிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும் அவலம் குறித்து தீவிரமாக சிந்திக்க வேண்டிய தருணம் இது. நாம் சற்றும் எதிர்பார்க்காத வகையில் வினேஷ் போகாட் வென்றிருக்க வேண்டிய தங்கப் பதக்கம் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவருக்குத் தரப்பட வேண்டிய வெள்ளிப் பதக்கமும் விதிமுறைகள் காரணமாக கை நழுவியது பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியா அடைந்த மிகப் பெரிய ஏமாற்றம்.

பாட்மின்டனில் லக்ஷயா சென்னின் அற்புதமான விளையாட்டு அவருக்குப் பதக்கம் பெற்றுத் தரவிலையென்பதும், ஜெர்மனிக்கு எதிராக அரையிறுதி ஆட்டத்தில் நமது ஹாக்கி அணி நல்லதொரு வாய்ப்பை இழந்ததும், வட கொரியாவின் பாக் சோல் கம்மிடம் வெற்றி பெற வேண்டிய நிஷா தாஹியா மல்யுத்தத்தில் தோல்வியைத் தழுவியதும் மறக்க முடியாத அதிர்ச்சிகளாக நமது நினைவில் தொடரும்.

ஒலிம்பிக் போட்டிகள் குறித்த நமது அணுகுமுறையில் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். 40 தங்கப் பதக்கங்களை வென்ற சீனாவின் 23 பதக்கங்கள் நீச்சல், டேபிள் டென்னிஸ், துப்பாக்கிச் சுடுதல், பளு தூக்குதல் ஆகிய 4 விளையாட்டுகளிலிருந்து கிடைத்திருக்கின்றன. அமெரிக்காவுக்குக் கிடைத்த 40 தங்கப் பதக்கங்களில் 22 பதக்கங்கள் தடகளத்திலும், நீச்சலிலும் வெல்லப்பட்டவை. ஆஸ்திரேலியாவின் 18 தங்கப் பதக்கங்களில் 7 நீச்சலுக்கானவை. 20 தங்கப் பதக்கங்களை வென்ற ஜப்பான் 14 பதக்கங்களை 3 விளையாட்டுகளில் இருந்து பெற்றிருக்கிறது.

இந்தியாவும் தனக்கென்று சில விளையாட்டுகளை அடையாளம் கண்டு அவற்றில் வீரர்களுக்கு முழுமையான பயிற்சியை அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். துப்பாக்கிச் சுடுதல், மல்யுத்தம், குத்துச்சண்டை, ஈட்டி எறிதல், ஹாக்கி போன்றவை பல அற்புதமான விளையாட்டு வீரர்களை நமக்கு அடையாளம் காட்டியிருக்கின்றன. இந்த வீரர்களின் உதவியுடன் இளம் வீரர்களை அடையாளம் கண்டு, 2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இப்போதே நாம் தயாராக வேண்டும். ஜஸ்பால் ராணா தனக்கு பயிற்சியாளராக வேண்டுமென்று பிடிவாதமாக இருந்த மனு பாக்கர் துப்பாக்கிச் சுடுதலில் பதக்கம் வென்றதை சுட்டிக்காட்டத் தோன்றுகிறது.

2036–இல் இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்துவது இருக்கட்டும்; இப்போதைய கவனம் 2028 லாஸ் ஏஞ்சலீஸ்!

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

*எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும்; அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக் கூடாது.*

திருக்குறள் (எண் 596) ***அதிகாரம்: ஊக்கம் உடைமை***

### விவாத மேடை

முல்லைப் பெரியாறு விவகாரத்தில் புதிய அணை கட்டுவது தொடர்பாக மத்திய அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க கேரள அரசு முடிவு செய்திருப்பது பற்றி...

மு.நாகூர், *சுந்தரமுடையான்.*

*இதுபற்றி வாசகர்களின் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. கருத்துகளை பத்து வரிகளுக்கு மிகாமல் அஞ்சல் அட்டையில் எழுதி, வரும் திங்கள்கிழமைக்குள் கிடைக்குமாறு*
*விவாத மேடை பகுதி, தினமணி,*
*29, இரண்டாவது பிரதான சாலை,*
*அம்பத்தூர் தொழிற்பேட்டை,*
*சென்னை – 600 058*
*என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

*இமெயில்:* **edit.dinamani@gmail.com**

(ஆ–ர்)

# பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மை ஹிந்துக்கள்!



அர்ஜுன் சம்பத்

பாரத நாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த பொழுது பிரிட்டிஷ் இந்தியாவின் வங்காள மாநிலத்தில் சுதேசி உணர்வுகள், இந்திய தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் வலுப்படத் துவங்கின. வங்காளத்தில் 19 மற்றும் 20–ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி நாடு முழுவதும் எதிரொலித்தது.

வங்காளத்தில் தோன்றிய தேசிய எழுச்சி இந்தியா முழுவதும் பரவுவது ஆங்கிலேயர்களுக்கு சங்கடத்தை அளிப்பதாக இருந்தது. அதோடு மட்டுமல்ல, தேசிய எழுச்சியைத் தடுக்க வேண்டும், மக்களை மத அடிப்படையில் பிரித்தாள வேண்டும் என்கிற எண்ணத்தில் 1905, அக்டோபர் 16–இல் ஆங்கிலேய ஆட்சியாளர் வைஸ்ராய் கர்சன் வில்லி வங்கப் பிரிவினையை ஏற்படுத்தினார். பிரிட்டிஷ் இந்தியாவின் வங்காள மாநிலம் மேற்கு வங்கம், கிழக்கு வங்கம் என இரண்டாக பிரிக்கப்பட்டபோது வங்காளத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகை எட்டு கோடி.

கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்தார்கள். 3.1 கோடி கிழக்கு வங்க மொத்த மக்கள் தொகையில் 1.3 கோடி ஹிந்துக்களும், 1.8 கோடி முஸ்லிம்களும் இருந்தார்கள். கல்கத்தாவை தலைநகராக கொண்ட மேற்கு வங்கத்தில் மொத்த மக்கள் தொகை 5.4 கோடி. இதில் 4.2 கோடி ஹிந்துக்கள் 1.2 முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த மேற்கு வங்கத்திலும் கிழக்கு வங்கத்தில் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதிகளிலும் தேசிய எண்ணம் கொண்ட முஸ்லிம்களும் இணைந்து வங்கப் பிரிவினைக்கு எதிராகப் போராடினர்.

மத அடிப்படையில் மாநிலம் பிரிக்கப்பட்டதைக் கண்டு இந்தியா முழுவதும் எதிர்ப்பு அலை உருவாகியது. கங்கை நதியின் இரு கரைகளிலும் மக்கள் கூடி ஹிந்து –முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் ரக்ஷா பந்தன் கயிறு அணிந்து நல்லிணக்கத்தை வெளிப்படுத்தினார்கள். இந்திய மக்களின் போராட்டத்திற்குப் பணிந்து பிரிட்டிஷ் அரசு 1911–இல் வங்கப் பிரிவினையை ரத்து செய்தது. மீண்டும் ஒரே மாநிலமாக வங்காளம் திகழ்ந்தது. அப்போது இருந்த தேசியவாதிகள் இதை சுதந்திரப் போராட்டத்திற்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதினார்கள்.

அதன் பின்னர், நாடு முழுக்க சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றபோது, அதன் தீவிரத்தைக் குலைக்கும் விதத்தில்பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைத்து முஸ்லிம் லீக் கட்சியும் இஸ்லாமிய மதவாதிகளும் முகமது அலி ஜின்னா தலைமையில் போராட்டங்களைத் துவக்கினர். வங்காள மாநில முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் முஸ்லிம் லீக்குடன் இணைந்து பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக இருந்தனர்.

முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தி முஸ்லிம் லீகின் நேரடி நடவடிக்கை காரணமாக வங்க மாநிலத்தில் பெரும் கலவரங்கள் நிகழ்ந்தன. ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் அரசும் கலவரங்களைக் கட்டுப்படுத்த தவறியது. ஹிந்துக்களைப் பாதுகாக்கத் தவறியது. வேறு வழியில்லாமல் காங்கிரஸ் தலைவர்கள் பிரிவினைக்கு ஒப்புக் கொண்டார்கள்.

1947 ஆகஸ்ட் மாதத்தில் ஒட்டுமொத்த இந்திய நாடு, மத அடிப்படையில் பாகிஸ்தான் – இந்தியா என்ற இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. பிரிவினையின் போது நேரிட்ட கலவரங்களில் லட்சக்கணக்கான ஹிந்துக்கள் இடம் பெயர்ந்தனர்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள வங்காள மாநிலத்தின் கிழக்குப் பகுதி பாகிஸ்தானுடன் சேர்ந்துவிட்டது. அப்பொழுது கிழக்கு பாகிஸ்தானில் ஹிந்துக்களின் மக்கள் தொகை 23 சதவீதமாக இருந்தது.

பாகிஸ்தானுடன் இணைந்துவிட்ட கிழக்கு வங்க மாநிலத்தில் ஹிந்துக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. பாகிஸ்தான் உதயமானதும் முஸ்லிம் நாடாக அறிவிக்கப்பட்டு சிறுபான்மை ஹிந்துக்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். கிழக்கு வங்க ஹிந்துக்கள் மேற்கு வங்க மாநிலத்துக்கும், திரிபுராவுக்கும் அகதிகளாக வந்தனர்.

1947–இல் 23 சதவீதமாக இருந்த ஹிந்துக்கள் தற்பொழுது ஏழு சதவீதமாக குறைந்துவிட்டார்கள். அவர்களில் பலர் விரட்டியடிக்கப்பட்டனர், அல்லது கொல்லப்பட்டனர், அல்லது மதமாற்றம் செய்யப்பட்டனர். அந்த நிலையில் தான் இன்னொரு போராட்டம் உருவாகத் தொடங்கியது.

பாகிஸ்தான் அரசு உருதுவை தேசிய மொழியாக அறிவித்து, வங்க மொழி கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. கிழக்கு பாகிஸ்தானுக்கு நிதி ஒதுக்குவதில் பாகிஸ்தான் பாகுபாடு காட்டியது.

'பாகிஸ்தானால் கிழக்கு பாகிஸ்தான் பகுதி புறக்கணிக்கப்படுகிறது' என்று அங்கு செல்வாக்கு பெற்றிருந்த தலைவர் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் போராட்டம் கிளர்ந்து எழுந்தது.

பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் கேட்டு நடந்த போராட்டத்திலும் வங்கதேச சிறுபான்மை ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். பாகிஸ்தானிலிருந்து விடுதலை பெற 'முக்தி வாஹினி' அமைப்பு துவங்கப்பட்டது. பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதலால் பதிக்கப்பட்ட கிழக்கு பாகிஸ்தான் மக்கள் லட்சக்கணக்கானோர் இந்தியாவிற்குள் அகதிகளாக வர ஆரம்பித்தார்கள்.

இதையடுத்துதான், இந்திய ராணுவத்தின் உதவியுடன் பாகிஸ்தான் ராணுவத்திற்கு எதிராகப் போரிட்டு சுதந்திர வங்கதேசம் உதயமானது.

அந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய முஜிபுர் ரஹ்மான் 'வங்கபந்து' (தேசத் தந்தை) என்று அழைக்கப்பட்டார்.

1975–இல் நடந்த ராணுவப் புரட்சியில் வங்கதேசம் உருவாகக் காரணமான, அந்நாட்டுத் தந்தை என்று போற்றப்பட்ட அதிபர் முஜிபுர் ரஹ்மான் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய உறவினர்கள் 18 பேர் கொல்லப்பட்டார்கள். முஜிபுர் ரஹ்மானின் மகள்கள் ஷேக் ஹசீனா மற்றும் அவரது தங்கை ஷேக் ரெஹெனா வெளிநாட்டில் இருந்த காரணத்தினால் உயிர் பிழைத்தார்கள். இந்த கலவரத்தின் பொழுதும் ஹிந்துக்கள் தாக்கப்பட்டார்கள். கோயில்கள் இடிக்கப்பட்டன.

ஹிந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டார்கள். முஜிபுர் ரஹ்மான் குடும்பத்திற்கு இந்தியாவில் அடைக்கலம் கொடுக்கப்பட்டது. வங்கதேசத்தில் ராணுவ தளபதி ஜியாவுர் ரஹ்மான் தலைமையில் ராணுவ ஆட்சி நடைபெற்றது. அதனை தொடர்ந்து வறுமை, வேலை வாய்ப்பின்மை, கடன் சுமை, மக்கள் தொகை பெருக்கம் ஆகியவற்றால் வங்கதேசம் கடுமையாக பாதிக்கப்பட்டது. அரசியல் குழப்பங்கள் நீடித்தன.

**சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை வங்கதேச சிறுபான்மை ஹிந்துக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய அரசு மிகத் தீவிரமாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி சிறுபான்மை ஹிந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.**

பாகிஸ்தான் தூண்டுதலின் பேரில் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகள் வங்கதேச வளர்ச்சிக்குத் தடையாக இருந்தனர். சீனா உள்ளிட்ட கம்யூனிஸ நாடுகள் வங்கதேசத்தில் ஆதிக்கம் செலுத்தத் துவங்கின. மீண்டும் ராணுவப் புரட்சி ஹுசைன் முகமது எர்ஷாத் தலைமையில் நடந்து, ராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது. பின்னர், அமெரிக்கா உள்ளிட்ட வங்கதேசத்திற்கு கடன் கொடுக்கும் நாடுகளின் வற்புறுத்தலின் பேரில் தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜியாவுர் ரஹ்மானின் மகள் பேகம் கலிதா ஜியா பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். வங்கதேசம் ஜனநாயகத்தை சுவாசிக்கத் தொடங்கியது.

எனினும் அவரது ஆட்சியில் ஊழல், வறுமை தாண்டவமாடியது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் முஜிபுர் ரஹ்மான் மகள் ஷேக் ஹசீனா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கலிதா ஜியாவும் ஷேக் ஹசீனாவும் மாறி, மாறி ஆட்சியில் அமர்ந்தனர்.

தொடர்ந்து மூன்று முறை பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா கடந்த தேர்தலிலும் வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

2018–இல் ஹசீனா அரசால் திரும்பப் பெறப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு செல்லாது என்கிற உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, மாணவர் போராட்டத்தை வெளிநாட்டு சக்திகள் தூண்டிவிட்டன. திடீர் போராளிகள் இலங்கையில் ராஜபட்ச குடும்பத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தி கொழும்பு நகரில் அதிபர் மாளிகையைத் தாக்கி கைப்பற்றியதைப் போல, வங்கதேசத் தலைநகரான டாக்காவிலும் வங்கதேசம் முழுவதும் வன்முறையில் ஈடுபட்டனர்.

வங்கதேச உச்ச நீதிமன்றம் சுதந்திர போராட்ட வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டை 5 சதவீதமாக குறைத்த பிறகும் கூட பெரும் வன்முறை வெடித்தது. பிரதமர் ஷேக் ஹசீனா உயிர் தப்பி இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

வங்கதேசத்தில் கலவரம் நின்றபாடில்லை. இந்தக் கலவரத்தில் வங்கதேசத்தில் சிறுபான்மையினராக உள்ள ஹிந்துக்கள் குறிவைத்து தாக்கப்படுகின்றனர். அவர்களுடைய சொத்துகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. கோயில்களின் மீது தாக்குதல், தீ வைப்பு, பகவத் கீதை எரிப்பு, ஹிந்துப் பெண்கள் மீது பாலியல் தாக்குதல் தொடர்கிறது. பாதுகாப்பு கொடுக்க வேண்டிய காவல் துறை, அமைதியை ஏற்படுத்த வேண்டிய ராணுவம் வேடிக்கை பார்க்கின்றன.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை வங்கதேச சிறுபான்மை ஹிந்துக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய அரசு மிகத் தீவிரமாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி சிறுபான்மை ஹிந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

இன்று ஆகஸ்ட் 14. பாரதம் துண்டாடப்பட்ட நாள். பாகிஸ்தான் உதயமான நாள். லட்சக்கணக்கான ஹிந்துக்கள் பாகிஸ்தானில் கொல்லப்பட்ட நாள். கோடிக்கணக்கான மக்கள் அகதியாக இந்தியாவிற்கு வந்த நாள். பிரிவினையின் துயரங்களை வார்த்தைகளால் வடிக்க இயலாது.

பாகிஸ்தானும் வங்கதேசமும் முஸ்லிம் மத அடிப்படைவாத தேசங்களாக திகழ்கின்றன. ஆனால் இந்தியா இன்னும் மத சார்பற்ற நாடாக இருக்கிறது. அனைத்து மதத்தவர்களும் ஒன்றுபட்டு வாழ முடிகிறது. இதற்கு காரணம் இந்தியாவில் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக இருப்பது தான்.

இதை நமது இஸ்லாமிய சகோதரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் அவர்களுக்கு இருக்கும் சம உரிமையும் சம வாய்ப்பும் சுதந்திரமும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் ஹிந்துக்களுக்கோ, பிற சிறுபான்மையினருக்கோ இல்லை என்பதை அவர்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால், எந்த அளவுக்கு அவர்களை சகோதரத்துவத்துடன் இந்தியா இணைத்துக் கொண்டிருக்கிறது என்பது புரியும்.

வங்கதேசத்தில் மீண்டும் அமைதி நிலவ வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும்.


கட்டுரையாளர்:
தலைவர், இந்து மக்கள் கட்சி.


## வாசகர் அரங்கம்

**கடந்த வாரம் கேட்கப்பட்ட 'கேரள மாநிலம் வயநாட்டில் மழை வெள்ளம், நிலச்சரிவு சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்படுவது பற்றி...' என்ற கேள்விக்கு வாசகர்களிடமிருந்து வந்த கருத்துகளில் சில...**

### கடுமையான இயற்கைப் பேரிடர்

உயிர் இழந்தவர்களின் உடல்கள், மற்றும் உடல்பாகங்கள் 50 கி.மீ. தொலைவில் அண்டை மாவட்டங்களில் கிடைத்துள்ள கொடுமையான நிலச்சரிவு. கிராமங்கள் முழு வதுமாக அழிந்துவிட்டன. வீடுகள் இழப்பு, சொந்தங்களின் இழப்பு, உடைமைகள் இழப்பு என பல இழப்புகள் ஏற்பட்டுள்ள வயநாடு மக்களின் மறுவாழ்வு நீண்ட கால சவாலாக உள்ளது. நிவாரணம் என்பது தற்காலிகமாகவே அமையும். வயநாடு மிகப் பெரிய பேரழிவை சந்தித்துள்ள நிலையில், இம்மக்களின் துயரத்தைப் போக்க மத்திய அரசு மிக கடுமையான இயற்கைப் பேரிடராக அறிவிக்க வேண்டும். கேரள மக்களுக்கு மத்திய அரசு உதவி தொடர்வதன் அவர்களின் வாழ்வாதரம் பாதுகாக்கப்படும்.

**துரை.பிருதிவிராஜ்,** *மதுராந்தகம்.*

### தொய்வின்றி உதவி நடவடிக்கைகள்

கோரிக்கை நியாயமானது. அப்படி அறிவிக்க இயலாதபடி விதிகள் இருந்தால் அதில் திருத்தம் கொண்டுவருவது பற்றி மத்திய அரசு யோசிக்க வேண்டும். இந்த இயற்கைச் சீற்றத்தின் காரணமாக வீடு, உடைமைகள், உறவினர்களை இழந்தவர்கள் ஏராளம். அதனால் அவர்களுக்குத் தாராளமாக உதவ வேண்டும். வீடு இழந்து தவிக்கின்ற குடும்பங்கள், தாய் தந்தையரை இழந்து நிற்கின்ற குழந்தைகள், உறவினர்களை இழந்தவர்கள், ஆவணங்களை இழந்தவர்கள், மாணவர்களின் ஏடுகள் மற்றும் பாட நூல்கள், மற்ற ஆவணங்களை உடனே வழங்கும் பணிகளை மாநில அரசும், மத்திய அரசும் தொய்வின்றி செய்ய வேண்டும்.

**குரு.பழனிசாமி,** *கோயம்புத்தூர்.*

### தேசியப் பேரிடர்

வயநாட்டில் மழைவெள்ளம் நிலச்சரிவால் பல மலைக்கிராமங்கள் உருக்குலைந்து போயுள்ளன. வீடுகள், பள்ளிகள், வழிபாட்டு இடங்கள் அனைத்தும் மண்மூடிப் போயின. உயிர் பிழைத்தோர் இருப்பிடம் இன்றி, உறவினர்கள் இன்றி சோகத்தின் பிடியில் உள்ளனர். பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்த மக்களுக்கு விரிவான மறுவாழ்வு அளிக்க, இயற்கைப் பேரிடரைத் தாங்கும் வகையிலான உள் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். வயநாடு மழை வெள்ள நிலச்சரிவு சம்பவத்தைத் தேசியப் பேரிடராக அறிவிப்பதின் மூலமே நிலைமையை சரி செய்ய முடியும். அதனால் இந்த துயர சம்பவத்தை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும்.

**எஸ்.சிறீகுமார்,** *கல்பாக்கம்.*

### புறக்கணிக்கப்பட்ட எச்சரிக்கை

கேரள மாநிலம் வயநாடு மழைவெள்ளம் நிலச்சரிவு சம்பவம் உலகையே உலுக்கியிருக்கிறது. ஐ.நா.சபையின் பருவநிலை மாற்றம் குறித்த குழு, மூன்றாண்டுகளுக்கு முன்பே எச்சரித்திருந்தும், மாதவ் காட்சில் அறிக்கை சுட்டிக்காட்டிய எச்சரிக்கைகளையும் கேரள அரசு பொருட்படுத்தவில்லை. மேலும் வயநாடு பேரிடருக்கு சட்டவிரோத வாழ்விட விரிவாக்கமே காரணம் என்றும் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அறிக்கை வெளியிட்டிருப்பதையும் புறந்தள்ள முடியவில்லை! எப்படி இருப்பினும் அப்பாவி மக்களின் அவல வாழ்வை கவனத்தில் கொண்டு, மத்திய அரசு தக்க உதவிகள் செய்ய வேண்டும் என்பதே நடுநிலையார்கள் எண்ணுகிறார்கள்!

**பவளவண்ணன்,** *நடுவிக்கோட்டை.*

### இயற்கைச் சீற்றம்

ஆண்டுதோறும் பிகார், அஸ்ஸாமில் முறையே கங்கை, பிரம்மபுத்ராவில் மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைந்து உயிரிழப்பும் சேதமும் ஏற்படுகின்றன. உத்தரகண்ட் மழை, நிலச்சரிவில் பலர் உயிரிழந்தனர். கேரள சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை சரியாகத் தோன்றினாலும் பிற மாநிலங்களில் நிகழும் இயற்கைச் சீற்றங்களையும் தேசிய பேரிடராக அறிவிக்க கோரிக்கை எழும். பல மாநிலங்கள் ஒரே சமயத்தில் இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாகி பேரழிவு ஏற்பட்டால் தேசிய பேரிடராக அறிவிக்கலாம்.

**கே.எ.நாராயணன்,** *மருங்கூர்.*

### துரித விசாரணை தேவை

வயநாடு நிலச்சரிவை தேசியப் பேரிடராக அறிவிப்பது காலத்தின் கட்டாயம். இந்த துயர நிகழ்வு உலகளவில் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் தந்துள்ளது. பாதிப்புக்கு உள்ளான பகுதியை செய்தி தொலைக்காட்சிகளில் அனைவருமே கண்டனர். இது பெரும் பேரிடர் என்று கட்சி பேதமில்லாமல் அனைவருமே ஒப்புக்கொள்வார்கள். எனவே இந்த துயர நிகழ்வினை 'தேசிய பேரிடராக' மத்திய அரசு அறிவிக்க வேண்டும். மேலும் இதனைப் பற்றிய துரித விசாரணையை மேற்கொள்ள உயர்நிலைக் குழுக்கள் அமைக்கலாம். மேலும் மலை வாழ் மக்கள் பாதுகாப்பினை உறுதிபடுத்த வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்.

**எம்.சண்முகம்,** *கொங்கணாபுரம்.*

### இணைந்து செயல்பட வேண்டும்

வயநாடு துயரச் சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவிக்க பேரிடர் மேலாண்மை சட்டம் அனுமதிக்கிறதா என்று ஆராய்ந்து கொண்டிருக்காமல், மனிதாபிமான அடிப்படையில் இதனை அணுக வேண்டும். சம்பவம் நடந்த சில மணி நேரத்திலேயே தேசியப் பேரிடர் மீட்புக் குழுவும் ராணுவமும் மாநில குழுக்களும் தன்னார்வ குழுக்களும் இடரில் சிக்கிய மக்களை மீட்க இறங்கிவிட்டன. பிரதமர் நிதியிலிருந்து ரூ.180 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. நிலைமை சீர்படவும் இதுபோன்ற சம்பவங்களில் இருந்து மக்களைக் காக்க வேறு இடங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டியும் ஒரு புதிய ஊரையே நிர்மாணம் செய்யவும் மாநிலமும் மத்திய அரசும் சேர்ந்து செயல்பட வேண்டும்.

**வெ.விஸ்வநாதன்,** *சின்னவேடம்பட்டி.*

### சட்டப்படி செயல்பட வேண்டும்

நிலச்சரிவு சம்பவத்தை மத்திய அரசு சட்டப்படி அணுக வேண்டும். இதற்கு ஒரு குழுவை அனுப்பி ஆராய வேண்டும். உடனடியாக குறிப்பிட்ட தொகையை நிவாரணமாக வழங்குவது சிறந்தது. இதுபோன்ற இயற்கை பேரிடர் நிகழாமல் இருக்க நடவடிக்கை தேவை. இயற்கைப் பேரிடரை மனிதர்களால் முற்றிலும் தடுக்க முடியாது. வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் மலைகளையும் வனங்களையும் அழிப்பது பேரிடருக்கு காரணம். இதுத் தொடர்பாக வல்லுநர் குழு அளிக்கும் அறிக்கைகளை அறிவியல்பூர்வமாக செயல்படுத்துவதே அறிவுடைமை. மத்திய அரசு வயநாடு மக்களுக்கு உதவுவது அவசியம்.

**தி.ரெ.ராசேந்திரன்,** *திருநாகேச்சரம்.*

### இப்போதைய தேவை

கோரிக்கை நியாயமே. ஜூலை 30–ல் வயநாடு மாவட்டத்தைச் சேர்ந்த முண்டக்கை, சூரல்மலை, அட்டமலை, புஞ்சுரிமட்டம் ஆகிய நான்கு மலைக்கிராமங்கள் மண்ணில் புதைந்தன. 425 பேர் மாண்டனர். 150 பேரைக் காணவில்லை. வீடுகள், பள்ளிக்கூடங்கள், தேவாலயங்கள் என 800 கட்டடங்கள் இடிந்துள்ளன. முண்டக்கை – சூரல்மலைக்கிடையே 20 மணி நேரத்தில் ராணுவத்தால் பாலம் அமைக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்தது. பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள், அதற்கான பெரும் நிதி இப்போதைய தேவை. தேசியப் பேரிடராக அறிவித்தால் சின்னாபின்னமாகிய கடவுளின் தேசம், புத்துயிர் பெற்று நிச்சயம் எழும்.

**நா.ஜெயராமன்,** *பரமக்குடி.*

### அவசரகால நிதி கிடைக்கும்

மதிப்பிடவே முடியாத சொத்துகளை இழந்து பெரும் துயரத்தில் உள்ளனர் வயநாடு மக்கள். மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பத் தேவையான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கோடிக்கணக்கில் நிதி தேவை. தனியார் அமைப்புகளும், தொழிலதிபர்களும், பிற அரசுகளும் நிதி உதவிச் செய்தாலும், இயற்கைப் பேரிடரால் ஏற்பட்ட எதிர்பாரா பெரும் இழப்பென்பதால் கேரள அரசு அதிர்ச்சியிலும் கையறுநிலையிலும் உள்ளது. நிலச்சரிவு சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவித்தால் மத்திய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியோடு தேசிய பேரிடர் அவசர நிதியும் மாநிலத்துக்கு முழுமையாக கிடைக்கும். எனவே இச்சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும்.

**அரிமதி இளம்பரிதி,** *புதுச்சேரி.*

### சட்ட விரோத விரிவாக்கம்

பேரழிவுக்கு காரணம் சட்டவிரோத மனித வாழ்விட விரிவாக்கமே என்று மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் பாதுகாப்பு பகுதிப் பரப்பை வெளியிட்டுள்ளதாக மத்திய அரசு கூறுகிறது. மாநிலங்களில் சூழலியல் பாதுகாப்பு பகுதியை அறிவிப்பது தொடர்பாக தங்களது கருத்துகளைக் கேட்க வேண்டும் என்று மாநில அரசு கூறியது. சட்ட விரோத விரிவாக்கத்தை கேரள அரசு அனுமதித்தது என்று மத்திய அரசு கூறுகிறது. மத்திய மாநில அரசுகள் ஒருவர் மீது ஒருவர் பழி போடுவதை நிறுத்திவிட்டு, மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் கிடைக்க உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும்.

**என் வி சீனிவாசன்,** *புது பெருங்களத்தூர்.*

### உடனடித் தேவை

நிலச்சரிவுக்கு காரணம் இயற்கையின் சீற்றமா, தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சரியான நேரத்தில் மாநில அரசு எடுக்காததா என்பதை ஆராயும் நிலையில் நாம் இல்லை. ராணுவமும் தேசியப் பேரிடர் மீட்புப் படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். தேசியப் பேரிடராக இந்த சம்பவத்தை சட்டரீதியாக அறிவிக்க முடிகிறதோ இல்லையோ, மீட்புப் பணி முழு அளவில் நிறைவேறுவதும், நிவாரணப் பணிகள் தாமதமின்றி பாதிக்கப்பட்டோரைச் சென்றடைவதும்தான் உடனடித் தேவை. மேற்குத் தொடர்ச்சி மலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலங்களைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதும் முக்கியம்.

**கே.ராமநாதன்,** *மதுரை.*

# தமிழகத்துக்கான கலப்பின பயிர் ரகங்கள்: மத்திய வேளாண்மைத் துறை அறிவிப்பு

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி ஆக.13:** பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்த 109 உயிரி செறிவூட்டப்பட்ட கலப்பின பயிர் ரகங்களில் 10-க்கும் மேற்பட்டவை தமிழகம் தொடர்புடையது என்று மத்திய வேளாண்மைத் துறை செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

அதிக மகசூல், பல்வேறு மாநிலங்களின் மோசமான பருவநிலையை தாங்கி வளரக் கூடியதாக இந்த 109 பயிர் ரகங்களை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் (ஐசிஏஆர்) ஆய்வு செய்து வெளியிட்டது. இதில் 10 பயிர் ரகங்கள் தமிழகத்துக்கு உகந்ததாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன் விவரம் வருமாறு: 109 வகை பயிர் ரகங்களில் நிலம், வயல்களில் சாகுபடி செய்யப்படும் 69 பயிர்களில் நெல், கோதுமை, பார்லி, சோளம், மக்காச்சோள பயிறு வகைகள், கொண்டைக்கடலை, பட்டாணி, துவரை, சூரிய காந்தி, நிலக்கடலை, சோயா பீன், எள் , கரும்பு, பருத்தி, சணல், தீவனப் பயிர்களும் இடம்பெற்றுள்ளன.

40 வகை தோட்டப்பயிர்களில் மாம்பழம், மாதுளை, கொய்யா, தக்காளி, சுரைக்காய், தர்பூசணி, உருளைக்கிழங்கு, சிறிய ஏலக்காய், மாங்காய் இஞ்சி, பெருஞ்சீரகம், முந்திரி, கோகோ, தேங்காய், மேரிகோல்டு, சம்பங்கி, அஸ்வகந்தா, வெல்வெட் பீன்ஸ் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இதில் தமிழ்நாட்டிற்கு உகந்ததாக சிஎஸ்ஆர்-101, கேகேஎல் (ஆர்) ஆகிய நெல் ரகங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிஎஸ்ஆர்-101 ரகம் ஹெக்டேருக்கு 35.15 குவிண்டால் விளைச்சல் அளிக்கக்கூடியவை. கேகேஎல் (ஆர்) ரகம், ஹெக்டேருக்கு 56 குவிண்டால் விளைச்சல் தரக்கூடியது.இவை புதுச்சேரி மாநிலம் காரைக்கால் ஜவாஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த கலப்பினப் பயிர்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இதேபோல 4 சோள வகைகளும், சிபிஆர்எம்வி-1 என்ற சிறுதானிய வகையும் தமிழ்நாட்டுக்கு உகந்தவையாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. தன்ஜீலா என்ற எள் ரகமும், ஜேபிஎம் 18-7 என்ற கால்நடை தீவன ரகமும், தமிழ்நாட்டுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அர்காகிரன் என்ற கொய்யா ரகம், கேரளா ஸ்ரீ என்ற வாசனை திரவிய ரகம், விட்டல் கோகோ என்ற தோட்டப்பயிர் ரகம், கல்ப சதாப்தி என்ற தென்னை ரகம், அர்காவைபவ் என்ற சம்பங்கி பூ ரகம் ஆகியவையும் தமிழ்நாட்டுக்கு உகந்தவையாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளன என மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.




# பொறியியல் கலந்தாய்வு: 63,729 மாணவர்களுக்கு தற்காலிக ஒதுக்கீடு

**சென்னை, ஆக. 13:** பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வின் 2-ஆவது சுற்றில் 63,729 மாணவ, மாணவிகளுக்கு தற்காலிக ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கு நிகழ் கல்வியாண்டில் 1,99,868 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தரவரிசை பட்டியல் ஜூலை 10-ஆம் தேதி வெளியிடப்பட்டன. பொதுப்பிரிவில் பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு ஜூலை 22-ஆம் தேதி தொடங்கி செப். 3-ஆம் தேதி நிறைவு பெறவுள்ளது.

தொடர்ந்து பிஇ,பிடெக்பொறியியல் படிப்பில் பொதுப் பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 29-ஆம் தேதி தொடங்கியது. முதல் சுற்று கலந்தாய்வில் 30,699 மாணவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். முதல் கட்ட கலந்தாய்வில் 19,922 மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இரண்டாம் சுற்று பொறியியல் பொதுப் பிரிவு கலந்தாய்வு ஆக.10-ஆம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கியது. கட்-ஆஃப் மதிப்பெண் 178 முதல் 142 வரை உள்ள 77,948 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஆக.12-ஆம் தேதி மாலை 5 மணி வரை மாணவர்கள் விரும்பிய கல்லூரிகளைப் பதிவு செய்தனர். இந்த நிலையில் 63,729 மாணவர்களுக்கு தற்காலிகமாக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது என என பொறியியல் மாணவர் சேர்க்கை குழு தெரிவித்துள்ளது.

# பேருந்து கட்டணத்தை உயர்த்தும் திட்டமில்லை

## போக்குவரத்துத் துறை

**சென்னை, ஆக. 13:** தமிழகத்தில் பேருந்து கட்டணத்தை உயர்த்தும் திட்டம் இல்லை என போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள 8 அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 20,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நாள்தோறும் 1.76 கோடிக்கும் மேற்பட்டோர் பயணித்து வருகின்றனர். தமிழகத்தில் பேருந்து பயணக் கட்டணம் கடந்த 2018-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. அதன் பிறகு அரசு பேருந்துகளில் கட்டணம் உயர்த்தப்படவில்லை.

இந்த நிலையில், டீசல் செலவுக்கு ஏற்ப பேருந்து கட்டணம் மாற்றியமைப்பதற்காக ஆணையம் உருவாக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்து பாமக தலைவர் அன்புமணி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில்,'தமிழகத்தில் டீசல் விலை உயர்வுக்கு இணையாக பேருந்துக் கட்டணத்தை உயர்த்துவது குறித்து முடிவெடுக்க தனி ஆணையம் அமைக்க முடிவு செய்திருந்தால், தமிழக அரசின் முடிவு கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. ஏழை, எளிய மக்கள் மீது தமிழக அரசுக்கு சிறிதும் இரக்கமே இல்லை என்பதைத்தான் இந்த நடவடிக்கை காட்டுகிறது என தனது கண்டனத்தைப் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையில், போக்குவரத்துத் துறை தரப்பில் இது தொடர்பாக அளிக்கப்பட்ட விளக்கத்தில், 'பேருந்து கட்டணத்தை உயர்த்துவது குறித்து எந்த ஒரு கருத்துருவும் தமிழக அரசிடம் இல்லை. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்தத் திட்டத்தையும் தமிழக அரசு செயல்படுத்தாது' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டம்

# தமிழகத்துக்கு 3 மடங்கு தண்ணீர் வழங்கல்; 'உபரி நீர்' என தமிழகம் அதிருப்தி

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி ஆக. 13:** தமிழகத்துக்கு காவிரியில் கடந்த 72 நாள்களுக்கு வழங்க வேண்டிய 56.73 டிஎம்சி தண்ணீருக்குப் பதிலாக சுமார் மூன்று மடங்காக 153.8 டிஎம்சி தண்ணீர் பிலிகுண்டுலுவில் வழங்கப்பட்டுள்ளதாக காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு (சி.டபிள்யு.ஆர்.சி.) கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இது 'உபரி நீர்' என தமிழகம் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் 101-ஆவது கூட்டம் அதன் தலைவர் வினீத் குப்தா தலைமையில் காணொலி வழியாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காவிரி நதிநீர் ஒழுங்காற்றுக் குழுவின் தமிழக உறுப்பினரும், நீர்வளத் துறையின் திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளருமான தயாளகுமார், காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். மற்ற 3 மாநில உறுப்பினர்களும் காணொலி வழியாகப் பங்கேற்றனர்.

காவிரி நீர் ஆண்டு என்பது ஒவ்வொரு ஆண்டும், ஜூன் 1 -ஆம் தேதி தொடங்கி மே 30-ஆம் தேதி முடிவடையும்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் உறுப்பினர் தயாளகுமார், 'நிகழ் காவிரி நீர் ஆண்டான ஜூன் 1-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 11-ஆம் தேதி வரையில் தமிழகத்திற்கு காவிரியில் பிலிகுண்டுலுவில் 153.8 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் வழங்கியுள்ளது. காவிரி நீர் தாவாவில் உச்சநீதிமன்றத்தின் இறுதி உத்தரவின்படி, தமிழகத்திற்கு 56.73 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் தனது அணைகளிலிருந்து திறந்து விட வேண்டும். கடந்த 72 நாள்களில் சுமார் மூன்று மடங்காக கர்நாடகம் தமிழகத்திற்கு பிலிகுண்டுலுவில் தண்ணீர் வழங்கியுள்ளது.



தயாள குமார்

இது அணைகளிலிருந்து வெளியான உபரி நீரைத்தான். மாதந்தோறும் காலவரையறையுடன் தண்ணீரை திறக்க நிர்ணயித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கால வரையறையுடன் விடுவிக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகம் கடந்த காலங்களில் அளித்ததில்லை. அடுத்து வரும் காலங்களில் உச்சநீதிமன்றம் நிர்ணயித்த கால வரையறையுடன் மாதந்தோறும் கர்நாடகம் தண்ணீரை விடுவிக்க வேண்டும்' என கேட்டுக் கொண்டார்.

இந்திய வானிலை ஆய்வுத்துறையின் (ஐஎம்டி) உறுப்பினர் தரப்பில் குறிப்பிடுகையில், நிகழாண்டின் தென் மேற்குப் பருவ மழை (ஜூன் 1 ஆம் தேதி முதல்) காவிரிப் படுகையில் இயல்பான அளவைவிட அதிக அளவு மழைப் பொழிவை அளித்தது. அடுத்த இரண்டு வாரத்திற்கும் இப்பருவ மழையால் காவிரிப் படுகையில் இயல்பான மழை பெய்ய வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஆகஸ்ட் 12- ஆம் தேதி நிலவரப்படி மேட்டூர் அணையில் நீர் இருப்பு 93.470 டிஎம்சியாக உள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 21,472 கன அடி நீர் பாசனத்திற்காக வெளியேற்றப்பட்டு வருகிறது எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# மருத்துவப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய செயல் திட்டம்

## என்எம்சி உத்தரவு

**சென்னை, ஆக. 13:** மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி வளாகங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான செயல் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) உத்தரவிட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் அரசு மருத்துவக் கல்லூரியில் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் பாலியல் கொலை செய்யப்பட்டுள்ள நிலையில் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து என்எம்சி செயலர் டாக்டர் ஸ்ரீனிவாஸ் மருத்துவத் துறையினருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

அண்மைக் காலமாக மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவர்கள் மீதான வன்முறைகளும், வன்கொடுமைகளும் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், மருத்துவமனை ஊழியர்கள் என அனைவரது பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான செயல் திட்டங்களை சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள் வகுக்க வேண்டும். குறிப்பாக, புற நோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, மருத்துவத் துறைகள், விடுதி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம் உள்பட அனைத்து இடங்களிலும் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் செயல் திட்டங்கள் இருக்க வேண்டும். கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி குற்றச் சம்பவங்கள் நிகழாமல் தடுத்தல் அவசியம்.

அதேபோன்று போதிய எண்ணிக்கையில் பாதுகாப்புப் பணியில் ஆண் மற்றும் பெண் பாதுகாவலர்களை நியமிக்க வேண்டும். மாலை வேளைகளில் மருத்துவக் கல்லூரி வளாகங்களில் பாதுகாப்பாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு சென்று வருவதற்கு வழி வகை செய்ய வேண்டும்.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள், ஊழியர்களுக்கு எதிரான வன்கொடுமை நிகழ்வுகளை சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம் தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுப்பது கட்டாயம். மேலும், அதுதொடர்பாக காவல் துறையில் புகாரளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும்.

மருத்துவ பணியிட பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை தேசிய மருத்துவ ஆணையத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**போராட்டம்:** இதனிடையே, கொல்கத்தா பயிற்சி மருத்துவர் பாலியல் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். கருப்புப் பட்டை அணிந்தும், கொல்கத்தா சம்பவத்துக்கு நீதி கேட்கும் வகையில் பதாகைகளை ஏந்தியும் அவர்கள் போராட்டம் நடத்தினர். இதில்,100-க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள், மருத்துவ சங்கத்தினர் கலந்துகொண்டனர்.


# நிதி நிறுவன மோசடி: தேவநாதன் யாதவ் கைது

**சென்னை, ஆக. 13:** சென்னை மயிலாப்பூர் இந்து பெர்மனென்ட் பண்ட் நிதி நிறுவன மோசடி வழக்கில், அதன் தலைவர் தேவநாதன் யாதவை பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

மயிலாப்பூர் தெற்கு மாட வீதியில் கடந்த 1872-ஆம் ஆண்டு முதல் 'தி மயிலாப்பூர் இந்து பெர்மனென்ட் பண்ட்' என்ற பெயரில் நிதி நிறுவனம் இயங்குகிறது. இந்த நிறுவனத்துக்கு சென்னை வண்ணாரப்பேட்டை, சைதாப்பேட்டை, பெரம்பூர், அடையாறு, பார்க்டவுன், கடலூர் மாவட்டம் நெய்வேலி ஆகிய 6 இடங்களில் கிளைகள் செயல்படுகின்றன.

**பொதுமக்கள் முதலீடு:** இந்த நிதி நிறுவனத்தில் தற்போது 5,000-க்கும் மேற்பட்டோர் ரூ. 1 லட்சம் முதல் ரூ. 5 கோடி வரை நிரந்தர வைப்புத் தொகையில் முதலீடு செய்துள்ளனர். இதற்கு மாதந்தோறும் 10 முதல் 11 சதவீதம் வரை வட்டி வழங்கப்பட்டு வந்தது. மேலும், இந்த நிறுவனத்தில் பல்வேறு முதலீடு திட்டங்களும் ஓய்வூதிய திட்டங்களும் உள்ளன. அதேபோல நகைக் கடனும் வழங்கப்படுகிறது.

இந்த நிதி நிறுவனத்தின் நிரந்தர வைப்பு நிதியாக மட்டும் ரூ. 525 கோடி இருந்ததாகக் கூறப்படுகிறது.



தற்போது இந்த நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தேவநாதன் யாதவ் உள்ளார். இவர், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதி நிறுவனத்தின் தலைவர், நிர்வாக இயக்குநர் பொறுப்புகளுக்கு பங்குதாரர்கள் மூலம் நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**முதலீட்டாளர்கள் போராட்டம்:** இந்த நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களுக்கு கடந்த 6 மாதங்களுக்கு மேல் எந்தவித நிதியும் அளிக்காமல், பணம் இல்லை எனக் கூறி வந்தனர். மேலும், சிலருக்கு வழங்கப்பட்ட காசோலையும் கணக்கில் பணம் இல்லை என திரும்பி வந்துள்ளது. இது தொடர்பாக பணத்தை முதலீடு செய்தோர் மயிலாப்பூர் தெற்கு மாட வீதியில் உள்ள தலைமை அலுவலகத்தில் அவ்வப்போது போராட்டம் நடத்தி வந்தனர்.

மேலும், சென்னை அசோக் நகரில் உள்ள தமிழக காவல் துறையின் பொருளாதார குற்றப்பிரிவில் புகார் செய்தனர். இதேபோல், 140 பேர் அடுத்தடுத்து புகார் அளித்தனர்.

**தேவநாதன் கைது:** அந்தப் புகார்களின் அடிப்படையில் பொருளாதார குற்றப்பிரிவினர் நடத்திய விசாரணையில் அந்த நிதி நிறுவனத்தின் பண மோசடியில் தேவநாதனுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இந்தநிலையில்புதுக்கோட்டையில் இருந்த தேவநாதனை பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்தனர். பின்னர் விசாரணைக்காக, திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர். அங்கு அவரிடம் மோசடி தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. அவரை சென்னைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தவும் போலீஸார் திட்டமிட்டுள்ளனர்.

**அண்ணாமலை கண்டனம்:** தேவநாதன் யாதவ் கைது செய்யப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவித்து, பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை வெளியிட்ட அறிக்கை:

நிதி நிறுவனத்தில் முதலீடு செய்துள்ளவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் தமிழக பாஜக உறுதியாக உள்ளது. தமிழக அரசு முழுமையான விசாரணை நடத்தி, முதலீட்டாளர்கள் அனைவருக்கும் இதை உறுதி செய்ய வேண்டும்.

அதேநேரத்தில், திமுக அரசின் சட்டம் - ஒழுங்கு மற்றும் நிர்வாகத் தோல்வியைச் சுட்டிக் காட்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளை அச்சுறுத்தும் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்றால், அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என தெரிவித்துள்ளார்.

## இலங்கைக் கடற்படை தாக்குதல் விவகாரம்

# உயிரிழந்த மீனவர்களுக்கு தலா ரூ. ஒரு கோடி இழப்பீடு: மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவு

**மதுரை, ஆக. 13:** இலங்கைக் கடற்படையினர் தாக்குதலில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. ஒரு கோடி இழப்பீடு வழங்கக் கோரிய வழக்கில், மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், மோர்ப்பண்ணை மீனவ கிராமத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் திருமுருகன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த பொதுநல மனு:

ராமேசுவரம் துறைமுகத்திலிருந்து கடந்த மாதம் 31-ஆம் தேதி கார்த்திகேயனுக்குச் சொந்தமான படகில் மூக்கையா, முத்து முனியாண்டி, மலைச்சாமி, ராமச்சந்திரன் ஆகியோர் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர்.

அன்றைய தினம் இலங்கை கிரிக்கெட் அணி,இந்தியகிரிக்கெட் அணியிடம் தோல்வியடைந்தது. இதனால், கோபத்திலிருந்த இலங்கைக் கடற்படையினர், ராமேசுவரம் மீனவர்களைத் தாக்கியதில் மலைச்சாமி உயிரிழந்தார். படகிலிருந்து கடலுக்குள் விழுந்த மீனவர் ராமச்சந்திரன் குறித்து இதுவரை எந்தத் தகவலும் தெரியவில்லை. இருவரை இலங்கைக் கடற்படையினர் மீட்டு, இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.



கடந்த 2011-ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் இலங்கை அணி, இந்திய அணியிடம் தோல்வியடைந்தது. அப்போதும் இலங்கைக் கடற்படையினர் ராமேசுவரம் பகுதி மீனவர்களின் படகை பறிமுதல் செய்ததோடு, தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் மீனவர்களான விக்டஸ், மாரிமுத்து, ஜான் பால், அந்தோணிராஜ் ஆகியோர் உயிரிழந்தனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டாலும் மத்திய, மாநில அரசுகள் பாராமுகமாகவே உள்ளன.

தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவது அரசியலமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரியிருந்தார்.

இந்த மனுவை செவ்வாய்க்கிழமை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், எல். விக்டோரியா கௌரி அமர்வு பிறப்பித்த உத்தரவு:

இந்த வழக்கு தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும். வழக்கு விசாரணை 4 வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

# பாடநூல்கள் விலை உயர்வு ஏன்?: பள்ளிக் கல்வித் துறை விளக்கம்

**சென்னை, ஆக.13:** தமிழகத்தில் மாநில பாடத்திட்டத்தில் தனியார் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்புகளுக்கான பாடநூல்களின் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அது குறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

மூலப் பொருள்கள் விலை அதிகரிப்பு காரணமாக ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பாடநூல்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 1 முதல் பிளஸ் 2 வகுப்பு வரையான பாடநூல்கள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்படுகின்றன.அவை தமிழக பாடநூல் கழகம் சார்பில் அச்சிடப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு விநியோகம் மற்றும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி ஆண்டுக்கு சுமார் 7 கோடி பாடப்புத்தகங்கள் தற்போது அச்சிடப்படுகின்றன. இதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பாடநூல்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், தனியார் பள்ளி மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வர்களுக்கு பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

**ரூ.40 முதல் ரூ.90 வரை உயர்வு:** இந்த நிலையில் 5 ஆண்டுகளுக்கு பின்னர் பள்ளி பாடப் புத்தகங்களின் விலை ரூ.40 முதல் ரூ.90 வரை உயர்த்தப்பட்டுள்ளது. காகிதங்களின் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் புத்தகங்கள் விலை ஏற்றப்பட்டுள்ளதாக தமிழக பாடநூல் கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது: பாடநூல்களின் விற்பனை விலை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அப்போதைய உற்பத்தி செலவை அடிப்படையாக கொண்டு மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கடைசியாக தமிழகத்தில் 2018-2019-ஆம் கல்வியாண்டில் பாடத்திட்டம் மாற்றம் செய்யப்பட்ட போது விலை திருத்தியமைக்கப்பட்டது. தரம் உயர்ந்த எலிகண்ட் பிரிண்டிங் பேப்பர் 80 ஜிஎஸ்எம் தாள் மற்றும் 230 ஜிஎஸ்எம் ஆரா போல்டு புளூபோர்டு மேலட்டை கொண்டு புத்தகங்கள் அச்சிடப்பட்டதால் விலை உயர்த்தப்பட்டது.

இந்தசூழலில் புத்தகங்களின் உற்பத்தி செலவினம் தற்போது கணிசமாக உயர்ந்துவிட்டது. அதாவது, 2018-2019-ஆம் ஆண்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டதைவிட தற்போது உற்பத்தி பொருள்களான தாள் 55 சதவீதமும், மேலட்டை 27 சதவீதமும் மற்றும் அச்சுக்கூலி 21 சதவீதமும் உயர்ந்துள்ளது. இதன்காரணமாக ஒரு பாடநூலுக்கான உற்பத்தி செலவினம் நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலையைவிட சராசரியாக 45 சதவீதம் வரை அதிகரித்துவிட்டது.

இதையடுத்து நிகழாண்டில் 1 முதல் பிளஸ் 2 வகுப்பு வரையிலான பாட நூல்களின் விலையை பக்கங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ரூ.40 முதல் அதிகபட்சமாக ரூ.90 வரை உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வகுப்பு வாரியாக உயர்வு:** அதாவது, 1 முதல் 4-ஆம் வகுப்பு பாடநூல்கள் ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், 5 முதல் 7-ஆம் வகுப்பு பாடநூல்கள் ரூ.30 முதல் ரூ. 50 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 8-ஆம் வகுப்பு புத்தகம் ரூ.40 முதல் ரூ.70 வரையிலும், 9 முதல் பிளஸ் 2 வகுப்புக்கு ரூ.50 முதல் ரூ.90 வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது. மேலும், அரசு, அரசு உதவி பள்ளிகளின் மாணவர்களுக்கு விலையில்லா புத்தகங்கள் தடையின்றி வழங்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

# டாக்டர் சுதா சேஷய்யனுக்கு தமிழ்ப் பேராய விருது



**சென்னை, ஆக. 13:** தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனுக்கு எஸ்ஆர்எம் தமிழ்ப் பேராய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா நுண்மி தொடர்பாக அவர் எழுதிய 'உயிரற்ற உயிர்' என்ற நூலுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. எஸ்ஆர்எம் தமிழ்ப் பேராயம் சார்பில் சிறந்த படைப்பாளிகளுக்கு தமிழறிஞர்கள், அறிவியல் அறிஞர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நிகழாண்டில், புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது எஸ்.சுப்பாராஜ் மணியனுக்கும், பாரதியார் விருது எழுத்தாளர்கள் கடற்கரய், பாவலர் எழிலவாணன் ஆகியோருக்கும் வழங்கப்படுகிறது. அதேபோன்று, அழ வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது, ஜி.யு.போப் மொழிபெயர்ப்பு விருது உள்பட பல்வேறு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், அப்துல் கலாம் அறிவியல் தமிழ் மற்றும் தொழில்நுட்ப விருது டாக்டர் சுதா சேஷய்யனின் நூலுக்கு வழங்கப்பட உள்ளது. மருத்துவம், அறிவியல், ஆன்மிகம் என பல்வேறு தலைப்புகளில் 30-க்கும் மேற்பட்ட நூல்களை டாக்டர் சுதா சேஷய்யன் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாஜக வாகன பேரணிக்கு அனுமதி மறுப்பு: காவல் துறை பதிலளிக்க உத்தரவு



**சென்னை, ஆக.13:** சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பாஜக சார்பில் தேசியக் கொடியுடன் இருசக்கர வாகன பேரணி நடத்துவதற்கு அனுமதி மறுத்த உத்தரவை எதிர்த்த வழக்கில், காவல் துறை பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, பாஜக சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தேசியக் கொடியுடன் இருசக்கர வாகன பேரணி நடத்த அனுமதி கோரி கடந்த ஆக.10-ஆம் தேதி அளித்த மனுவை காவல் துறை நிராகரித்துள்ளதாகக் கூறி, பாஜக கோவை மாவட்ட செயலர் கிருஷ்ண பிரசாத் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் பால் கனகராஜ், 'குறுகலான சாலை மற்றும் மேம்பால கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை காரணமாகக் கூறி அனுமதி மறுக்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி, 'யார் வேண்டுமானாலும் தேசியக் கொடியை ஏந்திச் செல்லலாம். வேண்டுமானால் எந்த இடங்களில் பேரணி செல்கிறார்கள் என்பது தொடர்பான விவரங்களை காவல்துறையினர் அறிந்து, வாகன நெரிசல் மற்றும் சட்டம்- ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். அதை விடுத்து, முழுவதுமாக பேரணிக்கு அனுமதி மறுக்க முடியாது' என தெரிவித்தார்.

மேலும், வழக்கு தொடர்பாக பதிலளிக்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை புதன்கிழமைக்கு ஒத்திவைத்தார்.

# சுதந்திர தினம்: நாளை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஆக.13:** சுதந்திர தினத்தையொட்டி, கோட்டை கொத்தளத்தில் வியாழக்கிழமை (ஆக.15) தேசியக் கொடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்.

சுதந்திர தினத்தன்று விழா மேடையில் தமிழ்நாட்டுக்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக 'தகைசால் தமிழர்' என்ற தமிழக அரசின் உயரிய விருது அளிக்கப்படும். நிகழாண்டுக்கான விருதுக்கு காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவரும், இலக்கியவாதியுமான குமரி அனந்தன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ரூ. 10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் அடங்கிய, தகைசால் தமிழர் விருதை சுதந்திர தின விழாவின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

**விருதுகள்:** அறிவியல் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்குவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதல்வரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாகத் தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல்வர் விருதுகள், முதல்வரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்ட விருதுகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் விழா மேடையிலேயே வழங்கி கௌரவிக்கிறார்.

முன்னதாக, காலை 8.45 மணிக்கு சுதந்திர தினவிழா நிகழ்ச்சிக்காக கோட்டைக்கு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வரவேற்கிறார். முதல்வருக்கு முப்படை அதிகாரிகள், டிஜிபி சங்கர் ஜிவால், சட்டம்-ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை காவல் ஆணையர் அருண் ஆகியோரை தலைமை செயலர் சிவ்தாஸ் மீனா அறிமுகம் செய்து வைப்பார்.

**அணிவகுப்பு மரியாதை:** காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக்கொள்வார். பின்னர் கோட்டை கொத்தளத்தின் மேல் உள்ள கொடியேற்றும் இடத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வந்து, தேசியக் கொடியை ஏற்றி, மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து, தமிழ் மக்களுக்கு சுதந்திர தின உரை நிகழ்த்த உள்ளார்.

இந்த விழாவுக்கு வருகை தரும், முக்கிய பிரமுகர்கள் அமருவதற்காக புனித ஜார்ஜ் கோட்டைக்கு எதிரேயும் உள்ள புல்வெளியில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

சுதந்திர தினவிழாவில் பங்கேற்கும் அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏ-க்கள், உயர் அதிகாரிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் அமர்ந்து நிகழ்ச்சிகளை காண தனித்தனி மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**ஒத்திகை நிகழ்வுகள்:** சுதந்திர தினவிழாவையொட்டி ஒத்திகை நிகழ்ச்சி 3 முறை கோட்டை கொத்தளத்தில் நடத்தி பார்க்கப்பட்டன. அந்த வகையில், இறுதி ஒத்திகை நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சுதந்திர தினத்தன்று முதல்வர் மு.க.ஸ்டாலினை மோட்டார் சைக்கிள் புடைசூழ காவல் துறை வாகன அணிவகுப்புடன் அழைத்து வருவது போன்ற நிகழ்ச்சித் காட்டப்பட்டது.

வெள்ளை நிற போலீஸ் இருசக்கர ஜீப்பில் ஒருவரை நிறுத்தி அணிவகுப்புகளை பார்வையிடுவது போன்றும், குதிரைப்படை, கமாண்டோ படை, ஆயுதப்படை உள்ளிட்ட 7 படைப் பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, தேசிய கொடியை ஏற்றுவது போன்றும் ஒத்திகை நடத்தி பார்க்கப்பட்டது. மேலும், கோட்டை கொத்தளத்தில் விருதுகள், பதக்கங்கள் வழங்குவது போன்றும் ஒத்திகை நடத்தி பார்க்கப்பட்டது.

சுதந்திர தின விழா நடைபெறவுள்ள கோட்டை கொத்தளப் பகுதி உள்பட தலைமைச் செயலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



சுதந்திர தின விழாவை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி.

# சென்னை - நாகர்கோவில்: இன்று குளிர்சாதன சிறப்பு ரயில்

**சென்னை, ஆக.13:** சென்னை - நாகர்கோவில் இடையே புதன்கிழமை (ஆக.14) சிறப்பு குளிர்சாதன ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

சென்னை - நாகர்கோவில் இடையே சிறப்பு ஏசி ரயில் (எண் 06055) புதன்கிழமை இரவு 11.30 மணிக்கு சென்ட்ரலிலிருந்து இயக்கப்படும்.

இந்த ரயில் வியாழக்கிழமை நண்பகல் 12.30-க்கு நாகர்கோவில் சென்றடையும். மறுமார்க்கத்தில் (எண் 06056) வியாழக்கிழமை (ஆக.15) நாகர்கோவிலிலிருந்து பிற்பகல் 3.50 மணிக்குப் புறப்படும் ரயில் வெள்ளி காலை 5.10 மணிக்கு ஆவடி வந்து சேரும். ஆவடி வரை மட்டுமே இந்த ரயில் இயக்கப்படும். இந்த சிறப்பு ரயிலில் 14 ஏசி 3 டயர் எகானமி பெட்டிகளும், 2 பிரேக் வேனும் இணைக்கப்பட்டிருக்கும்.

இதுபோல, சென்ட்ரலில் இருந்து ஆக.14, 21-ஆம் தேதிகளில் மாலை 3.45 மணிக்கு சிறப்பு ஏ.சி.ரயில் திருவனந்தபுரம் கொச்சுவேலிக்கு இயக்கப்படும். அதேபோல் மறுமார்க்கத்தில் ஆக.11 மற்றும் ஆக.22 ஆகிய தேதிகளில் மாலை 6.25 மணிக்கு புறப்பட்டு மறுநாள் முற்பகல் 11.25-க்கு சென்னை சென்ட்ரல் வந்து சேரும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

# சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு விவகாரம்: உச்சநீதிமன்றத்தை நாட அறிவுறுத்தல்

**மதுரை, ஆக. 13:** தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர், இஸ்லாமியர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் வழங்கப்படும் இட ஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோரிய வழக்கில், மனுதாரர் உச்சநீதிமன்றத்தை நாட சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு செவ்வாய்க்கிழமை அறிவுறுத்தியது.

மதுரை மாவட்டம், மேலூரைச் சேர்ந்த வழக்குரைஞர் ஸ்டாலின் தாக்கல் செய்த பொதுநல மனு:

கடந்த 2005-ஆம் ஆண்டு இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் குறித்து முறையான கணக்கீடு எதுவும் செய்யாமல் சிறப்பு ஒதுக்கீடு சட்டம் இயற்றப்பட்டது. 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் போது ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 5.86 சதவீத இஸ்லாமியர்கள், 6.12 சதவீத கிறிஸ்தவர்கள் இருந்தனர். ஆனால், அவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்படுவது ஏற்கத்தக்கது அல்ல.

கடந்த 2016-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் போது 10 சதவீதம் நீதித் துறை ஊழியர்கள் சிறுபான்மை இனத்தவர்கள் என்பது கண்டறியப்பட்டது. தமிழ்நாடு



அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் குரூப்-1, குரூப்-2 தேர்வுகளில் இந்த சிறப்புச் சட்டத்தால் பயனடைந்த சிறுபான்மையினர் குறித்த எந்தத் தகவலும் இல்லை. இந்த சிறப்பு ஒதுக்கீட்டுச் சட்டம் அரசியல் ஆதாயத்துக்காகவே கொண்டு வரப்பட்டது. முறையாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாமலும், அவர்களது சமூக, பொருளாதார நிலையைக் கவனத்தில் கொள்ளாமலும் இட ஒதுக்கீடு வழங்கியது ஏற்புடையதல்ல.

எனவே, தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களுக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் வழங்கப்படும் இட ஒதுக்கீட்டை அரசியலமைப்புக்கு எதிரானதாக அறிவித்து உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த மனுவை செவ்வாய்க்கிழமை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், எல்.விக்டோரியா கௌரி அமர்வு பிறப்பித்த உத்தரவு:

இதே கோரிக்கையுடன் ஆந்திர அரசு தொடுத்த மேல் முறையீட்டு மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. எனவே, இந்த வழக்கில் இந்த நீதிமன்றத்தால் வேறு எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது. தேவைப்படுமெனில், மனுதாரர் உச்சநீதிமன்றத்தை நாடலாம். வழக்கு முடித்துவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.


Muthoot Finance

முத்தூட் பைனான்ஸ் லிமிடெட் ஏல அறிவிப்பு

GSTN -33AABCT0343B1Z5

Registered Office: 2nd Floor, Muthoot Chambers, Banerji Road, Kochi-682 018, Kerala, India. CIN:L65910KL1997 PLC011300, Ph:+91 484 2396478. 2394712, Fax:+91 484 2396506. mails@muthootgroup.com, www.muthootfinance.com

கீழ்கண்ட எங்கள் கம்பெனியின் கிளையில் அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் காலாவதி ஆகிவிட்டதால், பலமுறை தகவல் தெரிவித்தும் திரும்ப பெறாத காரணத்தால் நகைகள் சம்பந்தப்பட்ட கிளையில் 22.08.2024 அன்று காலை 10.00 மணி அளவில் ஏலத்தில் விடப்படும் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த நோட்டீஸ் மூலம் தெரிவித்து கொள்கிறோம் மேலே குறிப்பிட்ட தேதியில் ஏதாவதொரு காரணத்தால் ஏலம் நடத்தப்படவில்லையென்றால், ஏலதாரர் அந்த மையத்தில் இரண்டாவதாக குறிப்பிட்ட ஏல தேதியிலோ அல்லது பின்னிட்ட தேதிகளிலோ எந்தவொரு அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை தள்ளி போட அதிகாரமுள்ளவர் ஆவார். ஏலதேதியில் மாற்றம் இருந்தால் அது பற்றி ஏல மையத்தில் விளம்பரம் செய்யப்படும்.

இரண்டாவது ஏல தேதி : 28.08.2024,04:00PM, ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண். 289, Cth சாலை, தல் தளம், ஆவடி, சென்னை-600054 (திருவள்ளூர் மாவட்டம்) (3305)

ஆரம்பாக்கம்(TN)(5131)- MSL- 398, சென்னை - ஆவடி - CTH சாலை(3305)- MAL- 5269, MHL- 358, 367, MSL- 9910, SRS- 16, சென்னை-கோவர்டணகிரி(3765)- SSS- 179, 180, சென்னை-ஐயப்பன்தாங்கல்(4411)- MAL- 1924, 1993, MSL- 5390, TTB- 28, சென்னை-ஜனப்பன்சத்ரம்(4269)- MDD- 1, 2, SRS- 36, TMS- 50, சென்னை-காரனோடை(3125)- MSL- 7388, SRS- 76, சென்னை - பொன்னேரி - தாய்மான் தெரு(3676)- MAL- 4561, 4564, 4596, 4833, 5089, MHL- 230, 234, MSL- 9033, 9056, 9130, சென்னை-பொன்னேரி(0676)- MAL- 6640, MDL- 241, 249, MHL- 153, 529, 533, 534, MSL- 33671, TKM- 477, ZIP- 71, சென்னை-பூவிருந்தவல்லி(0495)- MHL- 519, ZIP- 103, சென்னை-வன்னிஅஞ்சற்றம்(4554)- MAL- 1642, TOS- 27, சென்னை ரெட் ஹில்ஸ் ஜி என்டி சாலை(2508)- MAL- 5270, SRS- 15, 17, 18, 19, 20, 21, 22, 25, 26, 30, 104, சென்னை-கன்னியான்சாவடி(1923)- BTB- 64, MDL- 75, 160, MHL- 146, 276, SRS- 29, 32, சென்னை-திருமுல்லைவாயல்(2022)- MDD- 22, MML- 3546, ZIP- 30, சென்னை-திருநின்றவூர்(2992)- TMS- 149, ZIP- 86, சென்னை-திருவேற்காடு(2888)- MHL- 107, கும்மிடிப்பூண்டி(TN)(2724)- MHL- 342, MSL- 14960, 15258, ZIP- 125, கவரைப்பேட்டை(TN)(4833)- MAL- 601, 618, MHL- 129, 130, MHP- 24, MSL- 1491, 1528, SRS- 10, 12, 15, 16, 17, 33, 86, TON- 2, TOS- 8, ZIP- 22, மீஞ்சூர்(TN)(1798)- MDD- 74, MHL- 135, 254, MSL- 13890, TMS- 4, பெரியபாளையம்(TN)(4771)- MAL- 1174, MHL- 34, MSL- 3286, 3317, SRS- 42, பொன்னேரி - தாலுகா அலுவலக சாலை(2029)- MAL- 3576, SRS- 24, செங்குன்றம்(0640)- MDL- 570, MHL- 732, SRS- 61, 256, TON- 43, ZIP- 192, ஸ்ரீபெரும்புதூர்(TN)(1924)- MDL- 87, 113, [illegible]

140, 187, 235, MSL- 8702, SRS- 54, மறைமலைநகர்(TN)(2479)- MDL- 6, MHL- 105, 521, 626, MSL- 13743, 13794, SRS- 59, 103, 136, TMS- 12, 13, செங்கல்பட்டு(3968)- MDD- 14, MHP- 203, சிங்கபெருமாள்கோவில்(TN)(2408)- TKM- 307, ZIP- 70, திருக்கழுகுன்றம் - பஜார்(3355)- MDL- 3, 242, MHL- 94, MSL- 9136, 9287, 9387, SRS- 216, TWS- 6, திருக்கழுகுன்றம்(1308)- MAL- 9358, 9410, MDD- 37, MDL- 257, MHL- 191, 444, MSL- 27578, SRS- 101, 143, TMS- 1, திருப்போரூர்(TN)(4211)- BVS- 31, MAL- 2279, MDD- 11, MDL- 108, TKM- 349, TTB- 24, ZIP- 47, 51, 76, ஊரப்பாக்கம்(TN)(2062)- MAL- 5403, 5431, 5455, 5464, MDL- 26, 27, 31, MHL- 214, 317, 965, 1081, MSL- 17019, 17188, SRS- 113, 127, 133, 189, TKM- 360, TKS- 299,

Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details :- சென்னை - குரோம்பேட்டை CLC சாலை(3135)- MSL- 8022, மறைமலைநகர்(TN)(2479)- MSL- 2859, திருக்கழுகுன்றம் - பஜார்(3355)- MSL- 10589, 10615, ஊரப்பாக்கம்(TN)(2062)- MSL- 19565, காயரம்பேடு(TN)(5062)- TKM- 538,

இரண்டாவது ஏல தேதி : 29.08.2024,04:00PM, ஏல மையம் : முத்தூட் ஃபைனான்ஸ் லிமிடெட், எண்.177, குன்றத்தூர் மெயின் ரோடு, மாங்காடு, காஞ்சிபுரம், தமிழ்நாடு, 600122 (காஞ்சிபுரம் மாவட்டம்) (4399)

சென்னை-அனகாபுத்தூர்(3227)- MDD- 118, MDL- 373, MHL- 482, 558, MSL- 8838, 9041, SRS- 10, 40, 45, 46, 47, 120, சென்னை-மடிப்பாக்கம்(0593)- TCB- 20, TKM- 172, சென்னை-மாங்காடு(4399)- MHL- 166, 167, MHP- 101, SRS- 27, TKS- 105, சென்னை-மேடவாக்கம்(0766)- MHL- 360, SRS- 19, சென்னை-மௌலிவாக்கம்(3639)- MRC- 4, MSL- 8978, 9153, 9159, சென்னை-பம்மல்(4272)- MAL- 6244, MHL- 577, 604, 641, 643, MSL- 11189, 11591, 11592, சென்னை-ஒக்கியம்துரைப்பாக்கம்(3275)- MSL- 10350, SRS- 129, சென்னை-நங்கநல்லூர்(1765)- MAL- 4953, ZIP- 49, சென்னை-குன்றத்தூர்(1453)- MDD- 194, MHL- 777, 823, MHP- 150, MRC- 6, SRS- 18, 19, 48, சென்னை-பள்ளிக்கரணை(2206)- MDS- 29, MSL- 11787, ZIP- 31, சென்னை-சோழிங்கநல்லூர்(2942)- MDL- 173, 223, MHL- 397, SRS- 86, சென்னை-திருவான்மியூர்(2448)- MSL- 10247, SRS- 17, TKM- 110, கோவூர்(TN)(4727)- MAL- 1248, MHL- 212, MHP- 194, TKM- 486, ZIP- 83, மண்ணிவாக்கம்(TN)(5010)- MAL- 541, MSL- 1059, 1070, முகலிவாக்கம்(TN)(5011)- MAL- 309, MHL- 68, 175, 183, MSL- 704, 781, SRS- 30, நசரத்பேட்டை(TN)(4281)- MHL- 235, MSL- 6421, TKM- 304, ZIP- 115,

Low Quality/Low touch/Insufficient weight deduction accounts details :- சென்னை-குன்றத்தூர்(1453)- MSL- 19672, கோவூர்(TN)(4727)- MSL- 5827,

[illegible]

Place : சென்னை
Date : 13.08.2024

For Muthoot Finance Ltd,
M/s.BOHRAS AUCTIONEERS New No.69, Old No.30, Kodambakkam Road, Mettupalayam, West Mambalam, Chennai-600 033



கடன் மீட்புத் தீர்ப்பாயம் - II, சென்னை (DRT-II)
ஷாஸ்திரி பவனில் கூடுதல் அலுவலகக் கட்டிடம்,
ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

OA No.94 of 2024

பாரத ஸ்டேட் வங்கி
(அதன் உதவி பொது மேலாளர் மூலமாக)
அண்ணா நகர், சென்னை-600 040. ... மனுதாரர்

எதிர்

1. திரு. எம்.சக்திவேல்
2. திருமதி. எஸ்.பரமேஸ்வரி ... எதிர் மனுதாரர்கள்

பெறுநர்:

D1 - திரு. எம்.சக்திவேல்
எம்.முத்தையாவின் மகன்
4/9, செங்குட்டுவன் தெரு,
பொன்னி நகர், காரம்பாக்கம்,
போரூர், சென்னை - 600 116.

D2 - திருமதி. எஸ்.பரமேஸ்வரி
எம்.சக்திவேலின் மனைவி
பொன்னி நகர், காரம்பாக்கம்,
போரூர், சென்னை - 600 116.

மேற்குறிப்பிட்ட மனுதாரர் 26.04.2022 அன்று உங்கள் மீது O.A.No.94 of 2024 என்ற மேலே குறிப்பிட்ட முதன்மை வழக்கை, கடன் தொகையான ரூ.56,04,862/- (ஐம்பத்தியாறு லட்சத்தி நான்காயிரத்து எண்ணூத்தி அறுபத்தி இரண்டு மட்டும்) உள்ள தொகையை மனு நாள் முதல் வசூல் நிறைவுறும் தேதி வரையில் எதிர்கால வட்டியுடன் சேர்த்து ஒப்பந்தப்படி மீட்டெடுக்க மற்றும் இதர நிவாரணங்கள் கோரி கடன் மீட்புத் தீர்ப்பாயம் - II ல் (DRT-II) தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கின் அடுத்த விசாரணை நாளான 27.08.2024 அன்று DRT-II, சென்னை முன் தாங்கள் இருவரும் ஆஜர் ஆக இந்த மாற்று சேவை அறிவிப்பு (Substituted Service) வெளியிடப்படுகிறது.

மேலும் இந்த மாற்று சேவை அறிவிப்பானது, 20.05.2024 DRT-II, சென்னை உத்தரவின்படி திரு. எம்.சக்திவேல் மற்றும் திருமதி. எஸ்.பரமேஸ்வரி ஆகிய உங்களுக்கு வெளியிடப்படுகிறது.

எனவே, 27.08.2024 அன்று காலை 11 மணிக்கு, மேலே குறிப்பிட்ட நீதிமன்றத்தில் தாங்கள் இருவரும் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜர் ஆக இந்த மாற்று சேவை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்படி தாவாவானது சட்டப்படி DRT-II, சென்னையால் எதிர்வர் இல்லாமல் தீர்க்கப்படும் என்பதை அறியவும்.

ஆகஸ்ட் 2, சென்னை

ஒப்பம்
வி. ஆதிவராகன் (506/1989)
கே. சாந்தி மீனாட்சி (855/1994)
க. சுமதி (570/2002)
மனுதாரர் வழக்குரைஞர்கள்



அபிராமபுரம் கிளை
எண்.90, சர் C.P.ராமசாமி ஐயர் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018 Ph : 044 - 2499 1511
Mobile: 94443 40973 E-mail: cb0973@canarabank.com

Canara Bank கனரா வங்கி

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கி, அபிராமபுரம் கிளையில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து கனரா வங்கி, மண்டல அலுவலகம், சென்னை தெற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான 13.08.2024 அன்றுள்ளபடி ₹ 33,21,915.71 மற்றும் வட்டி, இதர செலவுகளை கனரா வங்கின், அபிராமபுரம் கிளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 31.08.2024 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: 1.M/s.நந்தா கேட்டரிங் சர்வீசஸ், 26/8, 6வது தெரு, ரங்கராஜபுரம், சைதாப்பேட்டை, சென்னை-600015, 2.Mrs.V.நந்தகுமாரி, W/o.ஆரோக்கியதாஸ் (M/s.நந்தா கேட்டரிங் சர்வீசஸ் உரிமையாளர்), 26/8, 6வது தெரு, ரங்கராஜபுரம், சைதாப்பேட்டை, சென்னை-600015

சொத்து விவரம்

தென் சென்னை பதிவு மாவட்டம், அடையாறு சார் பதிவு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட TS எண்.1/14, பட்டா படி புதிய TS எண்.1/79, மாம்பலம்-கிண்டி தாலுகா, சென்னை மாவட்டம், ஃப்ளாட் எண்.G2, தரைத்தளம், எண்.26/8, ரங்கராஜபுரம், 6வது தெரு, வெங்கடபுரம், சைதாப்பேட்டை, சென்னை-600015 என்றும் முகவரியில் 720 சதுர அடி ஃப்ளாட், அதனுடன் மொத்தமுள்ள 1535 சதுர அடி (ஆவணப்படி 1592 சதுர அடி) நிலத்தில் 275 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 6வது தெரு, தெற்கு: Mr.லட்சுமணன்-க்கு சொந்தமான வீடு, கிழக்கு: Mr.செல்வரங்கராஜா-க்கு சொந்தமான மீதமுள்ள நிலம், மேற்கு: சந்திபால் வீடு.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 36,00,000/-; டெபாசிட்தொகை: ₹ 3,60,000/-; ஏல உயர்வுத்தொகை: ₹ 1,00,000/-

டெபாசிட் தொகையினை 23.08.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம் 22.08.2024 காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

EMD amount of 10% of the Reserve Price is to be deposited by way of Demand draft in favour of Authorized Officer, Canara Bank, Abhiramapuram Branch OR shall be deposited through RTGS/NEFT/Fund Transfer to credit of account of
Canara Bank, Abhiramapuram Branch, Chennai A/c No.209272434 IFSC Code: CNRB0000973

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் M/s Antares System Ltd., Bangalore, Mr.M.குணசீலன், Contact No-97319 67722, email id: gunaseelan.m@antaressystems.com-ல் தொடர்பு கொள்ளவும் முதன்மை மேலாளர், கனரா வங்கி, அபிராமபுரம் கிளை, (Ph. 044-2499 1511 / Mob: 94443 40973) அல்லது கோட்ட மேலாளர், மண்டல அலுவலகம், சென்னை தெற்கு (Mob: 94983 46053 / 90252 43215) ஏதாவது வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://www.bankeauctionwizard.com

தேதி : 13.08.2024; இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி


# இளைஞரின் வங்கிக் கணக்கில் ரூ.2.50 கோடி

## போலீஸார் விசாரணை

**நெய்வேலி, ஆக.13:** கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே, காவல் நிலைய ரௌடிகள் பட்டியலில் இடம் பெற்ற இளைஞரின் வங்கிக் கணக்கில் ரூ.2.50 கோடி செலுத்தப்பட்டது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



அசோக்குமார்

பண்ருட்டி வட்டம், பேர்பெரியான்குப்பத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் அசோக்குமார் (25).

இவர் மீது முத்தாண்டிக்குப்பம் உள்ளிட்ட காவல் நிலையங்களில் 10-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவரது பெயர் காவல் நிலைய ரௌடிகள் பட்டியலில் உள்ளது.

முத்தாண்டிக்குப்பத்தில் உள்ள தேசிய வங்கியில் அசோக்குமார் சேமிப்புக் கணக்கு வைத்துள்ளார். இவரது வங்கிக் கணக்கில் கடந்த ஜூலை மாதம் ரூ.10 லட்சம், ரூ.20 லட்சம் என பல்வேறு தவணைகளாக மொத்தம் ரூ.2.50 கோடி செலுத்தப்பட்டதாம். இதுதொடர்பாக, வங்கி அதிகாரிகள் அசோக்குமாரிடம் கேட்டதற்கு, பங்குச் சந்தை முதலீடுகள் மூலம் பணம் வந்ததாக கூறினாராம். அதிகாரிகள் வங்கி பரிவர்த்தனைகளை ஆராய்ந்தபோது, பங்குச் சந்தையில் இருந்து பணம் வரவில்லை என்பது தெரிய வந்தது.

இதுகுறித்து முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்துக்கு வங்கி அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, அசோக்குமார் தனது வங்கிக் கணக்கில் இருந்து ரூ.2 கோடியை மட்டும் இணையவழியில் நண்பர்கள் 7 பேரின் வங்கிக் கணக்குக்கு அனுப்பினாராம்.

அவர்களைப் பிடித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர். மேலும், தலைமறைவாக உள்ள அசோக்குமாரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இதுகுறித்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.ராஜாராம் கூறுகையில், ரூ.2.50 கோடி வரவு வைக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர், ஆக. 13:** மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 45,500 கன அடியாக அதிகரித்துள்ளதையடுத்து, அணையின் நீர்மட்டம் 120.41 அடியாக உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கபினி அணை, கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து உபரி நீர் காவிரியில் அதிகளவில் திறக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

திங்கள்கிழமை காலை விநாடிக்கு 26,000 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை காலை 45,500 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம் 120 அடியிலிருந்து 120.41 அடியாக உயர்ந்துள்ளது.

அணையில் இருந்து காவிரி பாசனத்துக்கு நீர் மின் நிலையங்கள் வழியாக 21,500 கன அடி நீரும், கிழக்கு – மேற்கு கால்வாய் மூலம் 500 கன அடி நீரும் திறக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் இடது கரையில் உள்ள உபரி நீர் கால்வாய் வழியாக 14,000 கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 94.12 டி.எம்.சி.யாக உள்ளது.

இந்நிலையில், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு மாலை 6 மணிக்கு 30,000 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்ததால், அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டதாக நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வங்கதேசத்தில் சிறுபான்மையினரை தாக்கியவர்களுக்கு தண்டனை

## முகமது யூனுஸ் உறுதி



தாகேஸ்வரி கோயிலை செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ்.

**டாக்கா, ஆக.13:** வங்கதேசத்தில் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தியவர்களை அரசு தண்டிக்கும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

கடந்த ஆக.5-ஆம் தேதி வங்கதேச பிரதமர் பதவியில் இருந்து ஷேக் ஹசீனா ராஜிநாமா செய்தார். அதன் பின்னர், அந்நாட்டின் 48 மாவட்டங்களில் உள்ள 278 இடங்களில் ஹிந்துக்களுக்கு எதிராக தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் நிகழ்ந்ததாக வங்கதேச தேசிய ஹிந்து மகா கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது. அங்குள்ள ஹிந்து கோயில்கள், வீடுகள், வணிக இடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியுடன் சம்பந்தப்பட்ட சில ஹிந்து தலைவர்களும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை கண்டித்து வங்கதேசத்தின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கோயிலும், முக்கிய சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்கும் தாகேஸ்வரி கோயிலுக்கு அந்நாட்டு இடைக்கால அரசின் தலைவரான முகமது யூனுஸ் செவ்வாய்க்கிழமை சென்றார்.

இதைத்தொடர்ந்து அவர் கூறுகையில், 'அனைவருக்கும் சம உரிமைகள் உள்ளன. எவரையும் முஸ்லிம், ஹிந்து அல்லது பௌத்த மதத்தைச் சேர்ந்தவராகப் பார்க்காமல் மனிதராகப் பார்க்க வேண்டும். அனைவரின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். இந்நிலையில், தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் விவகாரத்தில் ஹிந்துக்கள் பொறுமை காக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வங்கதேசத்தில் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தியவர்களை அரசு தண்டிக்கும்' என்றார்.

வங்கதேசத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள நிலையில், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் உள்ளிட்டோர் சிறுபான்மையினராக உள்ளனர்.

## குற்றவாளிகளுக்கு தண்டனை: ஹசீனா வலியுறுத்தல்



**டாக்கா/புது தில்லி, ஆக.13:** வங்கதேசத்தில் போராட்டத்தின்போதுவன்முறையில் ஈடுபட்ட குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்று அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக ஹசீனா கூறியதாக அவரின் மகன் சஜீப் வாஜேத் 'எக்ஸ்' தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு:

கடந்த ஜூலை முதல், வங்கதேசத்தில் போராட்டம் என்ற பெயரில் நடைபெற்ற வன்முறையால் பல உயிர்கள் இழக்கப்பட்டன. இந்தப் பயங்கரவாதத் தாக்குதலின் இரையாக மாணவர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர், இதழியலாளர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டோர் உயிரிழந்தனர். அவர்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வன்முறை மற்றும் கொலை சம்பவங்களில் தொடர்புள்ளவர்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# பாபா ராம்தேவ் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: உச்சநீதிமன்றம் முடித்துவைப்பு

**புது தில்லி, ஆக.13:** பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனம், அதன் இணை நிறுவனர் பாபா ராம்தேவ், அவருடைய உதவியாளர் பாலகிருஷ்ணா ஆகியோர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்து உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

அந்த நிறுவனம் சார்பில் அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை ஏற்று, இந்த உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பித்தது.

பதஞ்சலி நிறுவன தயாரிப்புகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த வேண்டும் என்பதற்காக, அலோபதி மருத்துவ முறை, கரோனா தடுப்பூசி திட்டம் ஆகியவை குறித்து தவறான விளம்பரத்தை அந்த நிறுவனம் வெளியிடுவதாக புகார்கள் எழுந்தன. இந்த விளம்பரத்தைத் தடை செய்யக் கோரி இந்திய மருத்துவச் சங்கம் (ஐஎம்ஏ) சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஹிமா கோலி, அசானுதீன் அமானுல்லா கியோர் அடங்கிய அமர்வில் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின்போது, 'எந்தவொரு மருத்துவ முறைக்கு எதிராகவும் கருத்து தெரிவிக்கக் கூடாது. மருந்துகள் குறித்த தவறான விளம்பரங்களை வெளியிடக் கூடாது' என பதஞ்சலி நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு நவம்பரில் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஆனால், உச்சநீதிமன்ற உத்தரவை மீறி பதஞ்சலி நிறுவனம் தொடர்ந்து சர்ச்சைக்குரிய விளம்பரங்களை வெளியிட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தங்கள் மீது ஏன் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்று கேள்வி எழுப்பி கடந்த பிப்ரவரி 27-ஆம் தேதி பாபா ராம்தேவ், பாலகிருஷ்ணா ஆகியோருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. அதோடு, அவர்கள் இருவரையும் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க வும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



அதைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின்படி, தவறான விளம்பரம் கொடுத்தது குறித்து மன்னிப்பு கோரி பதஞ்சலி நிறுவனம் சார்பில் நாளிதழ்களில் விளம்பரம் அளிக்கப்பட்டது. மேலும், பாபா ராம்தேவ் உச்சநீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி மன்னிப்பும் கோரினார்.

இந்த வழக்கு கடந்த மே 14-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தீர்ப்பை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இந்த நிலையில், இந்த வழக்கு உச்சநீதிமன்ற செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, வழக்கை முடித்துவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இது குறித்து பாபா ராம்தேவ் தரப்பு வழக்குரைஞர் கௌதம் தலுக்தார் கூறுகையில், 'பாபா ராம்தேவ், பாலகிருஷ்ணா மற்றும் பதஞ்சலி நிறுவனம் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உச்சநீதிமன்றம் முடித்து வைத்து செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது' என்றார்.

# இந்திய எல்லை கண்காணிப்புக்கு ரஷியாவின் ஆளில்லா விமானம் வாங்கிய பாகிஸ்தான்



சூப்பர்கேம் எஸ்350 ஆளில்லா விமானம்.

**புது தில்லி, ஆக. 13:** ரஷியாவிடமிருந்து வாங்கிய 'சூப்பர்கேம் எஸ் 350' எனும் பல்நோக்கு ஆளில்லா விமானத்தை இந்திய எல்லையில் கண்காணிப்பு பணிகளுக்கு பாகிஸ்தான் பயன்படுத்துகிறது என்று ரஷிய ஊடகமான 'ஸ்புட்னிக்' தெரிவித்துள்ளது.

முன்னதாக, இதே வகை ஆளில்லா விமானத்தின் முந்தைய ரகமான 'சூப்பர்கேம் எஸ் 250' ஆளில்லா விமானங்களை பாகிஸ்தான் படைகள் பயன்படுத்தி வந்தன. சமீபத்தில் மேம்படுத்தப்பட்டுள்ள ஆளில்லா விமான ரகம் அப்பிரிவில் சிறந்தது என நிபுணர்களின் கூற்று இந்தியாவுக்கு கவலைக்குரியதாக அமைந்துள்ளது.

ரஷிய படைகளின் முதன்மையான கண்காணிப்பு ஆளில்லா விமானமாக இருக்கும் சூப்பர் கேம் பல்வேறு சிறந்த தொழில்நுட்பச் செயல்பாடுகளைக் கொண்டது. துல்லியமான இலக்குகளுடன் இரவும் பகலும் கண்காணிப்பு பணியில் உதவ முடியும்.

வானில் ஏழு மணி நேரம் பறக்கும் திறன் கொண்ட இந்த ஆளில்லா விமானம் மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் பறக்கக்கூடியது, 240 கி.மீ. தூரம் வரை செல்லக்கூடியது மற்றும் 5,000 மீட்டர் உயரம் வரை எட்டக்கூடியது.

மின்சார மோட்டார் காரணமாக ஓசையற்ற அமைதியான செயல்பாட்டால், இதன் இயக்கத்தை கண்டறிவது எதிரி படைகளுக்கு கடும் சிக்கலாக அமையும். 100 கி.மீ. தொலைவில் இருந்தும் தடையற்ற தரவு பரிமாற்றத்தை இந்த ஆளில்லா விமானம் உறுதிப்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

# பஞ்சாப் எல்லையில் ஊடுருவிய பாகிஸ்தானியர் சுட்டுக் கொலை

**ஜலந்தர், ஆக. 13:** பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சர்வதேச எல்லை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவிய பாகிஸ்தானைச் சேர்ந்த நபர் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் (பிஎஸ்எஃப்) சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் நோக்கில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் செயல்படலாம் என்று கருதப்படுவதால் நாட்டின் எல்லையில் கண்காணிப்புப் பணியை ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இந்நிலையில் எல்லையில் ஊடுருவ முயற்சித்தவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுதொடர்பாகபிஎஸ்எஃப்செய்தித்தொடர்பாளர் கூறுகையில்,'தரன்தாரன் மாவட்டம் தால் கிராமத்தையொட்டிய சர்வதேச எல்லையில் திங்கள்கிழமை இரவு பாகிஸ்தான் பகுதியில் இருந்து ஒருவர் ஊடுருவினார். திரும்பிச் செல்லுமாறு பிஎஸ்எஃப் வீரர்கள் விடுத்த எச்சரிக்கையை மீறி அவர் தொடர்ந்து எல்லை வேலியை நோக்கி முன்னேறினார். இதையடுத்து, அவரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சுதந்திர தினத்தையொட்டி எல்லையில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எல்லையில் எவ்வித ஊடுருவலும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் பிஎஸ்எஃப் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது' என்றார்.

# தண்டவாளத்தைக் கடந்த முதலை: ரயிலில் அடிபட்டு உயிரிழப்பு

**ஷாஜஹான்பூர், ஆக. 13:** மேற்கு உத்தர பிரதேசத்தின் ரௌஸா ரயில் நிலையம் அருகே ரயிலில் அடிபட்டு முதலை உயிரிழந்தது.

இது தொடர்பாக வனத்துறை துணை அதிகாரி அஜய் சிங் ராணா கூறியதாவது:

ரௌஸா ரயில் நிலையம் அருகே ரயில் மோதி ஒரு முதலை உயிரிழந்தது. ரயில் மோதிய வேகத்தில் அந்த முதலையின் உடல் இரண்டு துண்டுகளாக துண்டிக்கப்பட்டது. அந்தப் பெண் முதலையின் நீளம் மூன்று அடியாக இருக்கலாம். அது ஒன்றரை வயதுடையது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.


மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை.
O.A.No.393 of 2020

கனரா வங்கி,
ARM கிளை, மதுரை. -மனுதாரர்

-VS-

1.M/s.மகாதேவி பைப் கார்ப்ரேஷன், 40-E-6, மேட்டு காலனி, கோம்பை-625522, தேனி மாவட்டம்.
2.M.ராஜசேகர் த/பெ.முனியாண்டி பிள்ளை 3,குலோத்துங்கன் தெரு, பி.எஸ்.மருத்துவமனை அருகில், சென்னை-600070.
3.A.செல்வம், த/பெ.ராஜமாணிக்கம், 8-9/12,சூரியகாந்தி மலர் தெரு, சம்பந்தர் ஆலங்குளம், மதுரை-625017
-பிரதிவாதிகள் 1,2 & 4

அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி மனுதாரர் வங்கி பிரதிவாதிகள் மீது Rs.85,76,078/- பின்வட்டி மற்றும் செலவு தொகையோடு வரப்பற்றுவதற்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளது. மேற்படி பிரதிவாதிகள் ஆஜராவதற்கு 02.09.2024-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் டை பிரதிவாதிகள் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர்கள் மூலமோ கடன் வசூல் தீர்ப்பாயம், கல்யாணி டவர்ஸ், 3 & 4வது மாடி, மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்,உத்தங்குடி, மதுரையில் ஆஜராகி ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்க வேண்டியது.ஆஜராக தவறும் பட்சத்தில் டை பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டு டை மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

R.ஆனந்தராஜ், வழக்கறிஞர்
எண்.11, அப்துல் கபார்கான் தெரு சின்னசொக்கிகுளம், மதுரை-625002
Cell: 98424 58593



மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை.
O.A.No.409 of 2020

கனரா வங்கி,
ARM கிளை, மதுரை. -மனுதாரர்

-VS-

1.P.பரமசிவம், உரிமையாளர், M/s.புவுரி கேசிவ் நட்ஸ், 4/594B,வருசநாடு மெயின் ரோடு, புதுராமச்சந்திரபுரம்,கண்டமனூர் அஞ்சல், தேனி மாவட்டம்.
2.P.பதினெட்டாம்படி தேவர். த/பெ.பொன்னுசாமி, 10A,ஆலந்தூர் மந்தைகளை, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.
3.P.கருப்பாயி அம்மாள், கணவர் பெயர், லேட்.பதினெட்டாம்படி தேவர், ஆலந்தூர், மூலக்கடை அஞ்சல், தேனி மாவட்டம்.
4.P.அழகேசன், த/பெ.லேட்.பதினெட்டாம்படி தேவர், 10A,ஆலந்தூர் மந்தைகளை, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.
5.P.ஜெயக்கொடி, த/பெ.லேட்.பதினெட்டாம்படி தேவர், 600,சிதம்பரம் தெரு, பாரதிபுரம் மெயின் ரோடு, குரோம்பேட்டை, சென்னை-44.
6.P.முருகப்பிரியா, த/பெ.P.பரமசிவம், 22/62, VOC தெரு, சமதர்மபுரம், தேனி மாவட்டம்.
7.M/s.சஹாரா ரெசின்ஸ், உரிமையாளர்.P.பரமசிவம், 411/2B,வருசநாடு மெயின் ரோடு, கண்டமனூர், தேனி மாவட்டம்.
8.P.இராஜா, த/பெ.லேட்.பதினெட்டாம்படி தேவர், 10A,ஆலந்தூர் மந்தைகளை, ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்.
-பிரதிவாதிகள் 1 to 7 & 9

அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி மனுதாரர் வங்கி பிரதிவாதிகள் மீது Rs.1,71,95,722.08/- பின்வட்டி மற்றும் செலவு தொகையோடு வரப்பற்றுவதற்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளது. மேற்படி பிரதிவாதிகள் ஆஜராவதற்கு 25.09.2024-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் டை பிரதிவாதிகள் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர்கள் மூலமோ கடன் வசூல் தீர்ப்பாயம், கல்யாணி டவர்ஸ், 3 & 4வது மாடி, மீனாட்சி மிஷன் மருத்துவமனை அருகில்,உத்தங்குடி, மதுரையில் ஆஜராகி ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்க வேண்டியது.ஆஜராக தவறும் பட்சத்தில் டை பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக்கப்பட்டு டை மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

R.ஆனந்தராஜ், வழக்கறிஞர்
எண்.11, அப்துல் கபார்கான் தெரு சின்னசொக்கிகுளம், மதுரை-625002
Cell: 98424 58593



**கடன் மீட்பு தீர்ப்பாயம் II, சென்னை முன்னிலையில்**
மேலு தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

TRC எண்.1574/2022 (DRC 420/2018 DRT-I சென்னை)-ன் OA எண்.198/2017 (DRT-I சென்னை)

-விஷயம்-

இந்தியன் வங்கி, சேத்துப்பட்டு கிளை ...சான்றிதழ் வைத்திருப்பவர்

-எதிரிடை-

திரு. ராஜேஷ் கண்ணன் மற்றும் பிறர் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

**விற்பனை பிரகடனத்தை அமைப்பதற்கான அறிவிப்பு**

(கடன்கள் மற்றும் நிதிசார் கடன் பாக்கி வசூலிப்புச் சட்டம், 1993, பிரிவுகள் 25-29 அத்துடன் இணைத்து வாசிக்க வேண்டிய வருமான வரிச் சட்டம் 1961 இரண்டாவது அட்டவணை - 53வது விதியை பார்க்கவும்)

1. மாண்புமிகு தலைமை அலுவலர், கடன் மீட்பு தீர்ப்பாயம் I-ன் **O.A. எண்.198/2017-ன்படி வழங்கப்பட்ட 20.12.2018 தேதியிட்ட கடன் மீட்பு சான்றிதழ் எண்.420/2018-ன்படியும்** மற்றும் **11.01.2019 தேதியிட்ட DRC எண்.420/2018-ல்** கற்றறிந்த மீட்பு அதிகாரி, கடன் மீட்பு தீர்ப்பாயம் I அவர்களால் தொடர்ந்து வழங்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பின்படியும், சான்றிதழ் கடன்தாரர்களிடமிருந்து மீட்கப்பட வேண்டிய தொகையான **ரூ.29,95,393.75 (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா எழுபத்து ஐந்து மட்டும்)** மேலதிக வட்டியுடன் மீட்க வேண்டிய செயல்பாட்டின் அறிவிப்பு.

2. நிதி அமைச்சகம், நிதி சேவைகள் துறை அறிவிக்கை எண். S.O. 4717 (E) தேதி 04.10.2022-ன் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இந்த மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம்-II சென்னைக்கு மேற்சொன்ன DRC மாற்றப்பட்டுள்ளது. மேலும் மேற்சொன்ன இந்த DRC, இத்தீர்ப்பாயத்தின் கோப்பில் **TRC எண்.1574/2022** என மாற்றப்பட்டுள்ளது.

3. சான்றிதழ் வைத்திருக்கும் வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்ட சான்றிதழ் கடன்தாரர்களின் பெயரில் உள்ள கீழ்குறிப்பிட்டுள்ள அசையா சொத்தை விற்க கீழே கையொப்பமிட்டுள்ளவர் உத்தேசித்துள்ளார்.

**சொத்துக்களின் விவரம்**

நர்மதா ஃபவுண்டேஷன்ஸ் ஒரு பகுதியாக, மனை எண்.51, பிரகாஷ் நகர், சென்னை - 600 110-ல் உள்ள 1009 சதுர அடி கட்டிட பரப்பளவு கொண்ட ஃபிளாட் எண்.G-2 மற்றும் பொது பகுதி உட்பட மற்றும் மனை எண்.51, பிரகாஷ் நகர், சென்னை - 600 110-ல் உள்ள 2400 சதுர அடி நிலப்பரப்பளவிலிருந்து 435 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்டது. ச. எண்.1222 (பகுதி) மற்றும் 1223 (பகுதி), பட்டாவின்படி வார்டு எண்.D, பிளாக் எண்.78, T.S எண்.62, 63, 64-ல் அடங்கியுள்ளது. TS எண்.63-ல் அடங்கியுள்ள மனை, மாதவரம் கிராமம், மாதவரம் தாலுகா, முன்னர் அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது, 2400 சதுர அடி பரப்பளவு கொண்டது.

எனவே **29.08.2024 அன்று முற்பகல் 11.30 மணிக்கு** விற்பனை பிரகடனத்தை வரையறுத்து அதன் விதிமுறைகளை அமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. இங்கு கூறப்பட்டுள்ள சொத்து அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் வில்லங்கங்கள், கட்டணங்கள், உரிமைகோரல்கள் அல்லது பொறுப்புகள் ஏதேனும் இருப்பின், அவற்றை கீழே கையொப்பமிட்டவரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

30 ஜூலை 2024 அன்று எனது கையொப்பத்துடன் இந்த தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டது.

(S. சோஃபின் ரோஸ்)
மீட்பு அதிகாரி.



इंडियन बैंक இந்தியன் வங்கி
इलाहाबाद அலகாபாத்

**சாலவாக்கம் கிளை**
சாலவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.
ஃபோன் : 9444987046.
மின்னஞ்சல் : salavakkam@indianbank.co.in

**கோரிக்கை அறிவிப்பு வெளியீடு**

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 24.07.2024 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.**

பெறுநர். **(1) திரு. A. கிருஷ்ணன், (கடன்தாரர்/அடமானதாரர்)**, த/பெ திரு. அரிமுத்து, எண்.38, பாரதி நகர், வீரபுரம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம். **(2) திரு. K. விஜயன், (இணை-கடன்தாரர்)**, த/பெ திரு. கிருஷ்ணன், எண்.38, பாரதி நகர், வீரபுரம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம்.

**பொருள் : இந்தியன் வங்கி, சாலவாக்கம் கிளையில் உள்ள தங்கள் மனை கடன் (டேர்ம் கடன்) கணக்கு எண்.6582368262 - சம்பந்தமாக.**

நீங்கள் பெற்ற கடனுக்காக **22.07.2024** வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.10,60,460/- (ரூபாய் பத்து லட்சத்து அறுபதாயிரத்து நானூற்று அறுபது மட்டும்)** இதில் மேலும் 23.07.2024 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

**22.07.2024** அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.10,60,460/- (ரூபாய் பத்து லட்சத்து அறுபதாயிரத்து நானூற்று அறுபது மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **23.07.2024** தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது/ஒப்புகை பெறப்படவில்லை.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.10,60,460/-** மேலும் 23.07.2024 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணைவைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

**"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".**

**அட்டவணை**

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

**அடமான சொத்து - ஐட்டம் எண்.1 :** செட்டிபுண்ணியம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். 1980 சதுர அடியிலிருந்து (மேற்கு பக்கம்) 420 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.15 மற்றும் 1980 சதுர அடியிலிருந்து (கிழக்கு பக்கம்) 780 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.16, மொத்தம் 1200 சதுர அடி பரப்பளவு கொண்டு அங்கீகார எண்.LP/DTCP எண்.399/95-ன்படி அங்கீகரிக்கப்பட்ட "ஸ்ரீ பவானி நகர்" என்னும் பெயரிட்ட தளவமைப்பில் உள்ளது. பழைய சர்வே எண்.385/1b, பட்டா எண்.6638-ன்படி துணை பிரிக்கப்பட்ட புதிய சர்வே எண்.385/42-ல் அடங்கியுள்ளது. பத்திர எண்.11426/2017-ன்படி (வாங்குபவர் - A கிருஷ்ணன், விற்பனையாளர் - கீர்த்திராம்) எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : மனை எண்கள்.3 & 4, தெற்கில் : 23 அடி அகல ரோடு, கிழக்கில் : மனை எண்.15-ன் மீதமுள்ள பகுதி (மீதமுள்ள பகுதி - 1560 சதுர அடி), மேற்கில் : T. அருண் ஸ்ரீனிவாஸ் அவர்களின் மனை 1200 சதுர அடி.

**ஐட்டம் எண்.2 :** செட்டிபுண்ணியம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். 19800 சதுர அடியிலிருந்து (மேற்கு பக்கம்) 1200 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.16, அங்கீகார எண்.LP/DTCP எண்.399/95-ன்படி அங்கீகரிக்கப்பட்ட "ஸ்ரீ பவானி நகர்" என்னும் பெயரிட்ட தளவமைப்பில் உள்ளது. பழைய சர்வே எண்.385/1b, பட்டா எண்.6637-ன்படி துணை பிரிக்கப்பட்ட புதிய சர்வே எண்.385/42-ல் அடங்கியுள்ளது. பத்திர எண்.11427/2017-ன்படி (வாங்குபவர் - A கிருஷ்ணன், விற்பனையாளர் - T அருண் ஸ்ரீனிவாஸ்) எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : மனை எண்.3, தெற்கில் : 23 அடி அகல ரோடு, கிழக்கில் : திரு. கீர்த்திராம் அவர்களின் மனை, மேற்கில் : மனை எண்.17.

**குறிப்பு :** மேற்கூறிய இரண்டு சொத்துக்களும் ஒன்றுக்கொன்று அருகருகே உள்ளது மற்றும் திரு. A. கிருஷ்ணன் அவர்களின் பெயரில் ஒரே தேதியில் இரண்டு வேறு நபர்களிடமிருந்து இரண்டு வெவ்வேறு பத்திரங்களின் மூலம் வாங்கப்பட்டது. சொத்தின் ஒருங்கிணைந்த பரப்பளவு 2400 சதுர அடி மற்றும் முழு அடமான சொத்தின் எல்லைகள் அதாவது திரு. A. கிருஷ்ணன் அவர்களின் பெயரில் உள்ள 2400 சதுர அடி சொத்தின் எல்லைகள் பின்வருமாறு - ஒருங்கிணைந்த சொத்தின் மனைப்படி எல்லைகள் - வடக்கில் : மனை எண்கள். 3 & 4, தெற்கில் : 23 அடி அகல ரோடு, கிழக்கில் : மனை எண்.15-ன் மீதமுள்ள பகுதி (மீதமுள்ள பகுதி - 1560 சதுர அடி), மேற்கில் : மனை எண்.17.

தேதி : 14.08.2024
இடம் : காஞ்சிபுரம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.



ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!



# பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்

(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)
CIN : L29130TN1961PLC004466
பதிவு அலுவலகம் : "ஹுசூர் கார்டன்ஸ்", செம்பியம், சென்னை - 600 011. தொலைபேசி: 044-25375581/0422-2221159
மின்னஞ்சல்: vidhyashankar@bimite.co.in இணையதளம்: www.bimite.co.in

**ஜூன் 30, 2024 உடன் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

(ரூ. லட்சத்தில், ஒரு பங்கிற்கான வருமானம் தவிர)

| வ. எண். | விபரங்கள் | தனியானது | | | | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 30.06.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 30.06.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2024 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | 30.06.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 30.06.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2024 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் (நிகரம்) | 5,974.61 | 6,223.31 | 6,066.15 | 24,076.79 | 5,974.61 | 6,223.31 | 6,066.15 | 23,932.79 |
| 2 | நிகர லாபம் இக்காலகட்டத்தில் வரிக்கு முன் | 415.94 | 233.28 | 400.56 | 1,090.71 | 523.69 | 295.53 | 476.09 | 1,264.67 |
| 3 | நிகர லாபம் இக்காலகட்டத்தில் வரிக்கு பின் | 296.28 | 222.53 | 288.23 | 844.27 | 404.03 | 284.78 | 363.76 | 1,018.23 |
| 4 | மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் [இக்காலத்திற்கான லாபம் (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது] | 717.56 | 500.86 | 695.31 | 1,779.30 | 825.31 | 564.26 | 770.84 | 1,954.41 |
| 5 | சமபங்கு மூலதனம் | 382.50 | 382.50 | 382.50 | 382.50 | 382.50 | 382.50 | 382.50 | 382.50 |
| 6 | ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ஒதுக்கீடு நீங்கலாக) முந்தைய நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையின்படி | - | - | - | 21,042.46 | - | - | - | 21,525.97 |
| 7 | ஒரு பங்கிற்கான வருமானம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (காலாண்டுகளுக்கு வருடாந்திரமாக்கப்படாதது) அடிப்படை | 7.75 | 5.82 | 7.54 | 22.07 | 10.56 | 7.45 | 9.51 | 26.62 |
| | இளகியது | 7.75 | 5.82 | 7.54 | 22.07 | 10.56 | 7.45 | 9.51 | 26.62 |

குறிப்பு:
மேலே காணப்படும் அட்டவணையானது **ஜூன் 30, 2024 உடன் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை** இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் சார்ந்த (SEBI) (செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல் பரிமாற்றம்) விதிமுறைகள், 2015க்கு இணங்க விதிமுறை 33ன் கீழ் சமர்ப்பிக்கப்படும் நிதிநிலை அறிக்கையின் சாராம்சம். இது தொடர்பான காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையின் முழு வடிவம் மும்பை பங்குச் சந்தையின் இணையதளத்திலும் (www.bseindia.com), நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.bimite.co.in) காணப்பெறலாம்.

இயக்குநர்கள் குழு சார்பாக
S. நாராயணன்
முழு நேர இயக்குனர்

இடம் : சென்னை
நாள் : ஆகஸ்டு 12, 2024



# பாரத ஸ்டேட் வங்கி

மையப்படுத்தப்பட்ட சில்லறை சொத்து மேலாண்மை மையம் (CRAMC)

வட்டார தலைமை அலுவலகம் : 3வது தளம், எண்.16, கல்லூரி சந்து, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006, தொலைபேசி : 044-28308384 / 28308387
Email : rwcramc.lhoche@sbi.co.in

**கேட்பு அறிவிப்பு**

பின்வரும் கடன்தாரர்கள் வங்கியிடமிருந்து பெற்ற கடன் வசதியின் அசல் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துவதில் தவறிவிட்டார்கள் மற்றும் கடன்கள் வாராக்கடனாக (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. மற்றும் அவர்கள் கடைசியாக தெரிவிக்கப்பட்ட முகவரிகளில் 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13 (2)ன்கீழ் அவர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டுள்ளன எனவே அது இந்த பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: | சொத்துக்களின் விவரங்கள் / செயல்படுத்தப்பட வேண்டிய கடனீட்டு சொத்துக்களின் முகவரி | NPA தேதி & அறிவிப்பு தேதி & நிலுவைத் தொகை |
|---|---|---|
| **RACPC சென்னை (04487)-ல் இணைக்கப்பட்ட எங்களின் PBB KK நகர் (4374) கிளையில் திரு. ராம்குமார்.S மற்றும் திருமதி. சவிதா.S ஆகியோர்கள் பெயரில் உள்ள SBI வீட்டு கால கடன் கணக்கு எண்.37624641932 மற்றும் சுரக்ஷா கணக்கு எண். 37690925232.** குடியிருப்பு முகவரி: (கடன்தாரர் / இணை கடன்தாரர்): **திரு.ராம்குமார்.S, (கடன்தாரர்),** த/பெ. திரு.சத்யநாராயணன் மற்றும் **திருமதி. சவிதா.R, (இணை கடன்தாரர்),** க/பெ. திரு. ராம்குமார்.S, இருவரின் முகவரி: எண்.72, 2000 மில்லினியம் நகர், வேப்பம்பட்டு, திருவள்ளூர் - 602 024. குடியிருப்பு முகவரி (இணை கடன்தாரர்) : எண்.3, 2வது பிரதான சாலை, ஹரிஹரந்த் நகர், கலிஞ்சூர், வேலூர் - 632 006. அலுவலக முகவரி : (கடன்தாரர்): பணியாளர் குறியீடு-2709, Senior Recruiter-US. Data சாப்ட்வேர் ரிசர்ச் கம்பெனி பிரைவேட் லிமிடெட், கஸ்தூரி டவர்ஸ், எண்.11, ஸ்மித் சாலை, சென்னை-600 002. **சொத்தின் முகவரி: (கடன்தாரர் / இணை கடன்தாரர்) :** ப்ளாட் எண்.F2, (கிழக்கு நோக்கிய), 1வது தளம், SSP ஹோம்ஸ், மனை எண்.131, கிழக்கு பாலாஜி நகர் 6வது தெரு, கொரட்டூர், அம்பத்தூர், சென்னை - 600 053. | **அசையா சொத்துக்களின் விவரங்கள் : வீட்டுக்கடன் கணக்கு எண்.37624641932 அட்டவணை A சொத்து (முழு சொத்து) : மத்திய சென்னை** பதிவு மாவட்டம், வில்லிவாக்கம் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, **கொரட்டூர் கிராமம்,** சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பழைய எண்.61, புதிய எண்.7, **கொரட்டூர் கிராமம்,** கிரேட்டர் சென்னை மாநகராட்சி -ஆல் வழங்கப்பட்ட வரைப்பட அனுமதி எண்.PPA/WDCN07/03645/2017 மற்றும் கட்டிட அனுமதி எண்.BA/WDCN07/04315/2017ன்படி **ஸ்ரீ பாலாஜி நகர்,** தற்போது **கிழக்கு பாலாஜி நகர் 6வது தெரு** என்ற முகவரியில் சர்வே **எண்.765/1A1**ன்படி **மனை எண்.131**ல் உள்ள **2400 சதுர அடி** நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : 25 சாலை, தெற்கில் : மனை எண்.108, கிழக்கில் : மனை எண்.132, மேற்கில் : மனை எண்.130 பகுதி. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 40 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 40 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 60 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 60 அடி. **மொத்தம் - 2400 சதுர அடி. அட்டவணை - B சொத்து :** மேற்குறிப்பிட்ட அட்டவணை-Aல் குறிப்பிட்டுள்ள காலி குடியிருப்பு இடத்தில் **238 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலம் மற்றும் அதன் அனைத்து உரிமைகள் மற்றும் வசதிகள் உட்பட. **அட்டவணை-C சொத்து : SSP ஹோம்ஸ்** என்ற பெயர் கொண்ட கட்டிடத்தில் **1வது தளத்தில் 530 சதுர அடி** (பொது ஏரியா உட்பட) **கிழக்கு நோக்கிய ப்ளாட் எண்.F2** மற்றும் அங்குள்ள 1 கார் பார்க்கிங். | 03.07.2024<br>அறிவிப்பு தேதி 04.07.2024<br>04.07.2024 அன்று வரை உள்ள நிலுவைத்தொகை ரூ.23,65,654/- மேலும் 05.07.2024 முதல் வட்டி மற்றும் கட்டணங்கள், இடை நிகழ் செலவுகள் உட்பட. |
| **RACPC சென்னை (04487)-ல் இணைக்கப்பட்ட எங்களின் அரும்பாக்கம் (சென்னை) (6495) கிளையில் திரு. சரவணன்.M அவர்கள் பெயரில் உள்ள SBI வீட்டு கடன் கணக்கு எண். 34196098827.** குடியிருப்பு முகவரி : (கடன்தாரர்): **திரு. சரவணன்.M,** த/பெ. திரு. மதுரை முத்து.D, எண்.8733, TNHB, அய்யப்பாக்கம், திருவள்ளூர், சென்னை - 600 077. அலுவலக முகவரி : (கடன்தாரர்) : உரிமையாளர் - சரவணா டிரான்ஸ்போர்ட், எண்.15/A, 3வது பிரதான சாலை, இன்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், திருவள்ளூர், சென்னை - 600 098. **சொத்தின் முகவரி (கடன்தாரர்) :** எண்.8749, EWS-B டைப், அம்பத்தூர் பேஸ் I & II, TNHB, அய்யப்பாக்கம், திருவள்ளூர், சென்னை - 600 077. | **அசையா சொத்துக்களின் விவரங்கள் : வீட்டுக்கடன் கணக்கு எண். 34196098827 அட்டவணை சொத்து :** வடசென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அய்யப்பாக்கம் கிராமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பத்தூர் பேஸ்-I & II, அய்யப்பாக்கம், சென்னை - 600 077 என்ற முகவரியில் சர்வே எண்.49 பகுதி-ன்படி EWS-B டைப் கொண்ட மனை எண்.8749-ல் உள்ள மனையில் **56 சதுர மீட்டர் அல்லது 603 சதுர அடி** நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள தரைதளம் மற்றும் 1வது தளத்தில் **861 சதுர அடி** பில்டப் ஏரியா (கட்டிட வரைப்பட அங்கீகாரத்தின்படி) கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்கள்.8748 & 4.00 மீட்டர் சாலை, தெற்கில் : மனை எண்கள். 8812, 8813, 8814 & 8815, கிழக்கில் : மனை எண்.8750, மேற்கில் : மனை எண்.8714. அளவுகள் : வடக்கு பகுதியில் - 14.00 மீட்டர், தெற்கு பகுதியில் - 14.00 மீட்டர், கிழக்கு பகுதியில் - 4.00 மீட்டர், மேற்கு பகுதியில் - 4.00 மீட்டர். **மொத்தம் - 56 சதுர மீட்டர் அல்லது 603 சதுர அடி** நிலம். மற்றும் கட்டிடம். | 28.06.2024<br>அறிவிப்பு தேதி 05.07.2024<br>05.07.2024 அன்று வரை உள்ள நிலுவைத்தொகை ரூ.28,64,889/- மேலும் 06.07.2024 முதல் வட்டி மற்றும் கட்டணங்கள், இடை நிகழ் செலவுகள் உட்பட. |
| **RACPC சென்னை (04487)-ல் இணைக்கப்பட்ட எங்களின் அரும்பாக்கம் (சென்னை) (6495) கிளையில் திரு. சுகுமார்.D மற்றும் திருமதி. சாந்தி.S ஆகியோர்கள் பெயரில் உள்ள SBI வீட்டு கால கடன் கணக்கு எண். 34777805250.** குடியிருப்பு முகவரி : (கடன்தாரர் & இணை கடன்தாரர்) : **திரு. சுகுமார்.D, (கடன்தாரர்),** த/பெ. திரு.துரைசாமி.S மற்றும் **திருமதி. சாந்தி.S, (இணை கடன்தாரர்),** க/பெ. திரு. சுகுமார்.D, இருவரின் முகவரி: எண்.4/471C, ராஜா சேதுபதி தெரு, P.T.M. நகர், பாடியநல்லூர், சென்னை - 600 052. குடியிருப்பு முகவரி (இணை கடன்தாரர்): எண்.113, விஜயா கார்டன், மனை எண்.227, விஜயநல்லூர், செங்குன்றம், சென்னை - 600 052. அலுவலக முகவரி (கடன்தாரர்): பணியாளர் எண்.D0146, உதவி மேலாளர், டயக்ரிடெக் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், எண்.46, ரசாக் கார்டன் சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106. **சொத்தின் முகவரி (கடன்தாரர் / இணை கடன்தாரர்):** மனை எண்.1989, EWS-A டைப், TNHB, அய்யப்பாக்கம், சென்னை - 600 077. | **அசையா சொத்துக்களின் விவரங்கள் : வீட்டுக்கால கடன் கணக்கு எண்.34777805250 : அட்டவணை சொத்து :** வடசென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அய்யப்பாக்கம் கிராமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை நகர வளர்ச்சி திட்டம், அம்பத்தூர் பேஸ்-I & II, ஸ்கீம் என்ற முகவரியில் சர்வே எண்.49 பகுதி-ன்படி EWS-A டைப் கொண்ட மனை எண்.1989-ல் உள்ள மனையில் **40 சதுர மீட்டர் நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம்.** மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடகிழக்கில் : மனை எண்.1988, தென்கிழக்கில் : மனை எண்.2000 & 1999, தென்மேற்கில் : மனை எண்.1990, வடமேற்கில் : 3.00 மீட்டர் சாலை. அளவுகள் : வடகிழக்கில் - 8.00 மீட்டர், தென்கிழக்கில் - 5.00 மீட்டர், தென்மேற்கில் - 8.00 மீட்டர், வடமேற்கில் - 5.00 மீட்டர். மொத்தம் - 40 சதுர மீட்டர். | 29.06.2024<br>அறிவிப்பு தேதி 05.07.2024<br>05.07.2024 அன்று வரை உள்ள நிலுவைத்தொகை ரூ.22,26,587/- மேலும் 06.07.2024 முதல் வட்டி மற்றும் கட்டணங்கள், இடை நிகழ் செலவுகள் உட்பட. |

மாற்று அறிவிப்பு சேவைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் (பொருந்தும் போதெல்லாம்) இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள். தவறினால் 60 நாட்கள் காலாவதியான பிறகு அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2002ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13 (4)ன் கீழ் இந்த அறிவிப்பு வெளியாகிறது.

**சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.**

தேதி : 14.08.2024
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, CRAMC, LHO, சென்னை

# சுதந்திர தினத்தை முன்னிட்டு குடியரசுத் தலைவர் இன்று உரை



**புது தில்லி, ஆக. 13:** சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதன்கிழமை (ஆக.14) உரையாற்றவுள்ளார்.

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினம், வியாழக்கிழமை (ஆக.15) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. தில்லி செங்கோட்டையில் நடைபெறும் விழாவில் பிரதமர் மோடி தேசியக் கொடியேற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றவிருக்கிறார். 'வளர்ந்த பாரதம்' என்ற கருப்பொருளில் நிகழாண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

சுதந்திர தினத்துக்கு முந்தைய நாளான புதன்கிழமை நாட்டு மக்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரையாற்றவுள்ளார். அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் சேனல்களில் இரவு 7 மணிக்கு அவரது உரை ஒலி-ஒளிப்பப்பட உள்ளது. முதலில் ஹிந்தியிலும், பின்னர் ஆங்கில மொழிபெயர்ப்பும் ஒளிபரப்பாகும். பிராந்திய தூர்தர்ஷன் சேனல்களில் இரவு 9.30 மணியளவில் பிராந்திய மொழிகளில் குடியரசுத் தலைவரின் உரை ஒளிபரப்பப்படும் என்று அவரது மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# குடியரசுத் தலைவர் மாளிகையில் 'அமிர்த உதயான்' தோட்டம் இன்று திறப்பு

**புது தில்லி, ஆக. 13:** தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் 'அமிர்த உதயான்' தோட்டத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதன்கிழமை (ஆக. 14) திறந்து வைக்க உள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் பல்வேறு அரியவகை செடி கொடிகளைக் கொண்ட 'அமிர்த உதயான்' தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தோட்டத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதன்கிழமை திறந்து வைக்க உள்ளார். இத்தோட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி வரை திறந்திருக்கும். இத்தோட்டத்தைப் பார்வையிட வருவோருக்கு துளசிச் செடியின் விதைகள் வழங்கப்படும் என்று உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவரின் துணை ஊடகச் செயலாளர் நவிகா குப்தா கூறியதாவது: 'அமிர்த உதயான்' தோட்டத்தைப் பார்வையிட வருவோருக்கு துளசி விதைகள் வழங்கப்படுவதன் மூலம் அவர்கள் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் அரிய வகை செடி கொடிகளை வளர்க்க ஊக்கமளிக்கப்படும். 'அமிர்த உதயான்' தோட்டத்தில் கற்களைக் கொண்டு அபாகஸ் கற்றல் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளை ஈர்க்கும். விளையாட்டின் மூலம் குழந்தைகள் கற்றுக்கொள்வதற்கு இது ஊக்கமளிக்கும்.

மேலும் இத்தோட்டத்தில் இசைச்சுவர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மறுசுழற்சி செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இசைக்கருவிகள் இச்சுவரில் பொருத்தப்பட்டுள்ளன. இச்சுவரானது சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இசைக்கான ஆர்வத்தையும் உருவாக்கும். 'அமிர்த உதயான்' தோட்டத்தை மாற்றுத் திறனாளிகள் சுற்றிப் பார்ப்பதற்கும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை செயலக இயக்குநர் முகேஷ்குமார் கூறுகையில் 'இங்குள்ள லாங்கார்டன் பகுதியில் ரோஜாப் பூக்கள் நறுமணத்தைப் பரப்புகின்றன. அமிர்த உதயான் தோட்டத்தில் நீரூற்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவை பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு நல்ல அனுபவத்தைக் கொடுக்கும்' என்று தெரிவித்தார்.

# இந்தியாவை வளர்ந்த நாடாக்க இளைஞர்களுக்கு அமித் ஷா அழைப்பு



குஜராத்தின் அகமதாபாத் நகரில் மூவர்ணக் கொடி யாத்திரையை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

**அகமதாபாத், ஆக. 13:** 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக்கும் நோக்கத்தில் இணைந்து பணியாற்ற இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அழைப்பு விடுத்தார்.

குஜராத்தின் அகமதாபாத் நகரில் செவ்வாய்க்கிழமை மூவர்ணக் கொடி யாத்திரையை தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

இந்த யாத்திரை மூலம் இளைஞர்கள் தேசத்தை வலுவாகக் கட்டமைப்பதில் பங்களிக்க உறுதியேற்க வேண்டும். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திர தினத்தின்போது இல்லம் தோறும் தேசியக் கொடி ஏற்றும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

இது தேசப்பற்றை வெளிக்காட்டும் நிகழ்வு மட்டுமல்ல. 2024-ஆம் ஆண்டு இந்தியாவை வளர்ந்த நாடாக்கும் நோக்கத்துக்காக நாம் அனைவரும் முக்கியமாக இளைஞர்கள் இணைந்து பணியாற்றுவதற்கு உறுதியேற்கும் நிகழ்வாகும்.

இதற்காக இளைஞர்கள் தாங்கள் எந்தத் துறையில் பணியாற்றினாலும், அந்தத் துறையில் நாட்டை முதன்மையானதாக மாற்றும் நோக்கில் செயலாற்ற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், மாநில அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## தெரியுமா சேதி...?



மஹுவா மொய்த்ரா



முதல்வர் மம்தா பானர்ஜி

முந்தைய 17-ஆவது மக்களவையை உலுக்கிய 'கேள்விக்குப் பணம்' விவகாரம் நினைவிருக்கிறதா? திரிணமூல் காங்கிரஸ் உறுப்பினர் மஹுவா மொய்த்ரா மீது அந்தப் பிரச்னையில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்தியதையும், அவரைப் பதவி நீக்கம் செய்யப் பரிந்துரைத்ததையும் அவ்வளவு எளிதில் மறந்திருக்க வழியில்லை.

அப்போது ஒழுங்கு நடவடிக்கைக் குழுத் தலைவராக இருந்தவர் பாஜக உறுப்பினர் வினோத் குமார் சோங்கர். ஜனவரி மாதம் மஹுவா மொய்த்ராவை அவர் பதவி நீக்கம் செய்தது, எதிர்க்கட்சிகளின் பரவலான கண்டனத்துக்கு உள்ளானது.

அது போகட்டும். இப்போது மஹுவா மொய்த்ரா மீண்டும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகி இருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கைக் குழுவில் இருந்த 15 உறுப்பினர்கள் என்னவானார்கள் என்று தெரியுமா? மொய்த்ராவே இந்தத் தகவலைக் கசியவிடுகிறார்.

அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தவர்களில் நான்கு பேருக்குத்தான் மக்களவைத் தேர்தலில் மீண்டும் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. சோங்கர் உள்ளிட்ட மூன்று பாஜக உறுப்பினர்கள் தேர்தலில் தோல்வியைத் தழுவினர். எதிர்க்கட்சி உறுப்பினரும் தோல்வியைத் தழுவினார்.

'அடுத்த மக்களவையில் உன்னை ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினராக்குவேன்' என்று ஜனவரி மாதம் மஹுவா மொய்த்ராவுக்கு ஆறுதல் அளித்த திரிணமூல் காங்கிரஸ் தலைவியும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜியின் வார்த்தை பலித்துவிடும் போலிருக்கிறதே...

முந்தைய அவையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானவர் இன்றைய அவையில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினர்... நன்றாகத்தான் இருக்கிறது. அரசியலில் இதெல்லாம் இயல்புதானே!

–மீசை முனுசாமி

# கேரளத்தில் நீடிக்கும் கனமழை: மக்களுக்கு எச்சரிக்கை

**திருவனந்தபுரம், ஆக. 13:** கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை கனமழை கொட்டித் தீர்த்தது.

மக்கள் இரவு நேரங்களில் மலைப் பாதைகளில் பயணிக்க வேண்டாம் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பத்தனம்திட்டா, இடுக்கி, திருவனந்தபுரம், கொல்லம் ஆகிய மாவட்டங்களில் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் செவ்வாய்க்கிழமை கனமழை பெய்தது.

எர்ணாகுளம், திருச்சூர் ஆகிய மாவட்டங்களில் புதன்கிழமையும், இடுக்கியில் வியாழக்கிழமையும் அதிக கனமழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் தொலைதூர பகுதிகளில் அதீத கனமழை பெய்யக் கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் மலைப் பாதைகள் வழியாக பயணிப்பதை தவிர்க்க வேண்டும்; ஆறுகளில் இறங்க வேண்டாம் என்று மக்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளில் கடல் நீர் ஊடுருவக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே, கடலோர பகுதிகளில் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கேரள மாநிலம், வயநாட்டில் தொடர் கனமழையால் கடந்த ஜூலை 30-ஆம் தேதி பெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதில் 400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செப்.9-இல் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்

**புது தில்லி, ஆக. 13:** சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சிலின் 54-ஆவது கூட்டம், தில்லியில் செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் மாநில நிதியமைச்சர்களை உள்ளடக்கிய இக்கவுன்சில், ஜிஎஸ்டி தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் உயர் அமைப்பாகும்.




ஜிஎஸ்டி கவுன்சிலின் 53-ஆவது கூட்டம் கடந்த ஜூன் 22-ஆம் தேதி நடந்த நிலையில், அடுத்த கூட்டம் செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக எக்ஸ் வலைதளத்தில் ஜிஎஸ்டி கவுன்சில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் கூட்டத்தில் ஜிஎஸ்டி வரி விகித சீரமைப்பு, வரி விகிதங்களின் எண்ணிக்கையை குறைத்தல், ஜிஎஸ்டி-யின்கீழ் உற்பத்தி பொருளைவிட மூலப் பொருளுக்கு வரி அதிகமிருக்கும் நிலையை அகற்றுதல் உள்ளிட்டவை குறித்த விவாதங்கள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜிஎஸ்டி வரி விகித சீரமைப்பு தொடர்பாக பிகார் துணை முதல்வர் சுமந்த் செளதரி தலைமையிலான அமைச்சர்கள் குழு பணியாற்றி வருகிறது. இப்பணிகளின் நிலவரம் மற்றும் நிலுவையில் உள்ள நடவடிக்கைகள் குறித்து அடுத்த கூட்டத்தில் அமைச்சர்கள் குழு விளக்கமளிக்கும் என்று கடந்த கூட்டத்தின்போது நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். மேலும், வரி விகித சீரமைப்பு குறித்து அடுத்த கூட்டத்தில் விவாதம் தொடங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கடந்த 2017, ஜூலை 1-ஆம் தேதி ஜிஎஸ்டி வரி அமல்படுத்தப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இதுவரை இல்லாத அதிகபட்சமாக ரூ.2.10 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. கடந்த 2023, ஏப்ரல் மாதத்தில் ரூ.1.87 லட்சம் கோடியும், கடந்த ஜூலை மாதம் ரூ.1.82 லட்சம் கோடியும் வசூலானது. இவை முறையே இரண்டாவது, மூன்றாவது அதிகபட்ச வசூலாகும்.


TATA

**டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வணிகப் பூங்கா, கணபத்ராவ் காடம் மார்க், லோயர் பரேல், மும்பை-400013.
கிளை அலுவலகம்: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டன்னியல் சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600024.

**அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு**

**(கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழ்)**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கீழ்க்காணும் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர் மற்றும் / அல்லது அன்னாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் / சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தாரர்(கள்) மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்., (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** மற்றும் "திரும்பப் பெறப்பட மாட்டாது" **எனும் முறையில் 30.08.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், விற்பனையில் எந்த ஒத்தி வைப்பும் / இடைநிறுத்தமும் இல்லாத நிலையில் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து / சொத்து E-ஏலத்தின் மூலம் மேற்குறிப்பிட்டபடி 30.08.2024 அன்று பிற்பகல் 2 மணிக்கு விற்பனை செய்யப்படும். E-ஏலத்தில் கலந்து கொள்வதற்குரிய டேவணித்தொகைக்கான கேட்பு வரைவோலை (D.D) அடங்கிய மூடி முத்திரையிட்ட உறையை **29.08.2024 அன்று மாலை 5.00 மணிக்குள்** TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். கிளை முகவரி: **டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,** 1ஆவது தளம், சென்டன்னியல் சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024.

**"உள்ளது உள்ள இடத்தில்"** எனும் முறையில் பின்வரும் கடனீட்டுச் சொத்தின் / அசையாச் சொத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்க விவரங்களுக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளன.

| வ. எண். | கடன் கணக்கு எண் | கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / சட்ட வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரிதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பு நாள்படி தொகை | குறைந்தபட்ச விலை | டேவணித் தொகை (EMD) | சுவாதீன வகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 10022896 & TCHHF0404 0001000677 43 | திரு. வெங்கடேசன் K திருமதி. V லக்ஷ்மி | ஒப்பந்த எண் 10022896-இன்படி நீங்கள் செலுத்தவேண்டி நிலுவைத்தொகை **ரூ.8726428/-** (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நானூற்று இருபத்தெட்டு மட்டும்) மற்றும் ஒப்பந்த எண் **TCHHF0404000100067743-** இன்படி நீங்கள் செலுத்தவேண்டி நிலுவைத்தொகை **ரூ.1546253/-**(ரூபாய் பதினைந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) **மற்றும் 16.06.2022** | **ரூ.90,00,000/-** (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) | **ரூ.9,00,000/-** (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) | நேரடி சுவாதீனம் |

**அசையாச் சொத்தின் விவரம்:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய தரைத்தளம். மேல்கட்டுமானத்தின் பரப்பளவு 1180 சதுர அடி மற்றும் கார் நிறுத்துமிடம் மற்றும் பிரிபடாப்பங்கு 865 சதுர அடி உட்பட நிலத்தின் பரப்பளவான 1732.75 சதுர அடியில் அடங்கியது. இத்துடன் வழி சேர்த்து. சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலியூர் கிராமம், மனை எண் 8 பாகம், பழைய கதவு எண் 16, புதிய கதவு எண் 168, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600624. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** டயனமிக் அபார்ட்மெண்ட்ஸ், **தெற்கு:** S. லோகநாதன் அவர்களின் சொத்து, **கிழக்கு:** கதவு எண் 168/1- இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு லடீஃப் பாய் அவர்களின் சொத்து, **மேற்கு:** கதவு எண் 167-இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு முருகேசா அவர்களின் சொத்து. **அளவு:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 49 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 47 அடி 3 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 22 அடி 6 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 20 அடி 1 அங்குலம். இது கோடம்பாக்கம் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

**குறிப்பு:** சொத்துக்களின் E-ஏலமானது http://bankauctions.in/ எனும் இணையதளத்தின் மூலம் 30.08.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்குப் பிறகு...

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: ...

15. மேலும் அணுக வேண்டிய இணையதள இணைப்பு: https://www.tatacapital.com/property-disposal.html

இடம்: சென்னை
நாள்: 14.08.2024
ஒப்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.



**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**

**வியாசர்பாடி கிளை:** 338, மேற்கு அவென்யூ, MKB நகர் வியாசர்பாடி, சென்னை-600039 (E-mail: iob0394@iob.in)

(APPENDIX IV) **அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு** [(Rule 8(1)]

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest (Second) Act, 2002 (Act 54 of 2002)-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான **இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**-ன் கீழ் கையொப்பமிட்ட அதிகாரியான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் படி **09.11.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகையான ₹ 11,40,584.75** (ரூபாய் பதினொன்று லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று எண்பத்து நான்கு மற்றும் பைசா எழுபத்தைந்து மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்/ஜாமீன்தாரர்: O ஸ்ரீராம சர்மா,** S/o.O V சுப்பையா, 29, லிங்கேசன் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், கொடுங்கையூர், சென்னை-600118 **(இனி கடன்தாரர் என்றழைக்கப்படுவார்) என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8-ன்படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 13.08.2024 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான விவகாரங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு வரவேண்டிய கடன் தொகையான ₹ 11,40,584.75** (ரூபாய் பதினொன்று லட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று எண்பத்து நான்கு மற்றும் பைசா எழுபத்தைந்து மட்டும்) மற்றும் வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள். கோரிக்கை அறிவிப்பு வெளியிட்ட பிறகு செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக. **சுவாதீனம் எடுத்த தேதிபடி கடன் நிலுவைத்தொகை ₹ 12,22,806/-** (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து எண்ணூற்று ஆறு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக் கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

**கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

**அசையா சொத்து விபரம்**

**முதன்மை சொத்து:** பழைய சர்வே எண்.290/1, புதிய சர்வே எண்.290/16, TS எண்.156/2, **ப்ளாக் எண்.54, கோட்டை - தண்டையார்பேட்டை தாலுகா, சென்னை மனை எண்.29, லிங்கேசன் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், கொடுங்கையூர், சென்னை-600118 என்னும் முகவரியில் 2462 சதுர அடி நிலம் அதில் தரைத்தளத்திலுள்ள 1526 சதுர அடி 2 குடியிருப்பு யூனிட்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 30 அடி அகல ரோடு, தெற்கு: ஒதுக்கப்பட்ட நிலம், கிழக்கு: RS எண்.289/1-ல் உள்ள நிலம், மேற்கு: 30 அடி அகல ரோடு. **சொத்தின் உரிமையாளர்: ஸ்ரீராம சர்மா.**

தேதி: 13.08.2024
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி



equitas Small Finance Bank

**எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

**சுவாதீன அறிவிப்பு**

**2002 கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள், விதி 8 (1)**

**(அசையா சொத்துக்காக)**

கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமான M/s.எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் மற்றும் கம்பெனிகளின் சட்டம் 2013 பிரிவு 2 (20) மற்றும் பேங்கிங் கம்பெனி, வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (C)-ன் கீழ் பதிவு ...

**கீழ்காணும் சொத்துகளின் அட்டவணை**

...

தேதி : 12.08.2024
இடம்: திருவள்ளூர் மாவட்டம்
அதிகாரப்பூர்வ அதிகாரி
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்



SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

**பிராந்திய அலுவலகம் :**
எண்.43, தரைத் தளம், ஹமீதியா சென்டர், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006. தமிழ்நாடு, போன் : 044-28238250 / 28281109.
E-mail : ro1005@sib.co.in

**மின் ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/SAR/SN/128/2024-25
தேதி:09.08.2024

**கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) மற்றும் 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.**

...

மேற்கொண்டவற்றை **தி சௌத் இந்தியன் வங்கி லிட்.,** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் **"எங்கு உள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது" "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., சென்னை கெல்லீஸ் கிளைக்கு** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) வரவேண்டிய **08.08.2024** அன்றைய தேதி வரையான நிலுவைத் தொகை **ரூ.62,99,655.67 (ரூபாய் அறுபத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்)** மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை மேலே குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு **02.09.2024** அன்று விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் பெயர் | திரு.ராஜேஷ் டேனியல்.K |
| சொத்து விபரம் | திரு.K.ராஜேஷ் டேனியலுக்குச் சொந்தமாக திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுகா, கொரட்டூர் கிராமத்தில் சர்வே எண்.337/2பியில், டவுன் சர்வே களப் பதிவேட்டின் படி பழைய சர்வே எண்.337/2B1 பகுதி மற்றும் 337/2B2 மற்றும் டவுன் சர்வே எண்.119/2 (புதிய பட்டாவின் படி 8A/987/1425)ல் அடங்கியதும் அதன் பகுதியுமான மனை எண்.2ல் மொத்தமுள்ள 1236 சதுர அடி விஸ்தீரண நிலத்தில் பிரிபடாத பங்கான 380 சதுர அடி நிலமும், மொத்த நிலத்தில் ஸ்ரீநிவாசபுரம், இரண்டாவது மெயின் ரோடு, பழைய கதவு எண்.1A, கதவு எண்.16 உடன் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் சிறப்புக் கட்டுமானப்பகுதியில் இரண்டாம் தளத்தில் 946 சதுர அடி பரப்புடன் கூடிய குடியிருப்பு ஃப்ளாட் எண்.S1 உடன் அதற்கென ஒதுக்கப்பட்ட ஒரு கார் நிறுத்தத்துடன், பொது வசதிகள் மற்றும் பிற நடப்பிலுள்ள உரிமைகள் மற்றும் இணைப்புகளின் உபயோக உரிமை சேர்ந்த சொத்து. மேற்படி சொத்தின் மேல் விவரங்கள் வில்லிவாக்கம் சார் பதிவகத்தில் 11.07.2019 அன்று பதியப்பட்ட விற்பனை ஆவண எண்.3962/2019ல் விரிவாக உள்ளன. சொத்தின் **எல்லைகள் :** வடக்கு : நரஹரி ரஞ்சித் மனை சொத்து, கிழக்கு : முரளியின் சொத்து, தெற்கு : 12 அடி ரோடு, மேற்கு : சாய் மாலாவின் சொத்து. |
| ரிசர்வ் விலை | ரூ.46,17,000/– (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து பதினேழாயிரம் மட்டும்) |
| முன் வைப்புத் தொகை (EMD) | ரூ.4,61,700/– (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து ஓராயிரத்து எழுநூறு மட்டும்) |
| ஏலக் கேட்பு மடங்கு | ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) |
| விற்பனைத் தேதி மற்றும் நேரம் | **02.09.2024** நண்பகல் 12:00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை. (ஏலம் நிறைவு பெறும் வரையிலான 5 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புகளுடன்) |
| வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் | Nil |

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு சௌத் இந்தியன் பேங்க் லிட்–டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) இணையதள (i.e. **www.southindianbank.com**) போர்டலின் 'லிங்க்'கில் பார்வையிடவும். விபரங்களை ஆகிய www.matexnet.com & https://assets.matexauctions.com இணையதளங்களிலிருந்தும் பெறலாம்.

சொத்தினைப் பார்வையிடுதல் குறித்த விபரங்களுக்கு, மின் ஏலத்தின் நிபந்தனை விபரங்களுக்கு அல்லது ஏலக் குறிப்பீடு சமர்ப்பித்தல் விபரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலரை அல்லது தி சௌத் இந்தியன் பேங்க் லிட், சென்னை கெல்லீஸ் கிளையினை வேலை நேரங்களில் அணுகலாம் அல்லது – திரு.ஞானபிரகாஷ்.S, மொபைல் எண். 9791747678, தி சௌத் இந்தியன் பேங்க் லிட், பிராந்திய அலுவலகம், சென்னை – அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 09.08.2024
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

# அரசு ஹெலிகாப்டர்களை வி.கே.பாண்டியன் பயன்படுத்திய குற்றச்சாட்டு: விசாரணை தொடக்கம்

**புவனேசுவரம், ஆக.13:** ஒடிஸா மாநிலத்தில் முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதா தள ஆட்சியின்போது அவரது நெருங்கிய உதவியாளரான வி.கே.பாண்டியன் அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்களை அதிக அளவில் பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக அந்த மாநில அரசு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

மக்களவைத் தேர்தலுடன் ஒடிஸா பேரவைத் தேர்தலும் நடைபெற்றது. அதில் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதா தளத்தை தோற்கடித்து பாஜக ஆட்சியைக் கைப்பற்றியது. இதையடுத்து, அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக வி.கே. பாண்டியன் அறிவித்தார்.

இந்நிலையில், முதல்வராக நவீன் பட்நாயக் பதவி வகித்த போது அவரின் தனிச் செயலராக இருந்த வி.கே.பாண்டியன் மக்களின் வீடுகளுக்குச் சென்று குறை தீர்க்கும் முன்னெடுப்பின் கீழ் மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்களை அதிகளவில் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக ஒடிஸா வர்த்தக மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிபூதி பூஷன்



வி.கே.பாண்டியன்

ஜெனா கூறியதாவது:

கடந்த 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 2023-ஆம் ஆண்டு டிசம்பர் வரை பல்வேறு பகுதிகளுக்கு அரசின் ஹெலிகாப்டரில் வி.கே.பாண்டியன் சென்றதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக விரிவான விசாரணை தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் சொத்துகளை தவறாக பயன்படுத்துபவர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கடந்த 2023-ஆம் ஆண்டில் மட்டும் ஒடிஸாவின் 30 மாவட்டங்களில் உள்ள 190 பகுதிகளுக்கு வி.கே.பாண்டியன் ஹெலிகாப்டர் மூலம் சென்றதாக அந்த மாநில பாஜகவினர் குற்றஞ்சாட்டினர். ஆனால், மக்கள் குறைதீர் முகாம்களின்கீழ் பெறப்பட்ட 57,442 மனுக்களில் 43,536 மனுக்களுக்கு வி.கே.பாண்டியன் தீர்வு கண்டதாக அப்போதைய பிஜு ஜனதா தள அரசு தெரிவித்தது. இருப்பினும், இதற்கான செலவுக் கணக்குகள் குறித்து எவ்வித தரவுகளும் வெளியிடப்படவில்லை.

**450 ஹெலிகாப்டர் தளங்கள் அமைப்பு:** இதுகுறித்து ஒடிஸா சட்டத்துறை அமைச்சர் பிரித்விராஜ் ஹரிசந்திரன் கூறுகையில், 'வி.கே.பாண்டியனுக்காக ஒடிஸாவின் பல்வேறு பகுதிகளில் தலா ரூ.3 லட்சம் மதிப்புள்ள 450 ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டன. சட்ட விரோதமாக இந்த தளங்களை அமைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

இந்த விவகாரத்தில் முழு விசாரணை மேற்கொள்ளுமாறு ஒடிஸா மாநில காங்கிரஸும் வலியுறுத்தியுள்ளது.

**பிஜு ஜனதா தளம் மறுப்பு:** வி.கே.பாண்டியன் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளை பாஜக அரசு சுமத்துவதாக பிஜு ஜனதா தளத்தைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ சம்பித் ரூத்ரே கூறினார்.

மேலும், முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் சார்பாகவே வி.கே.பாண்டியன் பொதுமக்களை சந்தித்து குறைகளுக்குத் தீர்வு கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# அறிவியல் ஆராய்ச்சியில் அரசு பெருமளவில் முதலீடு

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

**போபால், ஆக. 13:** அறிவியல் ஆராய்ச்சிப் பணிகளில் மத்திய அரசு பெருமளவில் முதலீடு செய்துள்ளது என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்குத் தீர்வுகாண அரசுக்கு நிதி ஆதாரங்கள் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய பிரதேச மாநிலம், போபாலில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஐஐஎஸ்இஆர்) 11-ஆவது பட்டமளிப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது: மரபுசார் எரிபொருள் பயன்பாட்டில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதற்கு வளர்ந்த நாடுகள் தரப்பில் பெரும் நிதியுதவி உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பணம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

அதற்காக காத்திருக்காமல், பாரீஸ் ஒப்பந்தத்தின்கீழ் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை தனது சொந்த பணத்தில் நிறைவேற்றுகிறது இந்தியா.

நாட்டில் தற்போதுள்ள வரிகளைக் குறைக்க முடியாதா? என்ற மக்களின் கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டியுள்ளது. இந்தியாவின் சவால்கள் மிகக் கடுமையானவை; அவற்றை எதிர்கொள்வதற்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கும் அரசுக்கு நிதியாதாரங்கள் தேவை. இந்தியாவின் சவால்களை அறிவார்ந்த மக்கள் புரிந்துகொள்வர்.

வளரும் நாடான இந்தியா, மரபுசார் எரிபொருள் பயன்பாட்டில் இருந்து புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு தனது சொந்த பலத்தில் நகர்கிறது. வேறெங்கிருந்தும் பணம் வரும் என நாம் காத்திருக்க முடியாது. எனவே, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பில் கூடுதல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டுமென ஆராய்ச்சியாளர்களுக்கு கோரிக்கை விடுக்கிறேன்.

இந்த அரசு பேசுவதோடு நின்றுவிடாமல், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் பெருமளவில் முதலீடு செய்துள்ளது. இந்தப் பணம், வரிவிதிப்பின் மூலம் ஈட்டப்பட்டதாகும்.

மக்களுக்கு தொல்லை இல்லாமல் அரசுக்கு வருமாய் ஈட்டுவதே எனது பணி. இதை உறுதிசெய்து வருகிறேன் என்றார் நிர்மலா சீதாராமன்.

மத்திய பிரதேச முதல்வர் மோகன் யாதவ், போபால் மக்களவைத் தொகுதி எம்.பி. அலோக் சர்மா உள்ளிட்டோர் இவ்விழாவில் பங்கேற்றனர்.



மத்திய பிரதேச மாநிலம் போபாலில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஐஐஎஸ்இஆர்) 11-ஆவது பட்டமளிப்பு விழாவில் செவ்வாய்க்கிழமை பங்கேற்று உரையாற்றிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

விமான சீரமைப்பு

# இந்திய நிறுவனத்துடன் கைகோத்த போயிங்

**புது தில்லி, ஆக. 13:** இந்திய கடற்படை சேவையிலுள்ள 12 'பி-8ஐ' கடல்சார் கண்காணிப்பு விமானங்களுக்கு சீரமைப்புச் சேவைகளை உள்நாட்டில் வழங்க இந்தியாவின் 'ஏஐ இன்ஜினியரிங் சர்வீசஸ்' நிறுவனத்துடன் அமெரிக்காவின் போயிங் நிறுவனம் கைகோத்துள்ளது.

இந்த கூட்டுறவின் ஒரு பகுதியாக பி-8ஐ விமானத்தின் தரையிறங்கும் கியரை மாற்றியமைக்கும் பணி தமிழகத்தில் உள்ள 'ஐஎன்எஸ் ராஜாளி' கடற்படைத் தளத்தில் அண்மையில் நிறைவடைந்ததாக 'போயிங் இந்தியா' செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

இந்தியாவில் முதல் முறை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்தப் பணி, சிக்கலான பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் சீரமைத்தல் (எம்ஆர்ஓ) சேவைகளை மேற்கொள்வதற்கான இந்தியாவின் உள்நாட்டு திறன்களின் வளர்ச்சியை பிரதிபலிக்கிறது எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஏஐ இன்ஜினியரிங் சர்வீசஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சரத் அகர்வால் கூறுகையில், 'போயிங் நிறுவனத்துடன் இணைந்ததில் நாங்கள் பெருமை கொள்கிறோம். மேலும் இந்தியாவில் முதன்முறையாக பி-8ஐ விமானத்தின் தரையிறங்கும் கியரை வெற்றிகரமாக மாற்றியமைத்ததற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். எம்ஆர்ஓ சேவையில் பிராந்திய மையமாக மாறும் இந்தியாவின் லட்சியத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படி இதுவாகும்' என்றார்.

இந்தியப் பெருங்கடலில் இந்தியக் கடற்படையின் கடல்சார் கண்காணிப்புப் பணிகளில் ஒருங்கிணைந்த 'போயிங் பி-8ஐ' விமானமானது நீண்டதூர கடல்சார் கண்காணிப்பு மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானமாகும். இந்தியாவைத் தவிர, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, நார்வே, தென் கொரியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் இந்த விமானத்தை பயன்படுத்தி வருகின்றன.

# முல்லைப் பெரியாறு: கேரளத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்

காங்கிரஸ் கூட்டணி

**திருவனந்தபுரம், ஆக. 13:** 'முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் செல்லட்டும்; அதேநேரம், கேரளத்தின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்' என்று காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியின் தலைவர் வி.டி.சதீசன் தெரிவித்தார்.

கேரள மாநிலம், வயநாட்டில் அண்மையில் பெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இடுக்கி மாவட்டத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த விவாதங்கள் அங்கு மீண்டும் எழுந்துள்ளன.

125 ஆண்டுகள் பழைமையான இந்த அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்டப்பட வேண்டும் என்று கேரளம் வலியுறுத்தி வருகிறது. ஆனால், அணையை பராமரித்துவரும் தமிழகமோ, அணை முழு பாதுகாப்புடன் உள்ளது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது.

இந்நிலையில், திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பேரவை எதிர்க்கட்சித் தலைவர் வி.டி.சதீசன், 'முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தங்களுக்கு தண்ணீர் வேண்டுமென கேரளம் விரும்புவதாகவும், எனவே, இரு மாநில ஒப்பந்தம் குறித்து மறுபேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் இந்த விவகாரத்தை மீண்டும் எழுப்புவதாகவும் தமிழகம் கருதுகிறது.

ஆனால், ஐக்கிய ஜனநாயக முன்னணியை பொருத்தவரை, 'தமிழகத்துக்கு தண்ணீர், கேரளத்துக்கு பாதுகாப்பு' என்ற நிலைப்பாட்டையே எப்போதும் கொண்டுள்ளோம். வரும் 19-ஆம் தேதி நடைபெறும் ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டு, தற்போதைய சூழலுக்கு ஏற்ப ஒரு முடிவு எடுக்கப்படும்' என்றார்.

மக்களவையில் அண்மையில் இந்த விவகாரத்தை எழுப்பி பேசிய இடுக்கி தொகுதி காங்கிரஸ் எம்.பி. டீன் குரியகோஸ், முல்லைப் பெரியாறு அணை 'தண்ணீர் வெடிகுண்டு' போல் உள்ளது என்று குறிப்பிட்டார்.

# அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் வினய் குவாத்ரா பொறுப்பேற்பு

**வாஷிங்டன், ஆக. 13:** அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக வினய் மோகன் குவாத்ரா வாஷிங்டனில் செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார்.



வினய் மோகன் குவாத்ரா

இந்தியாவின் மிக முக்கியமான நட்பு நாடான அமெரிக்காவுடன் ஒத்துழைப்பு மேம்படுத்த நானும், எனது தூதரக அதிகாரிகள் குழுவினரும் தொடர்ந்து உழைப்போம் என்று அவர் கூறினார்.

கடந்த 2020 முதல் 2024 வரை அமெரிக்க தூதராக இருந்த தரண்ஜித் சிங் சாந்து இந்த ஆண்டு தொடக்கத்தில் ஓய்வு பெற்றார். இதையடுத்து, குவாத்ரா அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டார். 61 வயதாகும் குவாத்ரா இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் பதவியில் இருந்து கடந்த ஜூலை மாதம் ஓய்வு பெற்றார். 1988-ஆம் ஆண்டுப் பிரிவு இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான குவாத்ரா, ஐ.நா. மற்றும் இந்தியா தொடர்புடைய விவகாரங்களைக் கையாளும் வெளியுறவுத் துறையின் அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.

சீனாவில் உள்ள இந்திய தூதரகத்தின் துணை தூதர் உள்பட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். கடந்த 2015 முதல் 2017 வரை பிரதமர் அலுவலகத்தின் கூடுதல் செயலராகவும் 2017 முதல் 2020, பிப்ரவரி வரை பிரான்ஸ் தூதராகவும் 2020, மார்ச் முதல் 2022, ஏப்ரல் வரை நேபாள தூதராகவும் பதவி வகித்துள்ளார்.

# விதிமுறையாக ஜாமீன், விதிவிலக்காக சிறை: 'யுஏபிஏ' போன்ற சிறப்பு சட்டங்களுக்கும் பொருந்தும்

உச்சநீதிமன்றம்

**புது தில்லி, ஆக.13:** "ஜாமீன் என்பது விதிமுறை, சிறை என்பது விதிவிலக்கு" என்ற சட்டபூர்வ கொள்கை, சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டம் (யுஏபிஏ) போன்ற சிறப்புச் சட்டங்களின் கீழ் வரும் குற்றங்களுக்கும் பொருந்தும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிகார் மாநிலம் பாட்னாவில் தனது வீட்டை பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு வாடகைக் குவிட்டதாக, காவல் துறையில் காவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஜலாலுதீன் கான் என்பவரை தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) கைது செய்தது. அவர் மீது யுஏபிஏ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் தனக்கு ஜாமீன் அளிக்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் ஜலாலுதீன் மனு தாக்கல் செய்தார். இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபே எஸ். ஓகா, அகஸ்டின் ஜார்ஜ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.



அப்போது நீதிபதிகள் அமர்வு கூறுகையில், 'ஜாமீன் வழங்குவதில் நீதிமன்றங்களுக்கு எந்தத் தயக்கமும் இருக்கக் கூடாது. ஜாமீன் கோருபவருக்கு எதிராக தீவிர குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டாலும், சட்டப்படி அந்த நபருக்கு ஜாமீன் வழங்குவதா, வேண்டாமா என்று பரிசீலிக்க வேண்டியதே நீதிமன்றங்களின் கடமை.

ஜாமீன் வழங்கக்கூடிய வழக்குகளில், அதை வழங்க மறுப்பது அரசமைப்புச் சட்டப் பிரிவு 21-இன் (வாழ்வுரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம்) கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மீறுவதாகும்.

"ஜாமீன் என்பது விதிமுறை, சிறை என்பது விதிவிலக்கு" என்ற சட்டபூர்வ கொள்கை, யுஏபிஏ போன்ற சிறப்புச் சட்டங்களின் கீழ் வரும் குற்றங்களுக்கும் பொருந்தும்' என்று தெரிவித்தது. இதைத்தொடர்ந்து ஜலாலுதீனுக்கு ஜாமீன் வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# குஜராத்: ஆம் ஆத்மி, காங்கிரஸ் எம்எல்ஏக்களுக்கு வீட்டுக்காவல்

**நர்மதை, ஆக. 13:** குஜராத்தில் கடந்த வாரம் அடித்து கொல்லப்பட்ட இரு பழங்குடியின தொழிலாளிகளின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்க திட்டமிட்டிருந்த அதே சமூகத்தைச் சேர்ந்த ஆம் ஆத்மி, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் இருவர் வீட்டுக்காவலில் செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டனர்.

இந்தியாவின் முதல் துணை பிரதமரும் சுதந்திர போராட்ட தலைவருமான சர்தார் வல்லபபாய் படேலுக்கு நர்மதை ஆற்றங்கரையில் கெவாடியா பகுதியில் உலகிலேயே மிக உயரமாக 182 மீட்டர் உயரத்துக்கு ஒற்றுமை சிலை நிறுவப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நாட்டின் சுதந்திர போராட்டத்தில் பழங்குடியினரின் பங்களிப்பை கௌரவிக்கும் விதமாக 'பழங்குடி சுதந்திர வீரர்களுக்கான அருங்காட்சியகம்' அமைக்க மத்திய அரசு கடந்த 2019-ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது.

இந்த நிலையில், அருங்கட்சியகத்தின் கட்டுமானப் பகுதியில் திருடியதாக ஜெயேஷ் தாத்வி, சஞ்சய் தாத்வி ஆகிய இரு பழங்குடியின இளைஞர்களை அங்கு பணிபுரியும் 6 தொழிலாளர்கள் கடந்த 6-ஆம் தேதி அடித்து துன்புறுத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஜெயேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சஞ்சய், கடந்த 8-ஆம் தேதி உயிரிழந்தார். இதையடுத்து, அவர்களைத் தாக்கிய 6 பேரும் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், கெவாடியா பகுதியில் நடைபெறவிருந்த பழங்குடியின இளைஞர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஆம் ஆத்மி எம்எல்ஏ சைதர் வாசவா, காங்கிரஸ் எம்எல்ஏ ஆனந்த் படேல் ஆகிய இரு பழங்குடி சமூகத் தலைவர்கள் பங்கேற்க திட்டமிட்டிருந்தனர். ஆனால், ஒற்றுமை சிலை அருகே நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்துவதற்கு போலீஸ் அனுமதி மறுத்தது.

அதன்தொடர்ச்சியாக, நர்மதை மாவட்டத்தின் போகஜ் கிராமத்திலுள்ள இல்லத்தில் எம்எல்ஏ வாசவா வீட்டுக் காவலில் செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டார். அக்கிராமத்தைச் சேர்ந்த மேலும் 5 பேர் வீட்டுக்காவலில் உள்ளனர். எம்எல்ஏவின் ஆதரவாளர்களாக அறியப்படும் சுமார் 58 பேர் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

இதேபோன்று, அண்டை மாவட்டமான நவ்சாரியிலுள்ள வன்ஸ்டாவைச் சேர்ந்த காங்கிரஸ் எம்எல்ஏவும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

# குற்றவாளிகளுக்கு அடைக்கலம்: 'இண்டியா' கட்சிகள் மீது பாஜக குற்றச்சாட்டு

**புது தில்லி, ஆக.13:** உத்தர பிரதேசத்தில் குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு இண்டியா அணியைச் சேர்ந்த காங்கிரஸ் மற்றும் சமாஜவாதி கட்சிகள் அடைக்கலம் அளிப்பதாக பாஜக செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டியது.

உத்தர பிரதேசத்தின் அயோத்தி மற்றும் கன்னோஜ் ஆகிய பகுதிகளில் அண்மையில் பாலியல் வன்கொடுமை வழக்குகளில் சமாஜவாதி கட்சியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து பாஜக செய்தித்தொடர்பாளர் சுதன்ஷு திரிவேதி கூறியதாவது:

சமாஜவாதி கட்சி மட்டுமின்றி இண்டியா கூட்டணியைச் சேர்ந்த காங்கிரஸ் உள்ளிட்ட பிற கட்சிகளும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் தருகின்றனர்.

உத்தர பிரதேசத்தில் இரு சிறுவர்களின் (அகிலேஷ் யாதவ், ராகுல் காந்தி) பலம் அதிகரித்திருப்பதே அங்கு நிகழும் பல குற்றச் சம்பவங்களுக்கு காரணம். குற்றவாளிகளுக்கு ஆதரவளிப்பது சமாஜவாதியின் மரபணுவில் உள்ளது.

அதேபோல மேற்கு வங்கத்தில் பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கை உடனடியாக சிபிஐ-க்கு மாற்ற முதல்வர் மம்தா பானர்ஜி மறுப்பு தெரிவித்திருந்தார். இதன் மூலம், உண்மை குற்றவாளிகள் தொடர்பான ஆதாரங்கள் அழிக்கப்படுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் இந்தக் குற்றச் சம்பவங்களை ராகுல் காந்தியோ பிரியங்கா காந்தியோ கண்டிக்கவில்லை என்றார்.

பங்குப் பரிவர்த்தனை வாரிய (செபி) தலைவர் மீதான ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டு குறித்து ராகுல் காந்தி கேள்வியெழுப்பியது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய திரிவேதி, 'ராகுல் காந்தியின் பங்குகளும் நல்ல லாபத்தில்தான் உள்ளன. ஆனால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு அதிக லாபத்தை ஈட்டும் எஸ்பிஐ, எல்ஐசி உள்ளிட்ட நிறுவனங்களை காங்கிரஸ் எப்போதும் குறை கூறிவருகிறது. வெளிநாட்டு நிறுவனங்களுடன் அவ்வப்போது இணைந்துகொண்டு இதுபோன்ற குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் முன்வைப்பது வழக்கம்' என்றார்.

பெண் மருத்துவர் கொலை

# மேற்கு வங்க அரசுக்கு மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்

**புது தில்லி, ஆக.13:** மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் மாநில அரசுக்கும் காவல் துறை தலைவருக்கும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (என்ஹெச்ஆர்சி) செவ்வாய்க்கிழமை நோட்டீஸ் அனுப்பியது.

இரு வாரங்களுக்குள் இந்த விவகாரம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு என்ஹெச்ஆர்சி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து வெளியான ஊடக செய்திகளை அடிப்படையாகக் கொண்டு என்ஹெச்ஆர்சி தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து என்ஹெச்ஆர்சி வெளியிட்ட அறிக்கையில், 'உயிரிழப்புக்கு முன்பு பெண் மருத்துவர் சித்திரவதைக்கு உள்ளாகியிருப்பது உடலில் உள்ள காயங்கள் மூலம் தெரியவந்துள்ளது. அவர் பாலியல் கொலைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாக அவரின் குடும்பத்தினர் புகார் அளித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்கு வங்க அரசு தலைமைச் செயலர், காவல்துறைத் தலைவர் ஆகியோர் இரு வாரங்களுக்குள் விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த வழக்கில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், நடவடிக்கைகள், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு வழங்கிய இழப்பீடு உள்பட அனைத்து விவரங்களையும் அதில் குறிப்பிட வேண்டும்.

வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டது.

## மம்தா பதவி விலக வேண்டும்: பாஜக

மாநில அரசால் நிர்வகிக்கப்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பெண் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய தவறியதால் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பதவி விலக வேண்டும் என அந்த மாநில சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், 'இந்தக் குற்றத்தில் ஈடுபட்ட முக்கிய குற்றவாளிகள் குறித்த ஆதாரங்களை மறைக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, மம்தா பானர்ஜி பதவி விலக வலியுறுத்தி பாஜக சார்பில் புதன்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது' என்றார்.

## நோயாளிகள் தவிப்பு...



மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் கொலையைக் கண்டித்து நாடு முழுவதும் மருத்துவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழக மருத்துவமனை வளாகத்தில் சிகிச்சைக்காக பல மணி நேரம் காத்திருந்த நோயாளிகள்.

# அயோத்தி: ரூ.50 லட்சம் மதிப்பிலான 3,836 விளக்குகள் திருட்டு

**அயோத்தி, ஆக.13:** உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராம மற்றும் பக்தி பாதைகளில் நிறுவப்பட்டிருந்த ரூ.50 லட்சம் மதிப்பிலான 36 புரொஜெக்டர் விளக்குகள், 3,800 மூங்கில் விளக்குகள் ஆகியவை திருடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அயோத்தி காவல் துறையினர் செவ்வாய்க்கிழமை மேலும் கூறுகையில், 'ராம பாதையில் 6,400 மூங்கில் விளக்குகளும், பக்தி பாதையில் 96 புரொஜெக்டர் விளக்குகளும் நிறுவப்பட்டிருந்தன. கடந்த மே 9-ஆம் தேதி அந்தப் பாதைகளில் ஆய்வு மேற்கொண்டபோது சில விளக்குகள் மாயமானது தெரியவந்தது.

இதுவரை ரூ.50 லட்சம் மதிப்பிலான 36 பிரொஜெக்டர் விளக்குகள், 3,800 மூங்கில் விளக்குகள் ஆகியவற்றை அடையாளம் தெரியாத



நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து அந்த விளக்குகளை நிறுவிய நிறுவனத்தின் பிரதிநிதி, ராமஜென்மபூமி காவல் நிலையத்தில் அண்மையில் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று தெரிவித்தது.

அயோத்தி வளர்ச்சி குழுமம் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்த விளக்குகளை அமைத்துள்ளது.

விளக்குகள் திருடுபோனது மே மாதத்திலேயே தனியார் நிறுவனம் கண்டறிந்திருந்தாலும், ஆகஸ்ட் 9-ஆம் தேதிதான் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளது.

அயோத்தியில் பால ராமர் கோயிலை கடந்த ஜனவரி 22-ஆம் தேதி பிரதமர் மோடி திறந்து வைத்தார். ராமர் கோயிலுக்கு செல்லும் சாலைகளாக இந்த ராம, பக்தி பாதைகள் பயன்படுகின்றன.

# வளரும் விருட்சங்கள்: பாரீஸ் ஒலிம்பிக் தந்த பாடம்



பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் பதக்கங்கள் 1 வெள்ளி, 5 வெண்கலம் என 6. அதே ஒலிம்பிக்கில் தனிநபராக அதிக பதக்கம் வென்ற சீன நீச்சல் வீராங்கனை ஜாங் யுஃபெய்யின் பதக்கங்களும் 1 வெள்ளி, 5 வெண்கலம் என அதே 6.

சுமார் 140 கோடி பேரைக் கொண்ட இந்தியாவின் ஒட்டுமொத்த பதக்க எண்ணிக்கையும், ஏறத்தாழ அதே மக்கள் தொகை கொண்ட சீனாவை சேர்ந்த ஒரே வீராங்கனையின் பதக்க எண்ணிக்கையும் சமம்.

இரட்டை இலக்க பதக்க எண்ணிக்கை தான் பாரீஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவின் இலக்கு. அதற்காக, இந்தியர்கள் களம் கண்ட அத்தனை விளையாட்டுகளிலும், அவர்களின் தயார்நிலைக்காக மத்திய அரசு ரூ.470 கோடி வரை செலவிட்டுள்ளதாக புள்ளிவிவரம். என்றாலும், 84 நாடுகள் பதக்கம் வென்ற பட்டியலில் இந்தியாவுக்கு 71-ஆவது இடம்.

ஒலிம்பிக் என்றாலே, நம் அணியின் ஒட்டுமொத்த பதக்கத்தையும், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தனிநபர் பதக்கத்தையும் ஒப்பிட்டு பெருமூச்செறிவதே வழக்கம். ஆனால், இது வல்ல ஒப்பீடு. நமது முந்தைய செயல்பாடுகளுக்கும், தற்போதைய செயல்பாட்டுக்கும் இடையே உள்ளதை ஆராய்வதே சரியான ஒப்பீடு.

பதக்க எண்ணிக்கையில் இந்தியாவின் உச்சமாக இருக்கும் 2020 டோக்கியோ ஒலிம்பிக்குடன் ஒப்பிட்டால் இது குறைவுதான். 3 ஆண்டு உழைப்பு, மிகுந்த எதிர்பார்ப்பு, அரசு அளித்த கோடிகளிலான நிதியுதவி, வெளிநாட்டுப் பயிற்சி என்ற கணக்கில் பார்த்தாலும் இந்த 6 பதக்கங்கள் சற்றே சுணங்க வைக்கும்தான்.

இருந்தாலும், மக்கள் தொகையோடு ஒப்பிட்டு ஒரேடியாக விமர்சித்தோ, போட்டியாளர்களின் முயற்சியை கேள்வி கேட்டோ இந்த 6 பதக்கங்களை அலட்சியப்படுத்த வேண்டியதில்லை. பாரீஸ் ஒலிம்பிக் மூலம், பதக்கமும் பெற்றிருக்கிறோம். பாடமும் கற்றிருக்கிறோம்.

ஒரு ஒலிம்பிக்கில், ஒரே விளையாட்டில் முதல் முறையாக 3 பதக்கங்கள், ஒரு போட்டியாளருக்கு ஒரு ஒலிம்பிக்கிலேயே இரு பதக்கங்கள் போன்ற வரலாறு துப்பாக்கி சுடுதலில் படைக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் தடகளத்தில் அடுத்தடுத்து பதக்கம் என்ற பெருமை ஈட்டி எறிதலில் கிடைத்துள்ளது. 52 ஆண்டுகளுக்குப் பிறகு ஹாக்கியில் அடுத்தடுத்த ஒலிம்பிக்கில் பதக்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

துப்பாக்கி சுடுதல், மல்யுத்தத்தில் அறிமுக வீரர்கள் பதக்கம் வென்றுள்ளார்கள். இது தவிர, தடகளம், டேபிள் டென்னிஸ், வில்வித்தை போன்றவற்றில் இதுவரை எட்டாத சுற்றுகளுக்கு முதல் முறையாக முன்னேறி தடம் பதித்திருக்கிறார்கள்.

அதேவேளையில், ஏற்கெனவே பதக்கம் வென்ற வரலாறு இருக்கும் பாட்மின்டன், வில்வித்தை, குத்துச்சண்டையில் இந்த முறை ஏமாற்றம் தான். என்றாலும், குத்துச்சண்டை, துப்பாக்கி சுடுதல், பாட்மின்டன், பளுதூக்குதல், வில்வித்தை ஆகிய விளையாட்டுகளில் 8 பிரிவுகளில் இந்தியா 4-ஆம் இடம் பிடித்து நூலிழையில் பதக்கத்தை தவறவிட்டிருக்கிறது. எதிர்காலத்தில் அவையும் பதக்கமாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதற்காக, முன்னணி நாடுகளைப் போன்று போட்டிக்குப் போட்டி பதக்கங்களை அதிகரிக்கும் எதிர்பார்ப்பு அபத்தமானது. அந்நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் விளையாட்டுக்கும், விளையாட்டில் போட்டியாளர்களுக்கும் இருக்கும் சவால் அதிகம். அது களத்திலிருக்கும் சவால் அல்ல.

**அடிப்படையில் மாற்றம்...**

விளையாட்டு உலகில் இன்று கோலோச்சிக் கொண்டிருக்கும் நாடுகளின் வெற்றிகளைக் கண்டு வாய்பிளக்கும் நாம், அந்த வெற்றிக்கான வேர்கள் எத்தகையது என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பதக்க எண்ணிக்கையில் நம்மை பரிதவிக்க வைக்கும் நாடுகள் அடிப்படையில் இரு விஷயங்களைக் கொண்டுள்ளன. ஒன்று, அவை எவ்வாறு போட்டியாளர்களை உருவாக்குகின்றன. மற்றொன்று, அவை எத்தனை போட்டியாளர்களை உருவாக்குகின்றன.

**உருவாகும் போட்டியாளர்கள்...**

சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் குழந்தைப் பருவத்தில் இருந்தே விளையாட்டுப் போட்டியாளர்கள் உருவாகிறார்கள். தங்கள் வாழ்க்கையின் இலக்கே அதுதான் என அதை நோக்கி முன்னேறுகிறார்கள். விளையாட்டின் மூலமான வாழ்க்கையும் சரியான திசைதான் என்று அடையாளம் காட்டப்படுகிறது.

ஆனால், நம் நாட்டில் உறுதியான வேலை, அதற்கு உகந்த கல்வி என்பதையே அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிலை உள்ளது. விளையாட்டு என்பது 'எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிட்டி' பட்டியலில் இணைய, இடஒதுக்கீட்டு அடிப்படையில் வேலை பெறுவதற்காகவே விளையாட்டைக் கையிலெடுக்கும் நிலையும் இருக்கிறது. அதற்காக நம் நாட்டில் விளையாட்டை வாழ்க்கையாக எண்ணுவோரே இல்லை, என்ற அர்த்தம் இல்லை. 140 கோடி பேரில் பதக்கம் வெல்வோர் எண்ணிக்கை எப்படிக் குறைவோ, விளையாட்டை வாழ்க்கையாகக் கையிலெடுப்பவர்கள் எண்ணிக்கையும் அப்படிக் குறைவு தான்.

ஏழை நாடு இல்லை என்றாலும், பொருளாதாரத்தில் பின்தங்கியோரைக் கொண்ட நாடு நமது. எதிர்கால வாழ்க்கை, பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவை குறித்த பரிதவிப்பே இங்குள்ள பலகோடி மக்களின் அன்றாடமாக இருக்க, அதுபோன்ற நிலையிலிருந்து குறைந்த எண்ணிக்கையிலான திறமைசாலிகளாலேயே விளையாட்டில் மேலெழுந்து வர முடிகிறது.

அந்த நிலை மாற, கல்வியைப் போல விளையாட்டும் அடிப்படையாக்கப்பட வேண்டும். கேலோ இந்தியா போன்ற அது சார்ந்த முயற்சிகளை அரசு இன்னும் மேம்படுத்த வேண்டும் என்பதோடு, பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை எதிர்கால விளையாட்டு நட்சத்திரங்களாக்க அதிகளவு முன்வர வேண்டும்.

**போட்டியாளர்களின் எண்ணிக்கை...**

சர்வதேச போட்டிகளில் வில்வித்தையில் தென் கொரியா, டேபிள் டென்னிஸில் சீனா, தடகளத்தில் அமெரிக்கா, ஆப்பிரிக்க நாடுகளின் போட்டியாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டோர் ஒரே பந்தயத்துக்கு தகுதிபெற்றிருப்பார்கள். ஒரே பந்தயத்தில் ஒருவர் சளைத்தாலும் மற்றொருவர் பதக்கம் வெல்வதற்கு அது வழிவகுக்கிறது.

ஏனெனில், பல்லாண்டுகளாக பயிற்சி எடுத்தாலும், பந்தய நாளில் ஒருவர் சோபிக்க சற்று அதிருஷ்டமும் கைகொடுக்க வேண்டும். மின்னல் வேக ஓட்டப் பந்தய வீரர் உசைன் போல்ட் கூட, தோல்விக்கு விதிவிலக்கல்ல.

இந்தியாவைப் பொருத்தவரை, ஒருவர் மீது வெற்றி வெளிச்சம் பாய்ந்துவிட்டால், அவரே அந்த விளையாட்டின் தேவதூதனாக கொண்டாடப்படுகிறார். வெற்றியாளர்களை உலகம் கொண்டாடலாம். ஆனால், தோல்வி கண்டவர்களை நாடும், அரசும் அங்கீகரிக்க வேண்டும். ஈட்டி எறிதலில் இந்தியாவின் நட்சத்திரமான நீரஜ் சோப்ரா பங்கேற்ற அதே பாரீஸ் ஒலிம்பிக்கில், அவருடனேயே ஈட்டி எறிதலில் களம் கண்ட மற்றொரு இந்தியரான கிஷோர் ஜெனாவை எத்தனை பேர் கவனித்திருப்போம்?

அரசின் மனநிலையும் அதுதான். பதக்கம் வெல்வோருக்கான ஆதரவுத் திட்டம் என்பது, நட்சத்திரப் போட்டியாளர்கள், பதக்க வாய்ப்புள்ளோர்க்கானது என குறுகிய வட்டமாகிவிட்டது. அவ்வாறு ஒரு சில போட்டியாளர்கள் மீது மட்டும் கவனம் செலுத்தாமல், தகுதியுள்ள எல்லா போட்டியாளரையுமே தயார்படுத்தினால், பதக்க வாய்ப்புகள் அதிகரிக்கும்.

வெற்றிக்குப் பிறகு கொண்டாட்டமான ஆதரவு என்பதை, பெரு நிறுவனங்கள் தங்களின் விளம்பர ஆதாயத்துக்காகச் செய்யலாம். ஆனால், அரசு அவ்வாறு செயல்படலாகாது. ஒருவரின் வெற்றிக்காக பரிசு என்ற பெயரில் கொட்டிக் கொடுக்கும் நிதியை, வேறொரு போட்டியாளர் வளர்ச்சிக்கான முதலீடாக அளிக்கலாம்.

முன்பு விளம்பரங்களுக்காக மனு பாக்கருக்கு லட்சங்களில் கொடுத்த நிறுவனங்கள், தற்போது கோடிகளில் கொட்டுவதற்கு தயாராயாக இருக்கின்றன. ஆனால், ரயில்வே பணியில் 2015 முதல் இருக்கும் ஸ்வப்னில் குசேலுக்கு, தற்போது பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பிறகுதான் பதவி உயர்வு அளிக்கப்பட்டதை என்னவென்று சொல்ல?

இப்படி வெற்றிக்குப் பிறகு கொண்டாடாமல், திறமைக்கு வாய்ப்பும் ஆதரவும் வழங்கி வெற்றியாளர்களை உருவாக்கினால், இந்தியாவின் பதக்க வாய்ப்பும் உயரும். பாரீஸ் ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் கூட வெல்ல முடியாமல் போனதில் நமக்கு ஆதங்கம் அதிகமே. என்றாலும், ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதிபெறும் இந்தியர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதையும், ஒலிம்பிக் போட்டியில் இந்தியா முன்னேறி வருகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

மொத்தத்தில், விருட்சங்கள் வளர்கின்றன. வெற்றி மலர்கள் பூத்துக் குலுங்க, வேருக்கு நீருற்றுவோம், பொறுத்திருப்போம்...

– நாதன் நடராஜன்

## துளிகள்...

- பாரீஸ் ஒலிம்பிக்கில் இறுதிச் சுற்றுக்கு முன் தகுதிநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகாட் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பை, வரும் 16-ஆம் தேதிக்கு ஒத்திவைப்பதாக விளையாட்டுக்கான சர்வதேச நடுவர் மன்றம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.
- குத்துச்சண்டையில் புதிய வெளிநாட்டு பயிற்சியாளர் பொறுப்புக்கு இந்திய சம்மேளனம் விண்ணப்பங்கள் வரவேற்றுள்ளது. பாரீஸ் ஒலிம்பிக் குத்துச்சண்டையில் இந்தியாவுக்கு பதக்கம் கிடைக்காத நிலையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.
- இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கும் நிலையில், இயன் பெல்லை தங்களுக்கான பேட்டிங் பயிற்சியாளராக நியமித்திருக்கிறது இலங்கை கிரிக்கெட் வாரியம்.
- தமிழகத்தில் வியாழக்கிழமை தொடங்கும் புச்சி பாபு கிரிக்கெட் போட்டியில், மும்பை அணிக்காக ஷ்ரேயஸ் ஐயர் ஒரு ஆட்டத்தில் விளையாடவிருக்கிறார்.
- இந்தியாவுடன் வங்கதேசம் மோதும் முதல் டி20 ஆட்டம் அக்டோபர் 6-ஆம் தேதி தர்மசாலாவுக்கு பதிலாக, குவாலியரில் நடைபெறும் என பிசிசிஐ செவ்வாய்க்கிழமை தெரிவித்தது. அதேபோல், 2025 ஜனவரியில் இங்கிலாந்துடன் மோதும் முதல் டி20 ஆட்டம் 22-ஆம் தேதி சென்னைக்கு பதிலாக கொல்கத்தாவுக்கும், 2-ஆவது ஆட்டம் 25-ஆம் தேதி கொல்கத்தாவுக்கு பதிலாக சென்னைக்கும் மாற்றப்பட்டுள்ளது.

## பாபிரின், பெகுலாவுக்கு கோப்பை

NATIONAL BANK OPEN



பாபிரின்



பெகுலா

**மான்ட்ரியல், ஆக. 13:** கனடாவில் நடைபெற்ற நேஷனல் பேங்க் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் அலெக்ஸி பாபிரின், மகளிர் பிரிவில் அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா சாம்பியன் கோப்பை வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், பாபிரின் 6-2, 6-4 என்ற நேர் செட்களில், போட்டித்தரவரிசையில் 5-ஆம் இடத்திலிருந்த ரஷியாவின் ஆண்ட்ரே ரூபலேவை சாய்த்தார்.

இதன்மூலம், ஏடிபி மாஸ்டர்ஸ் போட்டியில் அவர் முதல் முறையாக வாகை சூடியிருக்கிறார்.

பாபிரின் - ரூபலேவ் இத்துடன் 3-ஆவது முறையாக சந்தித்த நிலையில், பாபிரின் 2-ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

**பெகுலா வெற்றி:** இதே போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் 3-ஆம் இடத்திலிருக்கும் அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா 6-3, 2-6, 6-1 என்ற செட்களில், அமெரிக்காவின் அமாண்டா அனிசிமோவாவை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றினார்.

அவர் தனது 3-ஆவது டபிள்யூடிஏ பட்டத்தை கைப்பற்றியிருக்கிறார். இதன் மூலம், கடந்த 24 ஆண்டுகளில் நேஷனல் பேங்க் ஓபன் போட்டியில் சாம்பியன் கோப்பையை தக்கவைத்த முதல் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன் சுவிட்ஸர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் 1999 - 2000 காலகட்டத்தில் இவ்வாறு நடப்பு சாம்பியனாக கோப்பையை தக்கவைத்திருந்தார். அனிசிமோவாவை 3-ஆவது முறையாக சந்தித்த பெகுலா, தற்போது ஹாட்ரிக் வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார்.

**இரட்டையர் பிரிவு:** ஆடவர் இரட்டையர் பிரிவில், போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ஸ்பெயினின் மார்செல் கிரனோலர்ஸ்/ஆர்ஜென்டீனாவின் ஹொராசியோ ஜெபாலோஸ் இணை 6-2, 7-6 (7/4) என்ற செட்களில், போட்டித்தரவரிசையில் 3-ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் ராஜீவ் ராம்/பிரிட்டனின் ஜோ சலிஸ்பரி கூட்டணியை வீழ்த்தி சாம்பியன் ஆகியது.

மகளிர் இரட்டையரிலும், முதலிடத்தில் இருந்த கனடாவின் கேப்ரியேலா டப்ரௌஸ்கி/நியூஸிலாந்தின் எரின் ரூட்லிஃபே 7-6 (7/2), 3-6, 10-7 என்ற செட்களில், 3-ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் கேரலின் டோல்ஹைட்/டெசைரே கிராவ்ஸிக் இணையை வென்று கோப்பையைக் கைப்பற்றியது.

## பிரமோத் பகத்துக்கு 18 மாதங்கள் தடை: பாராலிம்பிக்கில் பங்கேற்க இயலாது



**புது தில்லி, ஆக. 13:** இந்திய பாரா பாட்மின்டன் வீரர் பிரமோத் பகத், ஊக்கமருந்து பரிசோதனையில் பங்கேற்காததாகக் கூறி, விளையாட்டுக்கான சர்வதேச நடுவர் மன்றம் அவருக்கு 18 மாதங்கள் தடை விதித்தது.

இதனால், நடப்பு பாராலிம்பிக் சாம்பியனான அவர், பாரீஸ் பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது. 2025 செப்டம்பர் 1-ஆம் தேதி வரை பிரமோத் பகத் மீதான தடை நீடிக்கிறது.

இதுதொடர்பாக உலக பாட்மின்டன் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில், '2020 டோக்கியோ பாராலிம்பிக் சாம்பியன் பிரமோத் பகத், 12 மாதங்களில் 3 முறை ஊக்கமருந்து பரிசோதனைக்கு ஆஜராகவில்லை.

இதன் மூலம், சம்மேளனத்தின் ஊக்கமருந்து தடுப்பு விதிகளை அவர் மீறியுள்ளார். இதை, விளையாட்டுக்கான சர்வதேச நடுவர் மன்றத்தின் ஊக்கமருந்து தடுப்பு பிரிவும் கடந்த மார்ச் 1-ஆம் தேதி உறுதி செய்தது.

அதையடுத்து, பிரமோத் பகத்துக்கு 18 மாதங்கள் தடை விதிக்கப்பட்டது. அதற்கு எதிராக அவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டையும் கடந்த ஜூலை 29-ஆம் தேதி நடுவர் மன்றத்தின் மேல்முறையீட்டுப் பிரிவு நிராகரித்து, அவர் மீதான தடையை உறுதி செய்தது. அவருக்கான தடைக் காலம் தற்போது அமலில் உள்ளது' என்று கூறியுள்ளது.

இதுகுறித்து பிரமோத் பகத் கூறுகையில், 'இது மிகவும் கடுமையான முடிவு. ஒரு சிறிய தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏற்பட்ட தவறுக்கு தடை விதிப்பது சரியல்ல. எனினும், உத்தரவை மதிக்கிறேன். பாரீஸ் பாராலிம்பிக் போட்டிக்குத் தயாராகி வந்த எனக்கு இது மிகப் பெரிய இழப்பு.

வெவ்வேறு இடங்களில் இருந்ததால், ஊக்கமருந்து பரிசோதனையில் இரு முறை பங்கேற்க முடியாமல் போனது. ஆனால், உரிய ஆதாரங்களுடன் 3-ஆவது முறை ஆஜராகியபோது, அதை அவர்கள் ஏற்க மறுத்துவிட்டனர்' என்றார். பிரமோத் பகத் டோக்கியோ பாராலிம்பிக்கில் எஸ்எல் 3 பிரிவில் தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செஸ்: இனியன் சாம்பியன்



**ஈரோடு, ஆக. 13:** சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டரும், ஈரோட்டைச் சேர்ந்தவருமான ப.இனியன் சாம்பியன் பட்டம் வென்றார்.

லாத்வியா நாட்டின் ரீகா நகரில், 13-ஆவது ரீகா டெக்னிக்கல் யுனிவர்சிட்டி சர்வதேச செஸ் போட்டி கடந்த 5-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் பல்வேறு பிரிவுகளில் 24 நாடுகளைச் சேர்ந்த 240 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இந்தப் போட்டியில் பிளிட்ஸ் பிரிவில் பங்கேற்ற இனியன், சாம்பியன் பட்டம் வென்றார். 11 சுற்றுகளாக நடைபெற்ற இப்பிரிவில் அவர் 10 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார்.

மற்றொரு இந்தியரும், சென்னையைச் சேர்ந்தவருமான ஏ.ஆர். இளம்பரிதி 9 புள்ளிகளுடன் மூன்றாமிடம் பிடித்தார்.

## அகில இந்திய கூடைப்பந்து: வாகை சூடியது சென்னை இந்தியன் வங்கி அணி



**கோவை, ஆக.13:** பிஎஸ்ஜி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் கோவையில் நடைபெற்ற ஆடவருக்கான 58-ஆவது அகில இந்திய கூடைப் பந்து போட்டியில் சென்னை இந்தியன் வங்கி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

பிஎஸ்ஜி கோப்பைக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டி கோவை பீளமேட்டில் உள்ள பிஎஸ்ஜி டெக் உள்விளையாட்டு அரங்கத்தில் கடந்த 9 ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை 5 நாள்கள் நடைபெற்றது. இந்திய கூடைப்பந்து கூட்டமைப்பின் அனுமதி, தமிழ்நாடு கூடைப்பந்து கழக குறியீட்டு எண்ணுடன் நடைபெற்ற இப்போட்டியில் 8 அணிகள் கலந்து கொண்டன.

இதில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சென்னை இந்தியன் வங்கி அணி 71 - 66 என்ற புள்ளிக் கணக்கில் புதுதில்லி இந்திய ராணுவ அணியை வென்று கோப்பையை தட்டிச் சென்றது. அதே போல, இந்திய ரயில்வே அணி 81 - 70 என்ற புள்ளிக் கணக்கில் புதுதில்லி மத்திய செயலக அணியை வீழ்த்தி 3-ஆம் இடம் பிடித்தது.

பிஎஸ்ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி சிறப்பு விருந்தினராக பங்கேற்று பரிசுகளை வழங்கினார்.

சாம்பியனான இந்தியன் வங்கி அணிக்கு முதல் பரிசாக ரூ.1 லட்சம் மற்றும் பிஎஸ்ஜி சுழற்கோப்பை வழங்கப்பட்டது. 2-ஆம் இடம் பெற்ற இந்திய ராணுவ அணிக்கு ரூ.75 ஆயிரம் மற்றும் கோப்பையும், 3-ஆம் இடம் பெற்ற இந்திய ரயில்வே அணிக்கு ரூ.50 ஆயிரமும், நான்காமிடம் பெற்ற புதுதில்லி மத்திய செயலக அணிக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கப்பட்டது.

மேலும், சிறந்த விளையாட்டு வீரருக்கான விருது சென்னை இந்தியன் வங்கி அணி வீரர் பிரணவ் பிரின்ஸுக்கு கிடைத்தது.

அவருக்கு ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

## பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை: இந்தியா-ஆஸ்திரேலியா ஆலோசனை

**புது தில்லி, ஆக.13:** சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவது குறித்து ஆஸ்திரேலியாவுடன் இந்தியா ஆலோசனை மேற்கொண்டது.

அப்போது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபட பயங்கரவாதக் குழுக்கள் பயன்படுத்தப்படுவதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான 14-ஆவது பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை கூட்டுக்குழுக் கூட்டம் தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'அனைத்து விதமான பயங்கரவாத செயல்களுக்கும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா கண்டனம் தெரிவிக்கிறது.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இரு நாடுகளும் வலியுறுத்துகின்றன.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபட பயங்கரவாதக் குழுக்களை பயன்படுத்துவதற்கு இரு நாடுகளும் கண்டனத்தைப் பதிவு செய்தன.

நவீன தொழில்நுட்பங்கள், இணையதளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத தாக்குதல்களை கட்டுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், இந்தோ-பசிபிக் பிராந்திய பாதுகாப்பு, மனிதநேய உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணம் உள்பட பல துறைகளில் இரு நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

## தேச பக்தி!





தெலங்கானாவின் ஹைதராபாதில் உள்ள சார்மினாரில் சுதந்திரதினத்தை முன்னிட்டு மூவர்ணக் கொடி அணிவகுப்பில் செவ்வாய்க்கிழமை பங்கேற்ற பள்ளி மாணவர்கள். (அடுத்த படம்) மேற்கு வங்க மாநிலம் நாடியாவில் முகத்தில் மூவர்ணக் கொடியை வரைந்து தேச பக்தியை வெளிப்படுத்திய கல்லூரி மாணவிகள்.

# வங்கதேசம்: ஷேக் ஹசீனா மீது கொலை வழக்கு


**டாக்கா, ஆக. 13:** வங்கதேசத்தில் பிரதமர் பதவியிலிருந்து கடந்த வாரம் வெளியேற்றப்பட்ட ஷேக் ஹசீனா மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் ராஜிநாமா செய்து நாட்டைவிட்டு வெளியேறியதற்குப் பிறகு அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள முதல் குற்றச்சாட்டு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து டாக்கா நீதிமன்ற அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:



ஷேக் ஹசீனா

மாணவர் போராட்டத்தின்போது டாக்காவின் முகமதுபூர் பகுதியில் போலீஸார் கடந்த ஜூலை 19-ஆம் தேதி நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மளிகைக் கடைக்காரர் அபு சயீது உயிரிழந்தார். இது தொடர்பாக அவருக்கு நெருக்கமான ஒருவர் அளித்த புகாரின் பேரில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் ஹசீனாவுடன் சேர்த்து அவாமி லீக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலரும் முன்னாள் சாலைப் பாதுகாப்புத் துறை அமைச்சருமான உபைதுல் குவாதர், முன்னாள் உள்துறை அமைச்சர் அசாத் உஸ்மான் கான், பதவி நீக்கம் செய்யப்பட்ட காவல்துறை ஐஜி அப்துல்லா அல் மமுன், டாக்கா நகர காவல்துறை ஆணையர் ஹபிபுர் ரஹ்மான், கூடுதல் ஐசிபி ஹரூன்-அர்-ரஷிதா, கூடுதல் இணை ஆணையர் விப்லவ் குமார் ஆகிய 6 பேர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



டாக்காவில் ரயில் போக்குவரத்து செவ்வாய்க்கிழமை மீண்டும் தொடங்கியதையடுத்து பயணச் சீட்டுகளை வாங்கிய பொதுமக்கள்.

இந்த வழக்கைப் பதிவு செய்யுமாறு முகமதுபூர் காவல் நிலையத்துக்கு நீதிபதி உத்தரவிட்டார் என்று நீதிமன்ற அதிகாரிகள் கூறினர்.

கடந்த 1971-ஆம் ஆண்டில் இந்தியாவின் உதவியுடன் போரிட்டு வங்கதேசத்துக்கு பாகிஸ்தானிடமிருந்து சுதந்திரம் வாங்கித் தந்தவர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணிகளில் 30 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்பட்டுவந்தது. மாணவர்களின் எதிர்ப்பால் அந்த இடஒதுக்கீடு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் அந்த இடஒதுக்கீட்டை நிறுத்திவைத்த அரசின் உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

இதையடுத்து, இடஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோரி மாணவர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு எதிராக இடஒதுக்கீட்டுக்கு ஆதரவான மாணவர் அமைப்பினரும் களமிறங்கியதையடுத்து வன்முறை வெடித்து சுமார் 400 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து, சர்ச்சைக்குரிய இடஒதுக்கீட்டை 5 சதவீதமாக உச்சநீதிமன்றம் குறைத்தது.

இருந்தாலும், போராட்டத்தின்போது அடக்குமுறையைக் கையாண்டு நூற்றுக்கணக்கான உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருந்த பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி மாணவர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டத்தின் இடையே சமூக விரோதிகள், மத அடிப்படைவாதிகள் உள்ளிட்டோர் நடத்திய வன்முறைச் சம்பவங்களில் மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர்.


பிரதமர் ஷேக் ஹசீனா ராஜிநாமா செய்ய வலியுறுத்தி அவரின் அதிகாரபூர்வ இல்லத்தை நோக்கி மாணவர்கள் கடந்த 5-ஆம் தேதி ஊர்வலமாகச் சென்றனர். நிலைமை கைமீறிச் செல்வதை உணர்ந்த ஷேக் ஹசீனா பதவியை ராஜிநாமா செய்துவிட்டு பாதுகாப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

அதையடுத்து நிர்வாகத்தைக் கைப்பற்றிய ராணுவம், அடுத்த தேர்தல் நடத்தப்படும்வரை இடைக்கால அரசை அமைப்பதாக அறிவித்தது. இடைக்கால அரசின் தலைவராக நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் அதிபர் முகமது ஷஹாபுதீன் பொறுப்பேற்றார்.

அதையடுத்து, வங்கதேசத்தில் இயல்பு நிலையை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. போராட்டத்தின்போது வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களில் இருந்து தப்பியோடிய காவலர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பி சட்டம், ஒழுங்கைச் சீரமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளனர்.

இந்தச் சூழலில், ஷேக் ஹசீனா மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மாணவர் போராட்டத்தின்போது நூற்றுக்கணக்கானவர்கள் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளதால், அந்தச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஹசீனா மீது வழக்குகள் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிரியாவில் நிலநடுக்கம்



**டமாஸ்கஸ், ஆக. 13:** சிரியாவில் செவ்வாய்க்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நாட்டின் ஹமா நகருக்கு கிழக்கே 28 கி.மீ. தொலைவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.5 அலகுகளாகப் பதிவானதாகவும் அது 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் அதிகாரிகள் கூறினர்.

எனினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை.

கடந்த ஆண்டு பிப்ரவரி 6-இல் சிரியா மற்றும் துருக்கியில் ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் 59,000-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது.

## இஸ்ரேல் மீது ஹமாஸ் ஏவுகணை வீச்சு

**டெல் அவிவ் / காஸா சிட்டி, ஆக. 13:** இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் இரு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். இருந்தாலும், இந்தத் தாக்குதலில் யாரும் காயமடையவில்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பல மாதங்களுக்குப் பிறகு இஸ்ரேலை நோக்கி ஹமாஸ் அமைப்பு ஏவுகணைகளை வீசியுள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. காஸாவில் ஏராளமான பொதுமக்களைக் கொன்று குவித்த இஸ்ரேலின் தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்த ஏவுகணை வீச்சை நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்தது.

இது குறித்து ஹமாஸ் அமைப்பின் ராணுவப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டெல் அவிவ் மற்றும் அதன் புறநகர் பகுதிகளைக் குறிவைத்து இரண்டு 'எம்90' வகை ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினோம். யூத ஆக்கிரமிப்புவாதிகள் காஸாவில் நடத்திய படுகொலைகளுக்கும், பொதுமக்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு அலைக்கழிப்பதற்கும் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஹமாஸ் அமைப்பின் 'எம்90' ரக ஏவுகணைகள் (கோப்புப் படம்).

எனினும், ஹமாஸ் வீசிய ஏவுகணைகளில் ஒன்று டெல் அவிவ் நகரையொட்டிய கடல் பகுதியில் விழுந்ததாகவும் மற்றோர் ஏவுகணை தங்கள் நாட்டு எல்லை தாண்டியே வரவில்லை எனவும் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை வீச்சில் யாரும் காயமடையவில்லை என்றும் ராணுவம் கூறியது.

காஸா சிட்டியிலுள்ள அல்-தபாயீன் பள்ளிக் கட்டடத்தில் இஸ்ரேல் ராணுவம் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் சுமார் 100 புலம்பெயர் அகதிகள் உயிரிழந்தனர். அந்த கட்டடம் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகளின் ராணுவ தளமாகப் பயன்படுத்தப்பட்டுவந்ததாக இஸ்ரேல் கூறினாலும், பொதுமக்களின் உயிரிழப்பு அதிகமாகும் விதமாக வேண்டுமென்றே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்தத் தாக்குதலைக் கண்டித்த பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ், பெண்கள் குழந்தைகள், முதியவர்கள் உள்பட ஆயிரக்கணக்கானவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக உள்ள இந்தப் போருக்கு கண்மூடித்தனமாக ஆதரவளிப்பதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த நிலையில், காஸா படுகொலைகளுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஹமாஸ் ஏவுகணைகளை வீசியுள்ளது பதற்றத்தை அதிகரித்துள்ளது.

தங்கள் நாட்டுக்குள் நுழைந்து சுமார் 1,200 பேரை படுகொலை செய்த ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் 10 மாதங்களுக்கும் மேல் தாக்குதல் நடத்திவருகிறது.

இதில் இதுவரை 39,929 பேர் உயிரிழந்துள்ளனர்; 92,240 பேர் காயமடைந்துள்ளனர்.

## யேமன் வெள்ளத்தில் 57 பேர் உயிரிழப்பு



**ஏடன், ஆக. 13:** யேமனில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 57 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யேமனில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஹுதைதா, ஹஜ்ஜா, தைஸ், மாரிப் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஹுதைதா பகுதியில் மட்டும் 6,000 குடும்பங்களுக்கு மேல் வீடுகளை இழந்துள்ளன. அந்தப் பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது.

இந்த வெள்ளப் பெருக்கில் இதுவரை 57 பேர் உயிரிழந்தனர். சுமார் 10 ஆண்டுகளாக நடந்துவரும் உள்நாட்டுச் சண்டையால் அங்கு ஏற்கெனவே அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில் இந்த வெள்ளம் பொதுமக்களின் துயரத்தை மேலும் அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்) | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| | டாலர் 83.94 | யூரோ 91.96 | பவுண்ட் 107.64 | ரிங்கிட் 18.85 | டாலர் 63.58 |

| | |
|---|---|
| தங்கம் (24 கேரட்) 1 கிராம் | ரூ.7,020 |
| தங்கம் (22 கேரட்) 1 கிராம் | ரூ. 6,565 |
| வெள்ளி 1 கிலோ | ரூ.88,500 |
| வெள்ளி 1 கிராம் | ரூ.88.50 |
| சென்செக்ஸ் 78,956 | ▼ 693 |
| நிஃப்டி 24,139 | ▼ 208 |

## ஜூன் காலாண்டில் குறைந்தது வோடஃபோன் ஐடியா இழப்பு

**புது தில்லி, ஆக. 13:** கடந்த ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்றான வோடஃபோன் ஐடியாவின் நிகர இழப்பு ரூ.6,432.1 கோடியாகக் குறைந்துள்ளது.

இது குறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான நடப்பு 2024-25-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ.6,432.1 கோடியாக உள்ளது. முந்தைய 2023-24-ஆம் நிதியாண்டின் இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் இது குறைவாகும். அப்போது நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ.7,840 கோடியாக இருந்தது.

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான முந்தைய காலாண்டில் நிறுவனத்துக்கு ஏற்பட்ட நிகர இழப்பான ரூ.7,674.6 கோடியுடன் ஒப்பிடுகையிலும் தற்போது இழப்பு குறைந்துள்ளது.



மதிப்பீட்டுக் காலாண்டில் நிறுவனத்தின் வருவாய் 1.3 சதவீதம் குறைந்து ரூ.10,508.3 கோடியாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பங்குகள் விற்பனை அதிகரிப்பு: சென்செக்ஸ், நிஃப்டி கடும் சரிவு

### நஷ்டம் ரூ.4.53 லட்சம் கோடி

நமது நிருபர்

**மும்பை/ புது தில்லி, ஆக.13:** இந்த வாரத்தின் இரண்டாவது வர்த்தக தினமான செவ்வாய்க்கிழமையும் பங்குச்சந்தை எதிர்மறையாக முடிந்தது. இதைத் தொடர்ந்து, மும்பை பங்குச்சந்தைக் குறியீட்டு எண் சென்செக்ஸ் 693 புள்ளிகளையும், தேசிய பங்குச் சந்தைக் குறியீட்டு எண் நிஃப்டி 208 புள்ளிகளையும் இழந்து நிலைபெற்றன. இதையடுத்து, முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ.4.53 லட்சம் கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய சந்தைக் குறிப்புகள் கலவையாக இருந்தன. இதைத் தொடர்ந்து, உள்நாட்டுச் சந்தை சரிவுடன் தொடங்கியது. நேரம் செல்லச் செல்ல முன்னணி நிறுவனப் பங்குகள் அதிகம் விற்பனைக்கு வந்தததால் இரண்டாவது நாளாக சரிவு தவிர்க்க முடியாததாகிவிட்டது. குறிப்பாக, சென்செக்ஸ் பட்டியலில் அதிகத் திறன் கொண்ட ஹெச்டிஎஃப்சி வங்கி, எஸ்பிஐ, ஐடிசி, டாடா மோட்டார்ஸ், டாடா ஸ்டீல் பங்குகள் அதிகம் விற்பனையை எதிர்கொண்டன என்று பங்கு வர்த்தகத் தரகு நிறுவனங்கள் தெரிவித்தன.



**சந்தை மதிப்பு:** சந்தை மூலதன மதிப்பு ரூ.4.53 லட்சம் கோடி குறைந்து வர்த்தக முடிவில் ரூ.445.30 லட்சம் கோடியாக இருந்தது. அந்நிய நிறுவன முதலீட்டாளர்கள் திங்கள்கிழமை ரூ.4,680.51 கோடிக்கு பங்குகளை விற்றிருந்த நிலையில், உள்நாட்டு நிறுவனங்கள் ரூ.4,477.73 கோடிக்கு பங்குகளை வாங்கியிருந்தது சந்தை புள்ளிவிவரத் தகவல்கள் மூலம் தெரியவந்தது.

**சென்செக்ஸ் கடும் சரிவு:** சென்செக்ஸ் காலையில் 96.41 புள்ளிகள் குறைந்து 79,552.51-இல் தொடங்கி அதிகபட்சமாக 79,692.55 வரை மேலே சென்றது. பின்னர், 78,889.38 வரை கீழே சென்ற சென்செக்ஸ், இறுதியில் 692.89 புள்ளிகளை (0.87 சதவீதம்) இழந்து 78,956.03-இல் முடிவடைந்தது. மும்பை பங்குச் சந்தையில் மொத்தம் வர்த்தகமான 4,026 பங்குகளில் 1,266 பங்குகள் மட்டுமே ஆதாயப் பட்டியலில் இருந்தன. மாறாக 2,678 பங்குகள் வீழ்ச்சிப் பட்டியலில் இருந்தன. 84 பங்குகள் விலையில் மாற்றமின்றி நிலைபெற்றன.

**ஹெச்டிஎஃப்சி வங்கி கடும் வீழ்ச்சி:** சென்செக்ஸ் பட்டியலில் ஹெச்டிஎஃப்சி வங்கி 3.50 சதவீதம் வரை குறைந்தது. மேலும், பஜாஜ் ஃபைனான்ஸ், டாடா மோட்டார்ஸ், டாடா ஸ்டீல், எஸ்பிஐ, பவர்கிரிட் உள்பட மொத்தம் 23 பங்குகள் வீழ்ச்சிப் பட்டியலில் இருந்தன. அதே சமயம், டைட்டன், ஹெச்சிஎல் டெக், நெஸ்லே, சன்ஃபார்மா, ரிலையன்ஸ், பார்தி ஏர்டெல், எம் & எம் ஆகிய 7 பங்குகள் மட்டும் சிறிதளவு உயர்ந்து ஆதாயப் பட்டியலில் இருந்தன.

### நிஃப்டி 208 புள்ளிகள் சரிவு

தேசிய பங்குச்சந்தையில் 50 முதல் தரப் பங்குகளை உள்ளடக்கிய நிஃப்டி 24,342.35-இல் தொடங்கி அதிகபட்சமாக 24,359.95 வரை மட்டுமே மேலே சென்றது. பின்னர், 24,116.50 வரை கீழே சென்ற நிஃப்டி, இறுதியில் 208.00 புள்ளிகள் (0.85 சதவீதம்) குறைந்து 24,139.00-இல் நிறைவடைந்தது. நிஃப்டி பட்டியலில் 38 பங்குகள் வீழ்ச்சிப் பட்டியலிலும், 12 பங்குகள் ஆதாயப் பட்டியலிலும் இருந்தன.



## 14% அதிகரித்த ஆயுள் காப்பீட்டு பிரீமியம் வசூல்

**புது தில்லி, ஆக. 13:** கடந்த ஜூலை மாதத்தில் இந்தியாவில் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் புதிய பிரீமியம் வசூல் 14 சதவீதம் அதிகரித்துள்ளது. இது குறித்து ஆயுள் காப்பீட்டு கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் கடந்த ஜூலை மாதத்தில் புதிய பாலிசிக்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ.31,823 கோடி பிரீமியம் வசூலித்தன.

இது, முந்தைய 2023-ஆம் ஆண்டின் இதே மாதத்தை விட 14 சதவீதம் அதிகம். அப்போது ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் புதிய பிரீமியம் வசூல் ரூ.27,867 கோடியாக இருந்தது.



2023 ஜூலை மாதத்தில் ரூ.1,00,872 கோடியாக இருந்த ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் ஒட்டுமொத்த பிரீமியம் வசூல், நடப்பாண்டின் அதே மாதத்தில் ரூ.1,21,549 கோடியாக அதிகரித்துள்ளது.

மதிப்பீட்டு மாதத்தில் தனிநபர் காப்பீட்டாளர் மூலம் 23, 88,720 புதிய பாலிசிகள் சேர்க்கப்பட்டுள்ளன. முந்தைய 2023-ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தோடு ஒப்பிடுகையில் இது 2.73 சதவீதம் அதிகம். அப்போது தனிநபர் காப்பீட்டாளர்கள் நாட்டின் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் 23,25,235 பாலிசிகளை வாங்கியிருந்தனர்.

கடந்த மாதத்தில் நாட்டின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் (எல்ஐசி) புதிய பிரீமியம் வசூல் ரூ.18,431 கோடியாக உள்ளது. இது 2023 ஜூலை மாதத்தில் ரூ.15,387 கோடியாக இருந்தது. அந்த வகையில், புதிய பாலிசிக்களின் விற்பனை மூலம் எல்ஐசி கடந்த ஜூலையில் ஈட்டிய பிரீமியம் வருவாய் 19.78 சதவீதம் அதிகம்.

கடந்த ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நடப்பு 2023-24-ஆம் நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூ.60,224 கோடியாக இருந்த எல்ஐசி நிறுவனத்தின் புதிய பிரீமியம் வசூல், நடப்பு 2024-25-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 26 சதவீதம் அதிகரித்து ரூ.75,872 கோடியாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹீரோ மோட்டோகார்ப் நிகர லாபம் 47% உயர்வு

**புது தில்லி, ஆக. 13:** கடந்த ஜூன் 30-ஆம் தேதியுடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மிகப் பெரிய இரு சக்கர வாகன உற்பத்தி நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப்பின் நிகர லாபம் 47 சதவீதம் அதிகரித்துள்ளது.

இது குறித்து நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டில் நிறுவனத்தின் வரிக்குப் பிந்தைய லாபம் ரூ.1,032 கோடியாக உள்ளது. இது, முந்தைய 2023-24-ஆம் நிதியாண்டின் இதே காலாண்டில் ரூ.701 கோடியாக இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் வரிக்குப் பிந்தைய நிகர லாபம் தற்போது 47 சதவீதம் உயர்ந்துள்ளது.

மதிப்பீட்டுக் காலாண்டில் நிறுவனத்தின் செயல்பாட்டு வருவாய் ரூ.8,851 கோடியில் இருந்து ரூ.10,211 கோடியாக அதிகரித்துள்ளது.

2023-24-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 13.53 லட்சமாக இருந்த நிறுவன மோட்டார்சைக்கிள்கள் மற்றும்ஸ்கூட்டர்களின் விற்பனை நடப்பு நிதியாண்டின் அதே காலாண்டில் 15.35 லட்சமாக அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஞாயிறுக்கிழமைதோறும்
தினமணியுடன்...
தினமணி கதிர்
படியுங்கள்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி

புதன்கிழமை, 14 ஆகஸ்ட் 2024

உடலை வளர்க்க குடலைக் கழுவு! குடலைக் கழுவி உடலை வளர்!
காந்தலாக்ஸ்
பேதி மாத்திரைகள்
மலச்சிக்கல், நீடித்த மலச்சிக்கல், மலச்சிக்கலால் வயிற்றுவலி, வயிற்று இரைச்சல், வயிற்று உப்பிசம், அஜீரணம், புளித்த ஏப்பம், அதிக உஷ்ணம், பித்தம், வாய்வு மற்றும் கீரைப்பூச்சிகள், நாக்குப் பூச்சிகள் நச்சுப் பொருட்கள் வெளியேறி குடல் தூய்மை பெறுகிறது.
Mfrs : டாக்டர் கே.எஸ்.& சன்ஸ் கும்பகோணம்-612 001.
போன் : (0435) 242 1196, (0435) 242 0005.
எல்லா ஊர் மருந்து கடைகளிலும் கிடைக்கும்

# கோவையில் 5 நாடுகளின் போர் விமானங்கள் சாகசம்!

**கோவை, ஆக. 13:** கோவை அருகே சூலூர் விமானப் படை தளத்தில் நடைபெற்ற 5 நாடுகளின் போர் விமானங்களின் சாகசம் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது.

கோவை மாவட்டம், சூலூர் விமானப் படை தளத்தில் 'தரங் சக்தி 2024' என்ற பெயரில் இந்திய விமானப் படையோடு ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விமானப் படையினரும் இணைந்து போர்ப் பயிற்சியினை மேற்கொண்டனர். கடந்த 6-ஆம் தேதி தொடங்கிய இந்தப் பயிற்சியில் 5 நாடுகளைச் சேர்ந்த 130-க்கும் மேற்பட்ட விமானப் படை வீரர்கள், அதிகாரிகள் அடங்கிய குழுவினர் பங்கேற்றனர். இந்தப் பயிற்சி புதன்கிழமை (ஆக.14) நிறைவடைகிறது.

இந்நிலையில், விமான சாகச நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் யூரோ பைட்டர் டைஃபூன் ரக போர் விமானங்கள், ஏ-330 வாயேஜர் ஏர் டு ஏர் எரிபொருள் நிரப்பிகள், ஏ-400 ராணுவ போக்குவரத்து விமானங்கள் மற்றும் இந்தியாவின் தேஜஸ், சுகோய், மிக் ஆகிய போர் விமானங்கள் கலந்து கொண்டன.

இதில் இந்திய விமானப் படையில் பயன்படுத்தப்படும் சாரங் ரக 5 ஹெலிகாப்டர்கள் வானில் பறந்து சென்று சாகசத்தில் ஈடுபட்டன. குறிப்பாக அன்பின் அடையாளமான இதய வடிவில் புகையை கக்கியபடி விமானங்கள் பறந்தன. பின்னர் துருவ் ரக ஹெலிகாப்டரும், தொடர்ந்து இலகு ரக தாக்குதலில் ஈடுபடும் ஹெலிகாப்டரும் பல்வேறு சாகசங்களில் ஈடுபடுத்தப்பட்டன.

பின்னர் இந்திய மற்றும் ஐரோப்பிய தயாரிப்பான போர் விமானங்கள் பல்வேறு சாகசங்களில் ஈடுபட்டன. இந்திய தயாரிப்பான தேஜஸ் போர் விமானம் வானில் அதிக உயரத்தில் பறந்தது. பின்னர் வானில் டைவ் அடித்தபடி சாகசங்களில் ஈடுபட்டது அனைவரையும் கவர்ந்தது.

அதைத் தொடர்ந்து, ஐரோப்பிய நாட்டு தயாரிப்பான யூரோ பைட்டர் டைஃபூன் ரக போர் விமானம் வானில் பறந்து சாகசத்தில் ஈடுபட்டது. இறுதியாக இந்திய விமானப் படையில் உள்ள தேஜஸ், சுகோய் உள்ளிட்ட ரகங்களை சேர்ந்த 5 போர் விமானங்கள் வானில் அதிக உயரத்தில் பறந்து சாகசத்தில் ஈடுபட்டன. அதேபோல, இந்திய விமானப் படையினரின் அணிவகுப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, இந்திய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.செளதரி, ஜெர்மன் நாட்டின் விமானப் படை தலைமைத் தளபதி இங்கோ கெர்ஹார்ட்ஸ், பிரான்ஸ் நாட்டு தலைமைத் தளபதி பிரான்சிஸ்டீபன் மில்லே, ஸ்பெயின் நாட்டு தலைமைத் தளபதி பிரான்சிஸ்கோ பிரகோ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ராணுவ தளவாடங்களுக்கான கண்காட்சியை தொடங்கி வைத்துப் பார்வையிட்ட ஆளுநர் ஆர்.என்.ரவி.

**அந்தமானில் கண்காணிப்பு பலப்படுத்தப்படும்- தலைமைத் தளபதி:** பின்னர் இந்திய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.செளதரி கூறியதாவது:

இதுபோன்ற பயிற்சி ஆண்டுதோறும் நடத்தப்படும். அந்தமான் நிகோபார் தீவுகளில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், அங்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் சர்வதேச நாடுகளின் ராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதையும், உலக அளவில் இந்தியாவின் முன்னேறி வரும் பாதுகாப்புத் திறன்களை முன்னிலைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த சர்வதேச கூட்டு விமானப் படை பயிற்சி நடைபெற்றது என்றார்.



விமான சாகச நிகழ்ச்சியில் பங்கேற்ற சாரங் 5 ரக ஹெலிகாப்டர்கள்.

**தளவாடப் பொருள்கள் கண்காட்சி:** இதற்கிடையே விமானப் படை தளவாடப் பொருள்களின் 3 நாள் கண்காட்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இந்தக் கண்காட்சியில் 70 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள், இந்திய விமானப் படையில் பயன்படுத்தப்படும் அதிநவீன போர் விமானங்களான தேஜஸ், சுகோய் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் டயர்கள், விமான என்ஜின்கள், ஆளில்லா உளவு விமானங்கள், சோலார் மூலம் இயங்கும் உளவு விமானம், தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா குட்டி ரக விமானம், 5-ஆம் தலைமுறை போர் விமானம், தேஜஸ் மாக் 2 ரக மாதிரி, நிர்பய் ஏவுகணை, ஆகாஷ் ஏவுகணை, அஸ்திரா ஏவுகணை ஆகியவற்றின் மாதிரிகள், தீயை அணைக்கும் ட்ரோன்கள் உள்பட பல்வேறு தளவாடப் பொருள்களும் இடம்பெற்றுள்ளன.

இது தவிர ஐரோப்பிய நாடுகளின் தயாரிப்புகளான யூரோ பைட்டர் டைஃபூன் ரக போர் விமானங்களின் மாதிரிகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றை ஆளுநர் ஆர்.என்.ரவி மற்றும் இந்திய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.செளதரி மற்றும் பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் நாட்டின் தலைமைத் தளபதிகள் மற்றும் அந்நாடுகளின் உயர் அதிகாரிகள், விமானப் படை அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இந்தக் கண்காட்சி வியாழக்கிழமை வரை நடைபெறுகிறது. இதில் ஆகஸ்ட் 15-ஆம் தேதி பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் குறிப்பிட்ட அளவிலான பொதுமக்கள் பங்கேற்க அனுமதி அளிக்கப்படும்.

# கொள்ளிடம் ஆற்றில் கதவணை கோரி கடையடைப்புப் போராட்டம்

**சீர்காழி, ஆக. 13:** சீர்காழி அருகே கொள்ளிடம் ஆற்றில் கதவணை அமைக்க வலியுறுத்தி, கொள்ளிடத்தில் செவ்வாய்க்கிழமை கடையடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

கொள்ளிடம் ஆற்றில் மாதிரவேளூர் - கருப்பூர் இடையே கதவணையும், அளக்குடி - திருக்கழிப்பாலை கிராமத்துக்கு இடையே மற்றொரு கதவணையும் கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் வழிந்தோடும் அணை அமைக்க வேண்டும் என கடைமடைப் பகுதி விவசாயிகள் மற்றும் கடைமடைப் பகுதி கதவணை ஒருங்கிணைப்புக் குழுவினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். நிகழாண்டு மேட்டூரிலிருந்து ஒன்றரை லட்சம் கன அடி உபரி நீர் கடலில் கலந்தது. இதனால் மீண்டும் கதவணை கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.



கொள்ளிடம் ஆற்றில் கதவணை அமைக்க வலியுறுத்தி, கொள்ளிடத்தில் செவ்வாய்க்கிழமை அடைக்கப்பட்டிருந்த கடைகள்.

இந்த நிலையில், கொள்ளிடம் கதவணை முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஜெகசண்முகம் வேண்டுகோளுக்கு இணங்க, கதவணை அமைக்க வலியுறுத்தி, கொள்ளிடம், தைக்கால், மாங்கனாம்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300-க்கும் மேற்பட்ட கடைகள் காலை 11 மணி வரை அடைக்கப்பட்டிருந்தன.

கொள்ளிடம் ஆற்றில் அளக்குடி மற்றும் மாதிரவேளூர் பகுதிகளில் கதவணை, வழிந்தோடும் அணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, சிதம்பரம் வர்த்தக சங்கம் மற்றும் புவனகிரி, கொள்ளிடம், புத்தூர் ஆகிய பகுதி வியாபாரிகளை ஒருங்கிணைத்து அடையாள கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது என்று ஜெகசண்முகம் தெரிவித்தார்.

நினையாத போதில்லை!



மருத்துவமாமணி
தாரா நடராசன்
தோற்றம்: 15.7.1932 மறைவு: 14.8.2020
நாளும் தாங்கிய தாயே!
நினைந்துருகும்
ஒளவை கண்ணன், அருள், பரதன்

Eva Stalin® IAS Academy
HIRING FOR IAS/TNPSC EXAMINATION COACHING DIVISION
GROW WITH US
We're Looking passionate individuals who are eager to join a team that's shaping and empowering the next generation
ACADEMIC CO-ORDINATOR
➢ IAS ➢ TNPSC
ELIGIBILITY CRITERIA
1. Minimum 3 years teaching experience in reputed institutes
2. Candidate must have appeared in IAS/TNPSC Mains examinations/Interview
WALK IN INTERVIEW ON 16,17,19 AUGUST 2024
CONTACT US
+91 8678969915
+91 9940332851
12/24, MUTHURANGAN MUTHALI ST, WEST TAMBARAM, NEXT TO DEEPAM HOSPITAL, CHENNAI -600045

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# 13 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஆக.13:** தமிழகத்தில் புதன்கிழமை (ஆக.14) 13 மாவட்டங்களில் கன மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலையொட்டிய தமிழகப் பகுதியில் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் புதன்கிழமை (ஆக.14) ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேலும், கன்னியாகுமரி, தென்காசி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், நீலகிரி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மாவட்டங்கள், திருநெல்வேலி மற்றும் கோவை மாவட்டங்களின் மலைப்பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஆக. 15 முதல் ஆக.20 வரை மாநிலத்தில் பரவலாக ஆங்காங்கே மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானமுதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மிமீ): பழனி, கொடைக்கானல் படகு குழாம் (திண்டுக்கல்), காட்பாடி (வேலூர்) தலா 70, தேக்கடி (தேனி), பாலக்கோடு (தருமபுரி), வேடசந்தூர் (திண்டுக்கல்), திற்பரப்பு (கன்னியாகுமரி), கோவில்பட்டி (தூத்துக்குடி), ஆம்பூர் (திருப்பத்தூர்), சென்னிமலை (ஈரோடு) தலா 60, விரிஞ்சிபுரம் (வேலூர்), சோத்துப்பாறை (தேனி), வடபுதுப்பட்டு (திருப்பத்தூர்), ஆனைப்பாளையம் (கன்னியாகுமரி) தலா 50,

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தமிழக கடலோரப்பகுதியில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை (ஆக.14-17) வரை மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப்பகுதி மற்றும் குமரிக்கடல் பகுதியில் சூறாவளிக்காற்று மணிக்கு 55 கி. மீ. வேகத்தில் வீசக்கூடும்.

மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என சென்னை வானிலை மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.




refex

ரீஃபெக்ஸ் ரினீவபிள்ஸ் & இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் லிமிடெட்
(முன்பு சன்எடிசன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
**CIN:** L40100TN1994PLC028263
**பதிவு அலுவலகம்:** 2வது தளம், எண்: 313, ரீஃபெக்ஸ் டவர்ஸ், ஸ்டெர்லிங் ரோடு, நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600034.
**தொ.பே எண்:** +91-44-3504 0050, **வலைதளம்:** www.refexrenewables.com, **மின்னஞ்சல்:** cs@refexrenewables.com

**ரீஃபெக்ஸ் ரினீவபிள்ஸ் & இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் லிமிடெட் - ன் 30-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ('AGM') குறித்த தகவல்**

நிறுவனங்கள் சட்டம், 2013 (**"சட்டம்"**) மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுடன் மற்றும் 2023 செப்டம்பர் 25 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/2023, 2022 டிசம்பர் 28 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 10/2022, 2022 மே 05 தேதியிட்ட, பொது சுற்றறிக்கை எண்.02/2022, 2021 டிசம்பர் 08 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 19/2021, 2021 டிசம்பர் 14 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 21/2021, 2021 ஜனவரி 13, தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 02/2021 மற்றும் 2020 மே 05 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020, 2020 ஏப்ரல் 08 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 14/2020 மற்றும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 17/2020 மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பிற சுற்றறிக்கைகள் (**"MCA சுற்றறிக்கைகள்"** என கூட்டாக குறிப்பிடப்படுகின்ற) மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை (**"SEBI"**) வாரியத்தின் 2023 அக்டோபர் 07 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 மற்றும் தேதியிட்ட 2023 ஜனவரி 05 தேதியிட்ட SEBI/ HO/CFD/PoD2/P/CIR/2023/4, 2022 மே 13 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62, 2021 ஜனவரி 15 தேதியிட்ட, சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் 2020 மே 12 தேதியிட்ட சுற்றறிக்கை எண் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 (இனிமேல் கூட்டாக **"SEBI சுற்றறிக்கைகள்"** என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றின் வாசகங்களுக்கு இணங்க 30-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ('AGM'), நடைபெறுவது குறித்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, **ரீஃபெக்ஸ் ரினீவபிள்ஸ் & இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் லிமிடெட் - ன் 30-வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் (AGM) 2024 செப்டம்பர் 27 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் (IST)**, வீடியோ கான்ஃபரன்சிங் / பிற ஆடியோ - விஷுவல் வழிமுறை (**'VC/OAVM'**) மூலம் நடைபெறும்.

சுற்றறிக்கைகளின்படி இணக்கமாக, நிறுவனம் / RTA உடன் அல்லது தொடர்புடைய டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு (இயற்பொருள் வடிவிலோ அல்லது இயற்பொருள் அல்லாத வடிவிலோ பங்குகளை வைத்திருப்பவர்கள்) **நிதியாண்டு 2023-24-க்கான ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து, 30-வது AGM-க்கான அறிவிப்பானது, மின்னணுவியல் முறையில் மட்டும்** அனுப்பப்படும். நிதியாண்டு-24-க்கான ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து, 30-வது AGM-க்கான அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.refexrenewables.com), BSE இந்தியா லிமிடெட் (www.bseindia.com) என்ற பங்குச் சந்தையின் இணையதளத்திலும் மற்றும் www.evoting.nsdl.com என்ற NSDL - ன் வலைதளத்திலும் (தொலைதூர மின் வாக்களிப்பு வசதி / மின்வாக்களிப்பு வசதியை வழங்குகின்ற முகமை) கிடைக்கப்பெறும்.

தேசிய பத்திர பாதுகாப்பு நிறுவனம் (**'NSDL'**) வழங்கிய VC/OAVM வசதி மூலம் 30வது AGM-இல் பங்கேற்பதற்கு நிறுவனம் உறுப்பினர்களுக்கு வசதியை ஏற்பாடு செய்துள்ளது. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்கள் மீதும் மற்றும் AGM நிகழ்வின்போதும் மின் வாக்களிப்பு வசதியை நிறுவனம், NSDL வழியாக, தனது அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கும். தொலைதூர மின்-வாக்களிப்பு / AGM நிகழ்வில் மின் வாக்களிப்பு வழியாக, வாக்குகளை வழங்குவதற்கான விரிவான செயல்முறை விவரம் AGM அறிவிப்பில் வழங்கப்படும்.

VC/OAVM வழியாக AGM-ல் பங்கேற்கின்ற உறுப்பினர்களின் வருகைப்பதிவு சட்டத்தின் பிரிவு 103-ன் கீழ், குறைந்தபட்ச பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை அறியும் நோக்கத்திற்காக கணக்கிடப்படும்.

நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான GNSA இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட்-க்கு info@gnsaindia.com அல்லது நிறுவனத்திற்கு cs@refexrenewables.com அல்லது NSDL-க்கு evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்புவதன் மூலம் 30-வது AGM - ன் அறிவிப்பையும் FY24 - க்கான ஆண்டறிக்கையையும் உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் / அல்லது VC/OAVM வழியாக AGM - ல் கலந்து கொள்ளலாம்.

30வது AGM-ன் அறிவிப்பையும் மற்றும் நிதியாண்டு 24-ன் ஆண்டு அறிக்கையையும் பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி தங்களது மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யுமாறு / புதுப்பிக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அறிவுறுத்தல்கள்:**
(a) இயற்பொருள் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், படிவம் **ISR-1**-ல் தங்களது மின்னஞ்சல் முகவரியை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான (**'RTA'**) **GNSA இன்ஃபோடெக் பிரைவேட் லிமிடெட்**-ன் info@gnsaindia.com / sta@gnsaindia.com என்ற வலைதளத்தில் பதிவுசெய்யலாம் / புதுப்பிக்கலாம். 2021 நவம்பர் 3 தேதியிட்ட, SEBI சுற்றறிக்கை எண். SEBI/HO/MIRSD/MIRSD_RTAMB/P/CIR/2021 /655 மற்றும் 2023 மார்ச் 16 தேதியிட்ட SEBI/HO/MIRSD/MIRSD-PoD-1/P/CIR/2023/37 என்பதன் கீழ் தேவைப்படுகின்ற விவரங்களை சமர்ப்பிக்குமாறு கடிதங்களையும் நிறுவனம் அனுப்பியிருக்கிறது. விவரங்களை புதுப்பித்தலுக்கான வழிமுறைகள், நிறுவனத்தின் வலைதளமான www.refexrenewables.com என்பதிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
(b) டீமேட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், அவர்களது குறிப்பிட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர் (DP) - ஐ தொடர்பு கொள்வதன் வழியாக அவர்களது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யலாம் / வங்கி கணக்கு விவரங்களை புதுப்பித்துக்கொள்ளலாம்.

MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கைகளுக்கு இணக்கமாக நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களது நலனுக்காகவும் மற்றும் தகவலளிப்பிற்காகவும் இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

**ரீஃபெக்ஸ் ரினீவபிள்ஸ் & இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் லிமிடெட் -க்காக**
**(முன்பு சன்எடிசன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் என அழைக்கப்பட்டது)**
**கையொப்பம்**
**வினய் அகர்வால்**
**நிறுவன செயலாளர் & இணக்கநிலை அதிகாரி**
**(ACS - 39099)**

**இடம்: சென்னை**
**தேதி: ஆகஸ்ட் 13, 2024**

**DINAMANI,** Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by **R.K. Jhunjhunwala** on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: **K.Vaidiyanathan** Chennai, Vol. 91, No. 226
**COPYRIGHT:** Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.